# சாத்தனார்

சொர்ணம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள்

— 1972 —

பேராசிரியர் :

அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.

விலை ஆறு ரூபாய்

தமிழ்க்கலைப் பதிப்பகம்

சென்னை-30

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சாத்தனார்

சொர்ணம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள்

— 1972 —

பேராசிரியர்:

அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.

விலை ஆறு ரூபாய்

தமிழ்க்கலைப் பதிப்பகம்

சென்னை-30

முதற் பதிப்பு—1974, இரண்டாம் பதிப்பு — நவம்பர் 1978
அண்ணாமலைப் பல்கலைக் கழகவெளியீடு.

## Thiru V. KANAKASABAI PILLAI

*on*

*in his*

*MANIMEKALAI*

*"THE GREAT TWIN EPICS"*

The work is specially valuable as a record of the extent to which Buddhism had spread in Southern India, Ceylon and Sumatra in the early part of the Second century, and its value is enhanced by the fact that it is much older than the Chinese works of Fa-Hian and Hwen Thsang, and the Pali Chroniclers Dipawansa and Mahavanso of Ceylon. It is, I belive, the earliest record extent in any language, which the exception of Buddhist sacred texts, which furnishes information regarding the objects of worships, the peculiar beliefs and superstitions, and the abstruse philosophy of the followers of Buddha. We learn from the poem that Buddhist monks were numerous in Tamil land, and that some of them at least claimed wonderful powers such as the ability to know the past and foretell the future; and that they believed in charms and incantations, and in the existence of spirits which could communicate with human beings.

(pp. 39 & 40)

மெட்ரோ பிரிண்டர்ஸ் அண்டு பேக்கேஜிங் இண்டஸ்டிரி
சென்னை-600 029.

# முன்னுரை

இன்றைக்கு நாற்பதாண்டுகளுக்கு முன் இப் பல்கலைக் கழகத்தே மாணவனாகப் பயின்ற நாளில், எனக்கு வாய்த்த நல்லாசிரியர்களுள் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் சிறந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் வீட்டுப் பிள்ளை எனவே நான் அவர்களாற் போற்றிப் புரக்கப்பெற்றேன். பிறகு அவர்கள் சென்னை வந்த போதும் எங்கள் ஆசிரியர் மாணவர் உறவு தொடர்ந்து இறுதிவரை நிலைத்து நின்றது. இன்று அவர்தம் அன்னையாரின் நினைவுச் சொற்பொழிவை ஆற்ற, அவர்தம் அடி நினைந்து உங்கள்முன் நிற்கின்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முதன்முதல் எனக்குத் தமிழ் நலம் தந்த கழகம். இன்று நான் அன்னையின் மடியில் தவழும் குழவியின் உணர்விலேயே சொற்பொழிவினை ஆற்றுகின்றேன்.

சனவரி 29, 30 31 (1972) ஆகிய மூன்று நாட்களையும் ஈண்டு அமைத்துக் கொண்டேன். உலகம் நலமுற்று வாழ அறமாற்றி, அவ்வுலகை ஆற்றுப்படுத்திய, 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மணிமேகலையின் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட இச் சொற்பொழிவுகள், அதே அடிப்படை அறத்துக்காக உலகில் நம் தலைமுறையில்—நூற்றுண்டில்—வாழ்ந்த அண்ணல் காந்தி அடிகள் மறைந்த சனவரி 30 நாளினும் அதற்கு முன்னும் பின்னும் அமையும் நிலையில் அமைந்துள்ளன. எனவே சமுதாயம் என்றும் அடிப்படை அறத்தினின்றும் திறம்பவில்லை என்ற உணர்வு அரும்புகிறது.

பேசப்போகும் மூன்று தலைப்புக்களுள் நான் எல்லாவற்றையும் ஆய்ந்துவிட்டேன் என்றோ பொருள்களை வரையறுத்து முடிவு செய்துவிட்டேன் என்றோ கூற முடி

யாது. தமிழ் இலக்கிய மரபில் எண்ணத்தக்க அறிஞர்களுள் சாத்தனாரும் சிறந்த ஆசிரியர் என்பதை அவர் நூல்வழியே தொட்டுக் காட்டியுள்ளேன். அவ்வளவே! அறிஞரும் பிறரும் அவரை மேலும் உணர்ந்துகொள்ள இது ஒரு தூண்டுகோலாக அமையும் என்ற அளவிலேயே நிற்கின்றேன்.

இப்பணியில் என்னை ஊக்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாருக்கும் அதன் ஆட்சிக் குழுவினருக்கும் தமிழ்த்துறைத் தலைவர் அவர்கட்கும் ஏனைய தமிழ்ப் பேராசிரியர்களுக்கும் பங்குகொண்டு சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அண்ணாமலை நகர்
31-1-1972

**அ. மு. பரமசிவானந்தம்**

# உள்ளுரை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சாத்தனாரும் நூலும் | ... 5 |
| 2. | அரசும் சமுகமும் | ... 55 |
| 3. | இலக்கிய மரபும் சமய நெறியும் | ... 105 |

## சொற்பொழிவு—க—(10-1-1972)

# சாத்தனாரும் நூலும்

### முன்னுரை

உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. அவற்றுள் மனிதன் ஆறறிவு பெற்றவனாக, அவ்வுயிர்களுக்கெல்லாம் மேலானவனாக இருந்து வருகிறான். நல்லதன் நலனும் தீயதன் தீமையும் பகுத்துணரும் பண்பாட்டு நெறியில் வாழும் மனிதன் தன் அறிவின் திறத்தால் பலப்பல உண்மைகளை உணர்கின்றான். உளத்தாலும் உதட்டாலும் பிறவற்றோடு - பிறரோடு உறவாடுகின்றான். அவ்வாறு மற்றவர்களோடு உறவாட இன்றியமையாது வேண்டப்படுவது மொழியாகும்.

உலகில் மொழி தோன்றிய நாள் உயரிய நாளாகும். மனிதன் விலங்கென வாழ்ந்த நிலையை மாற்றி, உள்ளக் கருத்தை உதட்டால் பரிமாறிக்கொள்ள உதவிய அம்மொழியே அவனைச் சமுதாயமாக்கி வாழவைத்து, மனிதப் பண்புள்ளவனாகவும் ஆக்கிற்று. எனவே, அம்மொழி வழியேதான் உலகச் சான்றாண்மையும் பண்பாடும் வாழ்கின்றன எனலாம். ஆம்! அம்மொழிகள் பல்வேறுவகையாக உலகில் பரவி இருப்பினும் அவற்றின் அடிப்படையெல்லாம் ஒன்றேதான்; கருத்துப் பரிமாற்றத்தோடு கண்டதை உணர்த்தல் என்பதேயாம். இவ்வாறு உணர்த்தத் தலைப்பட்ட மனிதன், பல இயல்புகளை ஆராய்ந்து, உற்றுணர்ந்து 'தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'என்ற உணர்வில் இலக்கியங்களை ஆக்கினான். மொழி தோன்றி

எத்தனையோ ஆயிரமாயிர மாண்டுகள் கழித்தே செம்மை சால் இலக்கியங்கள் தோன்றியிருக்கக் கூடுமாயினும் அம் மொழிவழித் தோன்றிய இலக்கியங்களே அவனுடைய சென்ற காலத்தின் அருமையினையும் நிகழ்காலத்தின் சிறப் பினையும் வருங்காலப் பழுதிலாத் திறனையும் பின்னிப் பிணைக்கும் பெரும்பாலங்களாக அமைகின்றன. அத் தகைய இலக்கியங்களே நாடுதொறும் வாழும் மனித சமு தாயத்தின் வாழ்வையும் வளத்தையும் என்றும் உலகிற்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

உலகில் வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற செம்மைசான்ற மொழிகள் அனைத்திலும் நல்ல இலக்கியங்கள் உருவாகி யுள்ளன. நம் தமிழ் மொழியிலும் அத்தகைய இலக்கியங் கள் எண்ணற்றன. தமிழ்மொழி காலத்தால் மிகப் பழை ம்மையான ஒன்று என்பது மட்டுமன்றி, இது செம்மை சான்ற உயர்தனிச் செம்மொழியாகவும் அமைகின்றமை யின், இதன் இலக்கியங்களும் தனித்தன்மை வாய்ந்தன வாகத் தமிழ்ச் சமுதாய வாழ்வை உலகுக்குக் காட்டிக் கொண்டே உயர்ந்து சிறந்து நிற்கின்றன. எத்தனையோ தமிழ் இலக்கியங்கள் மறைய, இன்று வாழும் ஒரு சில இலக்கியங்கள் நம் தமிழ்ச் சமுதாய அன்றாட வாழ்வினை எவ்வெவ்வகையில் விளக்கிக்காட்ட முடியுமோ அந்ததந்த வகையில் காட்டித் தமிழர் பண்பாட்டையும் பிற இயல்பு களையும் வையத்தில் வாழவைக்கின்றன.

## இலக்கியம் என்பது என்ன?

இலக்கியம் என்பது என்ன? அது மனிதன் தன் உள் ளத் தளத்தில் தோன்றும் வெறும் கருத்துக் குவியல் மட்டு மன்று. மேலைநாட்டு அறிஞர் பலர் இவ்விலக்கியத்தை வாழ்வொடு இணைத்துக் காட்டுவர். இலக்கியம் வாழ்வின் மறுபதிப்பு—வாழ்வினை விளக்கிக் காட்டும் ஒளிவிளக்கு— கண்ணாடி என்றெல்லாம் விளக்கம் காட்டுகின்றனர். ஒரு காலத்தில் வாழும் சமுதாய வாழ்வினை, அச் சமுதாயத் துக்கு இடையில் தோன்றிய இலக்கியங்களே நன்கு படம்

பிடித்துக் காட்டவேண்டும் என்பது அவர்தம் கருத்து; உண்மையும் அதுதான். இலக்கியம் வெறும் சொல்லடுக்குகளால் அன்றி உணர்ச்சி வசத்தால் மட்டும் உருவானது அன்று. அப்படி ஒருவேளை ஏதேனும் இலக்கியம் இவ்வகைகளில் உருவாகுமாயின், அது காலம் கடந்து வாழாது, காலத்தேவன் கைப்பட்டுக் காணாது கழிந்தொழியும் என்பது உறுதி. இவ்வுண்மை தமிழ் இலக்கியத்துக்கு மட்டுமின்றி உலக மொழிகளில் தோன்றிய அனைத்து இலக்கியங்களுக்கும் பொருந்துவதாகும்.

இலக்கியம் தான் தோன்றிய காலத்தில், தோன்றிய நாட்டில்-அதன் சமூகத்தின் தன்மையினை - வாழ்வினை— வரலாற்றினை அப்படியே படம்பிடித்துக் காட்டவேண்டிய ஒன்றாகும். ஆனால் அத்துடன் அதன் பணி நின்றுவிடவில்லை; அக்காலத்திய சமுதாயப் பண்பாட்டை மட்டும் காட்டுவதோடமையாது, அச் சமுதாய நெறி அடிப்படையில் காணும் வாழ்வின் உண்மைகளை வருங்காலச் சமுதாயங்களெல்லாம் உற்றுணரும் வகையில்-தேவையாயின் பற்றிப் படரும் வகையில் - விளக்கிக் காட்டவும் வேண்டும். அந்த இலக்கியம் தோன்றிய நாட்டுச் சமுதாயம் மட்டுமின்றி, உலகில் வாழும் சமுதாயங்களெல்லாம் என்றும் உற்றுணரும் உண்மைகளைக் கொண்டதாயும் அவ்விலக்கியம் அமையவேண்டும், இன்று உலகில் வாழும் இலக்கியங்களுள் ஒருசிலவே இத்தகைய பண்பினைப் பெற்று வாழ்கின்றன. அந்த வரிசையில் வைத்து எண்ணத்தக்க தமிழ் இலக்கியங்களும் உள்ளன. அவற்றின் வரலாற்றைக் காண்போம்.

## தமிழ் இலக்கியப் பெறுவழி

தமிழ் இலக்கிய வரலாற்றுநெறி தெளிந்த நீரோடை போன்றதென்று சொல்ல முடியாது. தமிழ் இலக்கிய நெடுந்தெரு எத்தனையோ மாற்றங்களைப் பெற்று, திருப்பங்களைக் கடந்து, உறழ்ந்தும் பிறழ்ந்தும் சிதைந்தும் செறிந்தும் இன்றைய நிலையில் தன் வரலாற்றை - கடந்த வழிகளை உணர்த்திக் கொண்டிருக்கின்றது. தமிழ் இலக்கிய நெடுந்

தெருவில் நமக்குக் கண்முன் காணப் பெறுவன 2500 அல்லது 3000 ஆண்டுகள் எல்லையில் அமைவனவேயாயினும் அவற்றின் தெளிவும் செம்மையும் காணின் அவை அதற்குமுன் எத்தனை எத்தனையோ ஆயிரமாயிரமாண்டுகள் தம் வாழ்வின் பயணத்தை-செலவினைக் கழித்திருக்க வேண்டும் என்பது புலனாகும். எனவே. இந்த இலக்கியப் பயணம் நெடுந்தொலைவு நடைபெற்ற ஒன்று. எனினும் நம் கண்முன் தெரியும் எல்லையில் நின்று அந்த நெடுஞ்சாலையை நோக்கினாலே நமக்குப் பல உண்மைகள் புலனாகும்.

தொல்காப்பியத்தின் செய்யுளியலிலும் பிற இயல்களிலும் தமிழில் தோன்றி வாழ்ந்த பாக்கள் - இலக்கியங்கள் பற்றிப் பலவாக விளக்கப் பெய்றிருந்தும், அவற்றில் காட்டப்பெறும் அனைத்தையும் இன்று நாம் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. எனவே, இலக்கியங்கள் ஒருசிலவற்றைக்கொண்டே, அவற்றின் வளர்ச்சியையும் செலவையும் அறிந்து கொள்ள இயலும். கடைச்சங்க காலத்துக்கு முன் எத்தனையோ இலக்கியங்கள் தோன்றி வாழ்ந்தன, பல கடலூழிகளாலும், பிறவற்றாலும் அவை அனைத்தும் நிலைகெட, ஓரிரு பாடல்கள் வாழ்ந்து வந்தன. அவையும் பின்தோன்றிய கடைச்சங்கப் பாடல்களோடு ஒன்றிக் கலந்து, எட்டுத் தொகையில் சேர்த்து எண்ணப் பெறுகின்றன. இந்த எட்டுத்தொகைப் பாடல்கள் அமையுமுன் தமிழ் இலக்கிய நெடுந்தெருவில் ஒரு திருப்பம் உண்டாகியிருக்கவேண்டும். இலக்கியநெடுந்தேர்-நேராகச்செல்லாது, திருப்பத்தின்வழிச் செல்ல வேண்டுமாயின், அதைத் திருப்பவும் செம்மையாகச் செலுத்தவும் வல்ல திறனாளர் தேவையன்றோ? ஆம்! தேவையான அவ்வக் காலத்தில் திறன் நிறை செம்மை சால் புலவர்கள் தோன்றி, இந்தத் தமிழ் இலக்கியத் தேரினைக் காலமறிந்து இடமறிந்து செவ்வியுடன் செய்வினையின் மூலமறிந்து, திருப்பிச் செம்மையாகச் செல்ல வழி கண்டுள்ளனர். அவர்தம் திறமைச் செயல் வழியும் தெளிந்த உள்ளத்தின் வழியும் உருவான இலக்கியங்களே நம்மை வாழ்விக்கின்றன.

## இலக்கியத் திருப்பங்கள்

எட்டுத் தொகையாகிய சங்க நூல்களுள் பரிபாடல், கலித்தொகை என்பன தவிர்த்துப் பிற தொகை நூல்கள் அனைத்தும் அகவற்பாவால் சிறுசிறு அளவில் அமைகின்றன. தனி மனிதனைப் பாராட்டும் பாடல்கள் அவற்றுள் உண்டெனினும், அத் தனி மனிதனை ஒரு பெரும் வழிகாட்டியாகவோ—உலகோர் போற்றும் தெய்வமாகவோ அவை புகழவில்லை. மாறாகப் 'புகழும் இகழ்ச்சியும் நீர்வழிப் படூஉம் புணைபோல்' அமைவன என்ற உணர்வில் தேவையானவற்றை மட்டுமே சுட்டிக் காட்டிச் செல்லுகின்றன. அவன் இழைக்கும் தவறுகளைச்சுட்டிக் காட்டித் திருத்த முயன்றுள்ளன; நல்லது செய்தால் பாராட்டியுள்ளன; அவ்வளவே! அப்பாடல்களின் எல்லை நூறு அடிகளுக்குள் அமைகின்றது.

இத் தொகை நூல்களுக்குப் பிறகு தமிழ் இலக்கிய நெடுந்தேர் மற்றொரு தெருவுக்குத் திரும்புகின்றது. அத் திருப்பத்தைத் திறம்படச் செய்கின்ற புலவர் நக்கீரராவர். இத்தகைய திருப்பங்களில் செல்வதற்கு மன உரமும் எதிர்ப்பினைத் தாங்கும் திறனும் தேவை. இயல்பாகச் செல்லுகின்ற நெறிவிட்டு வேற்று நெறியில் திரும்பின் உலகம் இன்றும் ஏற்றுக்கொள்வதில்லையே. சாதாரண எளிய வாழ்க்கை நெறியிலேயும் இந்த வரலாற்று உண்மையைக் காண முடிகின்றது. எனவே, இலக்கிய நெறியில் இத்தகைய திருப்பங்களை அறிஞர் உலகம் உடனே ஏற்றுக் கொள்ளாது; மேலும் அத்தகைய புது நெறிகளைத் தகைந்து தடுக்கவும் கூடும். அவற்றையெல்லாம் கடந்து சமுதாய வாழ்வு ஒன்றையே உளத்தில் அமைத்து முன்னேற்றம் காண விரும்பும் புலவனே அந்த முட்டுக் கட்டைகளையெல்லாம் திறம்படக் கடந்து, இலக்கியத் தேரினைச் செம்மையாகத் திருப்பிச் செலுத்த முடியும். நாம் காணும் நெடு வழியின் முதல் திருப்பத்தினை நக்கீரர் திறம்படத் திருப்பிச் செல்கிறார். அவர் நீண்ட பாடலை, ஒரு தலைவனை முன்னிறுத்தி, அவன் புகழ்பாடி, கற்பனையும்

கலந்து, வரம்வேண்டிப் பயன்பெறும் வகையில் பாடி முடிக்கின்றார். அவர் வழியே புலவர் பலர் பாடுகிறார்கள். நூறு அடி எல்லையினும் நீண்ட பாடல் வரிசை ஏழுநூற்று எண்பத்திரண்டு அடி வரையில் நீண்டது. இவற்றுள் பொருளியலும் புகழ்ச்சியும் போற்றலும் அதிகமாக இடம் பெற்றன; இயற்கைப் புனைவு, கற்பனைத் திறன் கலந்த பாடல்களாக இவை அமைந்தன. நற்றிணை, குறுந்தொகை போன்ற சங்கத் தொகைப் பாடல்களுக்கும் பத்துப் பாட்டுக்கும் உள்ள வேற்றுமை தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது. எனினும் அப்பாடல்களைப் பாடித் திருப்பத்தைச் செம்மையாகச் செய்த புலவர்களின் திறத்தால் அவை வாழ்கின்றன. தமிழ் இலக்கியமும் அத் திருப்பங்கடந்து வீறு நடையிட்டு விரைகின்றது.

இந்தத் திருப்பத்திலிருந்து நெடுந்தொலைவு செல்வதற்குள்ளாகவே தமிழ் இலக்கிய நெடுவழியில் மற்றொரு திருப்பம் குறுக்கிடுகிறது. ஆனால் இத் திருப்பத்தில் செல்லுவதற்கு யாவரும் அஞ்சி ஒதுங்கினர். ஒரு சிறந்த புலவரும் ஓர் அரசகுமாராகிய அடிகளுமே துணிந்து அத்திருப்பத்தில் கால் வைத்தனர். ஆயினும் அவர்கள் எண்ணி எண்ணி, யார் முன்செல்வது யார் பின்பற்றுவது என்று ஆராய்ந்து, ஒருவரும் முன் செல்ல விரும்பாமையால் இருவரும் கையிணைந்து ஒன்றியே அத்திருப்பத்தில் கால்வைத்தனர். அத் திருப்பத்தில் இருந்த முட்டுக் கட்டைகளை இருவருமே அகற்றினர். நல்ல வேளை அவர்கள் திருப்பிய திருப்பம் நீண்டு நெடுங்காலம் தமிழ்ச் சமுதாயத்தினிடை அமைய, இலக்கிய நெடுந்தேர் ஓடிக் கொண்டிருக்க வாய்ப்பாக அமைந்தது. யாவர் அந்த இருவர்? ஆம்! இளங்கோவடிகளும் சாத்தனுருமே ஆவர்.

## நாட்டு நிலை

நாட்டு நிகழ்ச்சிகளையும் அவற்றிற் குரியவர்களையும் வைத்துச் சில அடிகளால் நடந்தவற்றைக் காட்டி,

அவற்ருல் நாடும் சமுதாயமும் பெறும் நலக்கேடுகளை விளக்கும் சங்க காலப் புலவர் தம் மரபினும், மாறுபட்ட நிலையினை இக் காப்பியப் பெருந் தெருவிலே காண்கின்ருேம். இக் காப்பியங்கள் எழுந்த காலம் கடைச்சங்கமெல்லாம் முற்ற முடிந்துவிட்ட காலம். அக்காலத்தே தமிழ்நாட்டில் வேற்று நாட்டவர் வளரத் தொடங்கிவிட்டனர். பௌத்தமும், சைனமும் வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டில் குடியேறின. அவைகளுக்கு முன்பாகவே வைதிக சமயம் என்னும் வடவாரியர்தம் சமயம் தமிழ்நாட்டில் புகுந்து மக்களிடையில் பரவிற்று. இவைகளுக்கிடையில் 'ஆசிவகம்' என்ற சமயமும் நுழைந்தது என்ருலும் அது கால்கொள்ளவில்லை. மேலைநாட்டுக் கிறித்தவ, முகம்மதிய சமயங்களும் அக்காலத்தில் கடல்வழியாகத் தமிழ்நாட்டில் புகுந்தன. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற நெறியிலே வாழ்ந்த தமிழ்நாட்டில் பல சமயங்கள் புகுந்தன. அரசியல் படையெடுப்புகளுக்கு இடனில்லா வகையில் தண்டமிழ் நாடாண்ட முடிமன்னர் மூவரும் சிறக்க ஆண்டமையின், வேற்று நாட்டு அரசியல் நெறியும் அரசநிலையும் தமிழ்நாட்டில் கால் வைக்க வில்லையாயினும்,சமயப் படையெடுப்பு ஒன்றன்பின் ஒன்ருக நிகழ்ந்துள்ளன. ஆரியர் சிந்து கங்கைச் சமவெளியில் வாழ்ந்த காலத்துத் தம்முடையதுடன், அங்கே வாழ்ந்த திராவிடர் தம் சமய நெறிகளையும் பிறவற்றையும் கூட்டி இணைத்த ஒன்ருகிய வைதிக சமயத்தினைத் தெற்றேயும் பரவச் செய்தனர். 'உயிர்க் கொலையும் புலைப் புசிப்பும்' உடைய வேத வேள்வி முதலியவை தமிழ்நாட்டில் புகுந்தன. வடக்கே இந்தக் கொள்கையை மாற்றும் நிலையில் தோன்றிய பௌத்தமும் சைனமும் அங்கே அச்சமய வளர்ச்சியைத் தகைந்ததோடு தெற்கே தமிழகத்திலும் அவ் வைதிக சமயத்துக்கு மாருகவும் போட்டியாகவும் புகுந்து வேத வேள்வியையும் உயிர்க் கொலையையும் கண்டித்தன. எனவே, கடைச்சங்க காலத்து இறுதியில் வடநாட்டுப் பெருஞ்சமயங்களாக இருந்த இந்த மூன்றும் தமிழ்நாட்டிலும் புகுந்து மக்களிடையே தத்தம் செல்வாக்கை

வளர்த்துக்கொள்ள முயன்றன. இந்த நிலையிலேயே அச் சமயங்கள் அடிப்படையில் காப்பியங்கள் உண்டாயின. அவற்றுள் ஒன்றே சாத்தனார் கண்ட மணிமேகலை!

வேற்றுச் சமயங்கள் நாட்டினிடை விரவிய அந்த வேளையிலே இந்தியா நாடு முழுவதும் பரவியிருந்து பின், தமிழ் நாட்டிற்கே உரித்தாயிருந்த சைவ, வைணவ சமயங்கள் தம் நிலைகுலையாவிடினும் ஓரளவு மற்றவற்றெடு கலந்து உறவாடியே நின்றன. இச் சமயக்கொள்கைகள் சிலவற்றைத் தம் சமயத்தோடு பிணைத்த ஆரியர்தம் வைதிக சமயத்தை மக்கள் மாறுபட்டதாகவே மதிக்க வில்லை. மற்றும் பௌத்த சைன சமயங்களையும் தம் சமயங்களின் பகுதிகளே எனக் கொண்டனர். அதனால் வேற்றுச் சமயங்களாக வந்த பிறவும், தமிழர்தம் சமயங்களே என்னுமாறு தமிழ்நாட்டில் இடம்பெற்று வளர்ந்தன. ஆயினும் அவைகள் தம்முள் மாறுபட்டுத் தமிழ்நாட்டைத் தம் போர்க்களமாக்கிக் கொண்ட காலத்தில்தான் பல போராட்டங்கள் நிகழ்ந்தன. முன் பௌத்தம் சிறக்க. அதை வீழ்த்தியபின் சைனம் மேலோங்கிற்று. அதனாலேயே பல அறநூல்கள் அக்காலத்தில் உண்டாயின. எனினும் வைதிக சமயம் தமிழ்நாட்டில் கால்கொண்ட பிறகு தமிழ்நாட்டுச் சமயநெறிகளையும் தெய்வங்களையும் ஏற்றுத் தன்னிடத்துக் கொண்டு வளர்ந்த காரணத்தால் மக்கள் அதைப் பின்பற்றத் தொடங்கினர் போலும். எனவேதான் ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பௌத்தம் சைனம் இரண்டும் நிலைகெட, வைதிக சமயம் மேலோங்கி நின்றதோடு, இன்றளவும் தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகிறது.

இத்தகைய சமயப் போராட்ட எல்லையில் எத்தனையோ இலக்கியங்கள், சமயங்களின் அடிப்படையில் தமிழில் உண்டாயின. அவை அனைத்தும் கால வெள்ளத்தை நீந்திக் கடக்க முடியாது அழிந்தன. சமயக் கொள்கை பொதியாத அறநெறி பற்றியவை மட்டுமே

இன்றளவும் வாழ்கின்றன. அவற்றுள்ளும் என்றும் யாவருக்கும் பொதுவான நல்லறம் உணர்த்துவன உலகம் போற்றுமாறு வாழ, ஒருசில தம் உயிர் ஊசலாடும் வகையில்தாம் வாழ்கின்றன எனலாம்.

## காப்பியத் திருப்பம்

சிற்றிலக்கியங்கள் பல தோன்றுவதற்கு முன் பேரிலக்கியங்களும் தோன்றின. அப்பேரிலக்கியப் பெருந்தெருவில் முதலில் தெரிவன சிலம்பும் மேகலையுமேதாம். சங்க காலச் சமயங் கலவாத, காழ்ப்பினைக் கடியும் வாழ்வினை ஒட்டிய இலக்கியங்களுக்குப் பின் இந்த இரு காப்பியங்களின் தோற்றத்திற்குரிய சூழ்நிலையைக் கண்டோம். இவற்றை இயற்றிய இருவரும் அக்காலத்திய பெரும் புலவர்கள்தாம். எனினும் இந்த இலக்கிய நெறியின் மாற்றத்தைச் செய்ய அவர்கள் பெரிதும் அஞ்சினர்கள் என்றே நினைக்க வேண்டியுள்ளது. நம் காலத்தைப் போன்று யாரும் எதையும் எழுதி வெளியிடலாம் என்ற பொல்லாப் போக்கு அக்காலத்தில் இல்லை என்று தெரிகின்றது. அவர் தம் கருத்துப் போராட்டத்தை, நூலைப் பற்றிய பதிகம் முதலியவற்றுல் நன்கு அறிந்துகொள்ள முடிகின்றது. இயல்பான தொகை நூல்களாகிய சங்க இலக்கிய நெறியிலிருந்து மாறிய பத்துப்பாட்டில் அத்துணைப் பெருமாற்றமில்லை; ஆனல், இக்காப்பிய நெறி முற்றிலும் மாறுபட்டதாகி விட்டமையின் இவற்றை இயற்றிய இருவருமே அஞ்சினர் என அறிகிறோம்.

செங்குட்டுவன் மலைவளங் காணச்சென்ற காலை அவனுடன் அவன் தம்பியாராகிய இளங்கோவடிகளாம் செம்மை நலஞ்சான்ற புலவரும் உடனிருந்தனர். அவைக்களப் புலவர் பிறரும் இருந்திருப்பர். அவருடன் மதுரை எரிய, அங்கிருந்து வந்த சாத்தனுரும் இருந்தனர் என அறிகிறோம். மலைவாழ் வேடுவர் கண்ணகி தன் கணவனொடு விண்ணிழி விமானமேறிச் சென்றதைக் கண்ட

தாகக் கூற, அந்நிகழ்ச்சிக்கு அடிப்படையான மதுரை நிகழ்ச்சிகளை முற்றும் அறியாது தடுமாறினன் செங்குட்டுவன்; மற்றவரும் திகைத்தனர். அதுகாலை, அங்கிருந்த தண்டமிழ்ச் சாத்தனார் அது நிகழ்ந்தவற்றை விளக்கி உரைத்தனர். சாத்தனார் வழியே கண்ணகியின் பெரும் புகழ் உணர்ந்த செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல்லெடுக்க வடநாடு சென்றான். பிறகு வஞ்சியில் கோட்டம் வகுத்து வழிபாடாற்றினன்.

கற்கோயில் கட்டிய அண்ணனின் செயலிலும் விஞ்சிய வகையில் கலைக்கோயில் கட்ட எண்ணிற்று இளங்கோவடிகளின் உள்ளம். எனவே கோவலன் கண்ணகி வரலாற்றை மையமாக வைத்து, என்றும் வாழும் மூன்று உண்மைகளை உலகுக்கு உணர்த்த நினைத்தார் அவர். ஆயினும் அந்த வரலாற்றுக் காப்பியம் தமிழ்நாட்டு இலக்கிய மரபுக்குப் புதியது என எண்ணி மயங்கினார். எனவே, அப் புதுத் திருப்பத்திற்கு இருபெரும் புலவருமே சேர்ந்து செல்லலாம் என எண்ணினார். எனவே, 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' என்று சாத்தனாரை வேண்டினார். பாட்டுடைச் செய்யுளாம் சிலம்பு புது மரபினைப் பற்றியது அன்றோ? எனவே, தனியாகச் செல்வதைக் காட்டிலும் இருவரும் இணைந்து செல்லின்,பழிப்பார் இருவரையும் சேர்த்துப் பழிப்பின்,பளுக் குறையும் எனக் கருதியிருப்பர். எனினும் சாத்தனார் அந்த வகையில் புதுத் திருப்பத்திற்குத் தோள் கொடுக்க இசையவில்லை. எனவே, அடிகளார் வேறொரு வகையில் சாத்தனாரைப் பின்னியே செல்ல முடிவு செய்துவிட்டார். இருவரும் காப்பியம் இயற்ற வேண்டும் என முடிவு செய்தனர்; ஆயினும் ஒரே காப்பியத்தை அன்று. இளங்கோவடிகள் கண்ணகி கோவலன் வரலாற்றினைப் பாட அதைச் சாத்தனார் கேட்கவேண்டுமென்றும், சாத்தனார் அவர்தம் மகளாகிய மணிமேகலை வரலாற்றைப் பாட இளங்கோவடிகள் கேட்க வேண்டுமென்றும் முடிவு செய்தனர். இரண்டையும் பின்னிப் பிணைத்தே 'இரட்டைக் காப்பியம்' எனும் வகையில் அமைத்தனர்.

புதுத் திருப்பத்தைத் தமிழ் உலகம் ஏற்ருல் இருவருக்கும் புகழ்; இன்றேல் வரும் இகழ்ச்சி 'இருவருக்கும் உரித்து' என்ற உணர்வில் இருவரும் தனித்தனியாகக் காப்பியங் களைச் செய்து இரட்டைக்காப்பியங்களாக்கி உலகுக்குத் தந்தனர். இந்த உண்மைகளையெல்லாம் அவர்தம் நூற் பதிகங்களே நமக்கு உணர்த்துகின்றன.

'முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது
அடிகள் நீரே அருளுக.'

எனச் சாத்தனுர் மூவேந்தருக்கும் உரியதை—மூவேந்தர் வரலாறு கொண்ட சிலம்பின் கதையை—அம் முடிமன்னர் குலத்தில் ஒன்ருகிய சேரர் குலத்தில் தோன்றிய இளங்கோ வடிகள் பாடவேண்டுமென, முதல் தொடக்கத்தை அடி கள் மேலேயே ஏற்றுகின்ருர். ஆம்! சாத்தனுர் எளிய புல வர். ஆனல் சிலம்பின் ஆசிரியரோ அரச குடியிற் பிறந்த வர் மட்டுமின்றி அனைவரும் போற்றும் துறவற நெறியை யும் மேற்கொண்டவராக விளங்கினுர். எனவே அவர் புது நெறி செல்லின் உலகம் அரச குடும்பத்தவராதலால் பழிக்க அஞ்சும்; அப்படிப் பழிப்பினும் அவர்தம் துறவுள் ளம் அதைப் பழிப்பாகக் கொள்ளாது. இவற்றை எண் ணித்தானே அன்றி ஏனே சாத்தனுர் 'அடிகள்! முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது; அருள்க' என்ருர். இளங்கோ வடிகளும் சாத்தனுர் கூறியதில் உள்ள உண்மையை உணர்ந்து அப்பணியை மேற்கொள்ள முனைந்தாலும் சாத்தனுரையும் பிணைத்துச் செல்லவே நினைத்தார். எனவே அவர் சிலம்பினைப் பாடச் சாத்தனுர் மேகலையைப் பாட இசைந்தனர். இரண்டாவதாக, தம்மேல் திரும்பக் குற்றம் வரினும் அவ்வளவாகத் தாக்காது என எண்ணியது அவர் உள்ளம், எனவேதான் இருவரும் தனித்தனியாகப் பாட, ஒருவர் பாடியதை மற்றவர் கேட்கவேண்டும் என்ற ஏற் பாட்டில் இருபெருங் காப்பியங்களும் உருவாயின. இந்த உண்மைகளை,

"உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள, மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்" –சிலப். 87-89

என்ற சிலப்பதிகாரப் பதிக அடிகளும்

"மணிமேகலைமேல் உரைப்பொருள் முற்றிய
சிலப்பதிகாரம் முற்றும்" –நூல் கட்டுரை 17,18

என்ற சிலம்பின் நூல் கட்டுரை அடிகளும்,

"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமேகலைத் துறவு
ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனன்"
–மணி. பதி. 95-98

என்ற மணிமேகலையின் பதிக அடிகளும் நமக்கு உணர்த்துகின்றன வல்லவோ?

இவ்வாறு இளங்கோவடிகளும் சாத்தனாரும் அதுவரை தமிழ் உலகம் காணாத, தமிழ் மரபு உணராத, தமிழ் இலக்கிய நெடுந்தெருவில் பெருந் திருப்பங்கண்டனர். நல்ல வேளை தமிழ் உலகம் அத்திருப்பங்கண்ட இலக்கியமாம் அவற்றை ஏற்றுக்கொண்டதோடு அந்தத் திருப்பத்திலேயே செல்லவும் தொடங்கிற்று. பிற்காலத்தில் பல காப்பியங்கள் எழுவதற்கும், காப்பிய இலக்கணங்கள் அமைவதற்கும் இப் பெருங்காப்பியங்கள் இரண்டும் துணையாகவும் வழிகாட்டிகளாகவும் விளங்கின என்பது தேற்றம்.

## சாத்தனார்

சாத்தனார் என்ற பெயர் அக்காலத்தில் தமிழ்நாட்டில் பரவலாக வழங்கிவந்திருக்கவேண்டும். மணிமேகலை என்னும் நூலின் ஆசிரியர் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்

என வழங்கப்பெறுகிறுர். சிலர் கூலவாணிகன் சாத்தனுர், சீத்தலைச்சாத்தனுரின் வேறுபட்டவர் எனக் கூறுவர். இவர் களை யன்றி 'சாத்தனுர்' என்றே ஒரு புலவர் சங்கப் புலவ ராக இருந்து பாட்டிசைத்துள்ளார் (குறுந். 349). பிற்காலத் தில் சாத்தன், சாத்தனுர் போன்ற பெயர்கள் பொதுமக்களி டத்தில் மிகச் சாதாரணமாகக் காணப்பெறுகின்றன. பிற் காலத்தில் இலக்கண நூல்களில் மேற்கோள் காட்டும் பெயர்களுள், 'சாத்தன்' என்ற பெயர் பலவிடங்களில் எடுத்தாளப் பெறுகின்றது, சாத்தன் என்பதுதான் 'சாஸ்தா'வாக இருக்கவேண்டும் என்பது சிலர் கருத்து.

## சைனரா? பௌத்தரா?

சாத்தன் அல்லது சாத்தனுர் என்பது வடமொழிப் பெயர். 'சாஸ்தா' என்பதன் திரிபு என்பர். இதை அப் படியே உண்மை என்று கொள்வாரும் உளர். 'சாத்து' என்பதன் அடியாகச் சாத்தன், சாத்தனுர் என்ற பெயர் வந்திருக்கவேண்டும் என்று கருதுவாரும் உளர். 'சாற்று' சாத்து ஆயிற்றென்பர் சிலர். 'சாத்து' என்பதே வணிகர் கூட்டத்துப் பெயர் என்றும் இவர் வாணிகரானமையின் சாத்தனுரானுர் என்றும் சிலர் கூறுவர். மணிமேகலையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப் அவர்கள் சாத்தனுர் என்பது சைனப் பெயர் என் றும் இவர் புத்தர் சிறப்பினைப் பாடும் மேகலையை இயற் றினுர் என்றும் வைதிகம் நாட்டில் கால்கொண்டிருந்த தென்றும் இப்புதுச் சமயங்களுள் எதைக் கொள்வதென மக்கள் அக்காலத்தில் தயங்கி நின்ருர்களென்றும் தன் முன்னுரையின் அடிக்குறிப்பில் காட்டியுள்ளார். 'சாஸ்தா' என்பது புத்தருடைய பெயரே என்று 'அமரகோசம்' முதலிய வடமொழி நிகண்டு முதலியவற்றை மேற்கோள் காட்டுவர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்.

இங்கே மற்றொருவர் கூற்றும் நினைவுக்கு வருகிறது. மணிமேகலையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பஞ்சாப

கேச ஐயர் என்பவர் இளங்கோ புத்தத் துறவி எனத் தம் முன்னுரையில் தவருகக் குறிப்பிட்டுள்ளனர். இப்படித் தம்மனம் போனவகையில் இங்கே வாழ்ந்தவர்கள் எழுதிய காரணத்தில்தானே அன்றி சொல்லிய காரணத்திஞல் தானே வெளிநாட்டிலிருந்து தம் சமயம் பரப்பவந்த போப் பாதிரியார் சாத்தனுரைச் சைன சமயத்தவர் என்று எழுத நினைத்தார். ஆய்ந்து நோக்கின் இளங்கோவடிகள் சைனர் என்பதும் அவர் அண்ணன் செங்குட்டுவன் சைவன் என்பதும் சாத்தனுர் பௌத்தர் என்பதும் அக்காலத்தில் நாட்டில் நிலவிய சமயப் பொறையே அனைவரையும் அன்பால் பிணிக்க நமக்கு நல்ல ஈரிலக்கியங்கள் தந்தது என்பதும் அறிய முடிகிறது.

எது எப்படியாயினும் இந்த மணிமேகலையின் ஆசிரியர் சிறந்த தமிழ்ப் புலவராய் விளங்கினர் என்ற உண்மை அவர் நூலால் மட்டுமன்றி அவர் காலத்து ஒன்றி வாழ்ந்த இளங்கோவடிகளின் பாடல் அடிகளாலும் நன்கு விளங்குகின்றது. 'தண்டமிழ்ச் சாத்தன்' (சிலப், பதி. 10) எனவும், 'தண்டமிழாசான் சாத்தன்' (காட்சி 40) எனவும், 'நன்னூற் புலவன்' (காட்சி 106) எனவும் இவர் சிலம்பினுல் போற்றப் பெறுகின்றனர். எனவே, இவர் சிறந்த தமிழ் அறிஞர் என்பது தேற்றம். மேலும் இவர் சான்ருண்மை மிக்கவர் என்பதும் இவர் வாக்காக உள்ளவற்ருல் உணரக் கிடக்கின்றது.

## பாடியவை

'சீத்தலைச் சாத்தனுர்' என்பவர் பாடியவாகச் சங்கத் தொகை நூல்களுள் சில பாடல்கள் உள்ளன. அகத்தில் ஐந்தும் (53, 134, 229, 306, 320), புறத்தில் ஒன்றும் (59), குறுந்தொகையில் ஒன்றும் (154), நற்றிணையில் மூன்றும் (36, 127, 339) ஆகப் பத்துப் பாடல்கள் தொகை நூல்களில் உள்ளன. இவற்றை இயற்றிய புலவர் பெயர்முன் 'கூலவாணிகள்' என்ற தொடர் இல்லாமையின் மணி

மேகலை ஆசிரியர் அவரினும் வேறுபட்டவர் என்பர் சிலர். அவர் கூற்றுக்கு ஏற்ப, இப்பாடல்களின் தமிழ்நடையும் போக்கும் மணிமேகலை அடிகளுக்கும் அமைப்புக்கும் ஓரளவு மாறுபட்டுள்ளமையைக் காண முடிகின்றது. எனினும் சங்க இலக்கியப் பாடல்களைப் பாடிய அவரே, பொது மக்களுக்கெனக் கதைபொதி பாட்டாகிய 'மணிமேகலை'யைப் பிற்காலத்தில் பாடினுர் என்று கொள்ளவேண்டும் என்பர் சிலர். இவ்விருவரேயன்றி மற்றொரு சாத்தனுரும் சங்கப் பாடல் பாடியுள்ளார்.

திருவள்ளுவர் பெருமையைப் பாராட்டிக் கூறும் மருத்துவன் தாமோதரனுரின் திருவள்ளுவ மாலைப் பாடல் 'வள்ளுவர் முப்பாலால், தலைக்குத்து தீர்வு சாத்தற்கு' என்று கூறுவதால் இவரைப் பற்றி ஒரு கதை வழங்குகின்றது. சங்கத்தில் அரங்கேற்றப்பெறும் நூல்களில் பிழை கண்டவிடத்து அவற்றை மறுத்தற்கு அஞ்சி, அவற்றைக் கேட்க நேர்ந்தமைக்கு வருந்தித் தம் தலையிலேயே தமது எழுத்தாணியால் குத்திக் கொள்வார் என்றும் அதனுல் இவர் தலையில் சீழ் வடிய, இவர் 'சீத்தலைச் சாத்தனுர்' ஆயினர் என்றும் கூறுவர். இவர் கூற்றுக்கு ஏற்பப் பிற்கால உரையாசிரியர்களாகிய இளம்பூரணர் போன்றவர்கள் 'இயற்பெயர் சினைப்பெயர்' (தொல். பெயர். சூ. 20) என்பதற்கு மேற்கோளாக இச் 'சீத்தலைச் சாத்தன்' என்ற தொடரைக் காட்டுகின்றனர். எனினும் இதற்குத் தக்க ஆதாரமின்மையானும், சீத்தலை என்பது ஊரின் பெயராக ஆய்ந்து கண்டமையாலும் இப் புலவர் சீத்தலை என்ற ஊரைச்சார்ந்த சாத்தனுர் என்றே கொள்ளலாம்.

சீத்தலைச் சாத்தனுரும் கூலவாணிகன் சாத்தனுரும் ஒருவரோ இருவரோ என்ற ஆய்வு இன்னும் முற்றுப் பெரு நிலையில் மற்றொரு ஐயப்பாடும் நாட்டில் உள்ளது. சிலம்பு மேகலை இரண்டும் இணைந்த இரு பெருங்காப்பியங்களாக உள்ள நிலையில் ஒரே காலத்தன எனக் கொள்வதிலும்

சிலர் ஐயமுறுகின்றனர். சாத்தனாரின் மணிமேகலை காலத்தால் பிந்தியதாக இருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. அதற்கேற்ற நிலையில் இரு இலக்கியங்களிலும் நடை, பொருள்நிலை, பிறவற்றில் மாறுபாடு இருப்பதைக் காண்கின்றோம். சிலப்பதிகார நடையிலும் எளிய நடையதாய் அதுவரையில் தமிழ்நாட்டில் கேட்டறியாத பல பெயர்களையும் கொள்கைகளையும் பேசுவதாலும் கதைகள் பலவற்றைக் காட்டுவதாலும், சமயத்துக்கு முக்கியம் தருவதாலும் அக்கருத்து உண்மையோ என எண்ண வேண்டியுள்ளது. எனினும் சிலப்பதிகாரம் நடந்த ஒரு வரலாற்று அடிப்படையில் உலகில் என்றும் நின்று நிலவும் மூன்று உண்மைகளை நிலைநாட்ட எழுந்தமையால், அது புலவரால் போற்றப்பெறும் உயர்ந்த நடையையே தழுவிச் செல்கிறது. சாத்தனார் தம் சமயத்தை மணிமேகலை வரலாறு காட்டி வளர்க்க நினைத்தமையானும், சமய உண்மைகளும் கதைகளும் கற்றார் மட்டுமின்றிப் பாமர மக்களும் உணரவேண்டும் என எண்ணினமையானும் அவர் எளிய நடையினைக் கையாண்டு பல சமயக் கதைகளையும் எடுத்தாண்டார் எனக் கொள்ளல் பொருந்துவதாகும். ஆகவே இளங்கோவடிகள் சாத்தனார் இருவரும் ஒரே காலத்தில் இருந்தவர்களே என்பதும் ஒருவர் கேட்ப மற்றவர் தம் காப்பியத்தை இயற்றினார் என்பதும் தேற்றமாகக் கொள்ளவேண்டுவன என்பது தெளிவு.

இனி, சீத்தலைச் சாத்தனாரே கூலவாணிகன் சாத்தனார் என்று கூறுவார் கூற்றினை மறுக்கப் போதிய சான்றுகள் இல்லை. மொழிவகையில் மாற்றம் இருப்பதற்குக் காரணம் மணிமேகலை பாமர மக்களுக்குச் சமயம் வளர்க்கப் பயன்பட எழுதியதேயாகும். மேலும் சங்ககாலப் புலவர் தாம் மதுரையில் இருந்ததற்குச் சான்றாகத் தம் ஒரே புறப்பாடலைப் பாண்டியனைப் பற்றியதாகவே யாத்துள்ளார். பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைச் சீத்தலைச் சாத்தனார் பாடிய பூவைநிலைப் பாடலே புறம்

59-ஆவது பாடலாக அமைந்துள்ளது. சிலம்பின் வழியே கூலவாணிகன் சாத்தனார் மதுரையில் இருந்தது, மதுரை எரியத் தாம் வெள்ளியம்பலத்தில் தங்கியது, அதுகால் கண்ணகி, கோவலன் வரலாறு முதலியன கேட்டது ஆகி யவையும் தெரிகின்றன. எனவே, மொழி அமைப்பின் அடிப்படை ஒன்றைக் கொண்டே இருவரும் வேறுபட் டவர் எனக் கொள்வதை விடுத்து, வேறு தக்க சான்றுகள் காணும் வரையில், இருவரும் ஒருவரே எனக் கொள்ளல் பொருந்தும். இக் கருத்தினை இன்றைக்கு அரை நூற்றாண் டுக்கு முன் மணிமேகலையைப் பற்றி ஆராய்ந்த திரு. கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் உறுதியாகக் கூறியுள் ளார்கள்.

## காலம்

சாத்தனார் நெடுங்காலம் வாழ்ந்தவராதல் வேண்டும்- ஒட்டக்கூத்தர், பரணர், உருத்திரங்கண்ணனார் போன்ற பெரும்புலவர்களை ஒப்பச் சாததனாரும் நெடுங்காலம் வாழ்ந்தவராதல் வேண்டும். கண்ணகி மதுரைக்குச் சென்ற காலத்தில் கடைச்சங்கம் இருப்பதாகக் குறிப்பு இல்லை. ஊர் காண் காதையில் மதுரைச் சிறப்பனைத்தை யும் கோவலனை முன்னிறுத்திக் காட்டிய இளங்கோவடி கள் அக்காலத்தில் தமிழ்ச்சங்கம் இருந்திருப்பின் அதைக் காட்டாமல் இரார். கடைச்சங்கம் அழிவுற்றபின் அச் சங்கத்தில் வாழ்ந்த பல புலவர்கள் பின் சிலம்பு மேகலை தோன்றிய காலத்திலும் வாழ்ந்தவராதல் வேண்டும். அவ ருள் ஒருவரே சாத்தனாராவார்.

அகநானூற்றிலும் புறநானூற்றிலும் திருவள்ளுவ மாலையிலும் இவருடைய செய்யுட்களும் மருத்துவன் தாமோதரனார் செய்யுட்களும் அடுத்தடுத்துக் காணப் பெறுதலாலும் தாமோதரனார் இவரைப்பற்றிக் கூறியிருத்த லாலும் இருவரும் நெருங்கிய நட்பினரெனக் கருத இட முண்டு என டாக்டர் ஐயர் அவர்கள் தம் முன்னுரையில்

குறித்துள்ளனர். எனவே, சங்கப் புலவராக இவர் இருந்த வர் என்பது தெரிகிறது. பிற புலவர்களோடு சங்கத்திருந்து தமிழாய்ந்து, சங்கம் கலைந்த பின்பும் பாண்டியன் அவை யில் பெரும் புலவராய்த் திகழ்ந்து, கண்ணகியின் வாழ் வியலைக் கண்ணிற் கண்டு, பின் வஞ்சி சென்று இளங்கோ வடிகளின் நண்பராய் வாழ்ந்தார் இவர் என்று கொள்ளல் பொருந்தும். இவருடைய வாய்மை வழுவாப் பண்புநெறி, இவர் புறப்பாடலில் மன்னன் அப்பண்பாட்டாளன் எனக் காட்டுவதிலிருந்தே தெளிவாகும். மேலும் இவர் மன்னன் பால் பெற்ற தண்ணளி அவனைத் திங்களுக்கு ஒப்பிடுவ தால் புலனாகும்.

"ஆரந் தாழ்ந்த அணிகிளர் மார்பின்
தாள்தோய் தடக்கைத் தகைமாண் வழுதி
வல்லை மன்ற நீநயந் தளித்தல்
தேற்றாய் பெரும பொய்யே என்றும்
காய்சினந் தவிராது கடலூர்பு எழுதரும்
ஞாயி றனையைநின் பகைவர்க்குத்
திங்க ளனையை எம்ம னோர்க்கே"

என்ற இவர் பாடல் பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் பற்றியதாகும். இப் பாண்டியன் நெடுஞ் செழியனுக்கு முன்னரோ அல்லது அவன் காலத்திலேயோ பாண்டிய நாட்டின் ஒரு பகுதியிலே வாழ்ந்தவனாதல் வேண்டும். எனினும் பாண்டியன் நெடுஞ்செழியன் ஒப்பற்ற மன்னனாக வாழ்ந்தமையின் அவன் காலத்தில் பாண்டிய நாட்டில் இருவேறு அரசர் இருந்தார் எனக் கொள்ள இடமில்லை. எனவே மூன்று தலைமுறை அளவில் சாத்தனார் வாழ்ந்ததாகக் கொள்ளல் பொருந்துவதாகும்.

இனி, சாத்தனார் மணிமேகலை எழுதிய காலத்தை ஒருவாறு எண்ணிப் பார்க்கலாம். மணிமேகலையில் பல் வேறு சமயங்களையும் சமய நூற்களையும் பற்றிய குறிப்புக் கள் வருகின்றமையின் அது காலத்தால் பிந்தியது என்பது

தேற்றம். எனினும் இந்நூல் கி.பி. இரண்டாவது நூற்றுண்டின் எல்லையில் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பது உண்மை. கயவாகு வேந்தனை வைத்துச் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்த காலத்தைக் கணக்கிடுவர். இலங்கை மகாவம்சம் என்னும் இலங்கை மன்னர் வரலாறு கூறும் நூல் வழி அங்கே இரு கயவாகு மன்னர்கள் ஆண்டனர் என்றும், ஒருவன், முதற் கயவாகு, கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவன் என்றும் அவனே செங்குட்டுவன் ஆற்றிய பத்தினிவிழாவில் கலந்து கொண்டவன் என்றும் அறிஞர் முடிவுகட்டியதோடு, அக் காலம் கி.பி. இரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதி எனவும் கணக்கிட்டுள்ளனர். இளங்கோவடிகள் அக் கண்ணகி விழாவிற்குப் பின்பே தன் சிலம்பினைப் பாடி முடித்திருக்க வேண்டும். எனவே சிலப்பதிகாரம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் எழுந்த நூல் என்று கொள்வது பொருந்துவதாகும். மணிமேகலையும் அத்துடன் இணைந்த காப்பியமாதலால் இதுவும் அதே கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் அல்லது பிற்பகுதியில் தோன்றிய இலக்கியம் எனக் கொள்ளல் பொருந்தும். திரு. கனகசபைப்பிள்ளையவர்கள் இரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதி எனக் கொள்வர்.[1]

சிலர் வேதவியாசர், கிருதகோடி போன்ற சமய நூலாக்கியோரைப் பற்றி இம் மணிமேகலையில் கூறப்பட்டிருப்பதால், சாத்தனுர் காலத்தால் மிகப் பிந்தியவர் என்பர். எனினும் வேதவியாசரும் மீமாம்சை உரையாகிய கிருதகோடியும் கி. பி. மூன்றும் நூற்றுண்டுக்கு முன்பே கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றுண்டிலே இருந்திருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் முடிவு காண்கின்றமையின் அவை எழுந்த காலத்தோ அதற்குச் சற்றே பின்போ அதே இரண்டாம் நூற்றுண்டின் எல்லையில் இந்நூலும் எழுந்ததெனக் கொள்ளலாம். மேலும் மணிமேகலை 3 அல்லது 4-ஆம் நூற்றுண்டில் தோன்றிய மகாயான

1. The great Twin Epics, p. 39.

பௌத்தம் பற்றி ஒன்றும் கூருததும் இக்கொள்கையை வலியுறுத்தும். மூன்ரும் நூற்ருண்டில் பல்லவர் தமிழ்நாட்டில் கால் வைத்துக் காஞ்சியைத் தலைநகராக்கிக் கொண்டு வாழத் தொடங்கினர். எனினும் காஞ்சியைப் பற்றிக் சிறக்கக் காட்டும் சாத்தனுர் அவர்களைப் பற்றிய குறிப்பு ஒன்றையும் கூறவில்லை. இக்காரணத்தாலும் மேலே கண்ட பிற ஏதுக்களாலும் சிலம்பு, மேகலை இரண்டும் கி. பி. இரண்டாம் நூற்ருண்டின் இடைக்காலத்தில் தோன்றிய பெரு நூல்கள் எனக் கொள்வதே ஏற்புடைத்தாகும் அதற்கேற்றவாறு நாட்டின் சூழ்நிலை அமைந்திருந்ததை மேலே கண்டோம்.

ஈண்டுச் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் இச் சாத்தனுரைப் பற்றியும் மணிமேகலையைப் பற்றியும் ஆராய்ந்த சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் கூறியதை நினைவுகூர்தல் இன்றியமையாதது. பலவகைச் சமயக் கண்கொண்டும் அரசோச்சிய சோழன் இளந்திரையன் போன்ருர்களைக் கொண்டும் பிற வகையிலும் ஆராய்ந்து சங்க இலக்கியங்களைப் பாடிய சாத்தனுரே மணிமேகலையைப் பாடினுர் என்றும் இந்நூல் சங்க இலக்கியமாக எண்ணப்பெறும் நிலையில் இன்றெனினும் சங்கம் மருவிய சங்க காலத்தொடு தொடர்புகொண்ட இலக்கியமாகக் கொள்ளவேண்டுவதே என்றும் முடிவுகட்டியுள்ளார்.[1] இந்த முடிவின் அடிப்படையைக் கடந்த ஐப்பது ஆண்டுகளில் யாரும் மாற்றி விளக்கினுர் என்று கூறமுடியாதன்ரே?

## சங்கப் பாடல்கள்

சீத்தலைச் சாத்தனுர் பாடியனவாகச் சங்கத் தொகை நூல்களில் பத்துப் பாடல்கள் உள்ளன. வேறு ஒரு சாத்தனுர் என்பார் பாடிய குறுந்தொகைப் பாடல் (349) ஒன்று உண்டெனவும் கண்டோம். சீத்தலைச் சாத்தனுர் தம்

1. Manimekalai in its Historical Settings, p. xxix

ஒன்பது அகத்திணைப் பாடல்களில் ஐந்திணைகளைப் பற்றியும் பாடியுள்ளார். அகநானூற்றில் பாலைத் திணையில் இரு பாடல்களும் (59, 229) முல்லைத் திணையில் ஒரு பாடலும் (134) மருதத் திணையில் ஒரு பாடலும் (320) பாடியுள்ளார். குறுந்தொகைப் பாடல் (154) பாலைத் திணையைச் சார்ந்தது. நற்றிணையில் உள்ள மூன்றில் இரண்டு குறிஞ்சி (36,331) ஒன்று நெய்தல் (127) திணைகளைச் சார்ந்தவை. இவற்றுள் அகப்பொருள் சிறப்பு மிளிர்ந்து ஒளிர்வதைக் காணலாம். இவற்றுள் தமிழ்நாட்டு மன்னரைப் பற்றிய குறிப்போ வேறு தலைவர்கள் பற்றிய குறிப்போ நேராகவோ உவமவாயிலாகவோ ஒன்றும் இல்லை; முழுக்க முழுக்க அகம் பற்றிய கருத்துக்களே கொண்டுள்ளன.

இவையன்றி மேலே கண்ட புறப் பாடலில் சாத்தனுர் தாம் பாண்டியனுல் பெற்ற தண்ணளியைப் பாராட்டிப் பேசுகின்ருர். தாம் மட்டுமன்றித் தம்மை ஒத்த புலவர்களையும் மற்றவரையும் 'எம்மனோர்' எனச் சேர்த்து அவர்கட்கு அவன் 'திங்களனைய'னுக இருக்கிருன் எனக் காட்டுகிருர். எனவே, இவர் தம் கால அறிஞருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததோடன்றி அரசனுலும் நன்கு மதிக்கப் பெற்றிருந்தார் என்பது தேற்றம்.

## திருவள்ளுவ மாலை

சீத்தலைச் சாத்தனுரால் பாடப்பெற்றதாக வரும் திருவள்ளுவ மாலையில் உள்ள வெண்பா, தமிழ்நாட்டு மூவேந்தரையும் இணைக்கின்ற பாவாக அமைகின்றது. 'முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது, அடிகள் நீரே அருள்க' என இளங்கோவடிகளைச் சாத்தனுர் கூறிச் சிலம்பினைப் பாட வைத்தார் என்ற செய்தியை அதன் பதிகத்தால் அறியும் நாம் இவ்வெண்பாவைப் படிக்கும் போது, இருவரும் ஒருவரே என்ற உணர்ச்சியைப் பெறுகின்ருேம்.

"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்"

என்ற வெண்பா இவருடையது. எனவே சிலப்பதிகாரம் புகார், மதுரை, வஞ்சியைப் பிணிப்பது போன்றும், மணி மேகலை புகார், வஞ்சி காஞ்சியைப் பிணிப்பது போன்றும் இம் மூன்று என்ற எண் இவர் உள்ளத்தை நன்கு பிணித் துள்ளது. இந்த நிலையில் சங்கப் பாடல்களையும் திரு வள்ளுவ மாலைப் பாடலையும் மணிமேகலையையும் பாடிய புலவர் கூலவாணிகம் செய்த சீத்தலை என்ற ஊருக்கு உரியராகிய சாத்தனுரே, இன்று நம் ஆய்வுக்குக்கொள்ளப் பெற்றவர் என்ற அமைவோடு மேலே செல்வோம். இனி மணிமேகலையைப் பற்றி எண்ணுவது பொருந்தும்.

## மணிமேகலை

டாக்டர் போப் அவர்கள் தம் மணிமேகலை மொழி பெயர்ப்பின் முன்னுரையில் கூறியபடி, சிறந்த இலக்கிய மாக மணிமேகலை விளங்கிய போதிலும், பிறவற்ருேடு ஒப்புநோக்கும்போது இந்நூல் மக்களிடம்—சிறப்பாகத் தமிழ் மக்களிடமே அதிகமாகப் பரவவில்லை என்பது கண்கூடு. அவ்வாறு பரவாமைக்கு அவர் காரணம் ஒன்றும் கூருவிடினும் பொதுவாக இலக்கியத் திறன் காணும் நல்லவர்கள் அதன் காரணத்தை ஓரளவு உணர்வார்கள் என்பது தேற்றம். இந்நூலைப் பற்றிக் கனகசபைப்பிள்ளை குறிக்கும்போது இது புத்த சமய நூல்கள் எல்லாவற்றினும் 'முதலில் உண்டான மூல நூல்கள் தவிர்த்து, எல்லா மொழி யினும் மிகப் பழமை வாய்ந்ததென்றும், பாகியான் யூவான்சுவாங் போன்ற சீன யாத்திரிகர் தம் நூல்களையும் மகாவம்சம், தீபவம்சம் போன்ற இலங்கை வரலாற்று நூல்களையும் காட்டினும் மிகப் பழமை வாய்ந்தது என்றும் குறிக்கிருர். மேலும் புத்த சமயம் தமிழகத்தில் கால்கொண்

டிருந்த விதத்தையும் அதன் பல்வேறு தன்மைகளையும் சுட்டிக்காட்டுகிறார்.[1]

மணிமேகலை சங்க இலக்கியங்களை ஒத்த தமிழ் நூல் என்பதும் ஈண்டு எண்ணத்தக்கது. பின்வந்த சீவகசிந்தாமணி, இராமாயணம் போன்ற பல இலக்கியங்கள் மொழிபெயர்ப்பு நூல்களாக அமையச் சிலம்பும், மேகலையும் முழுக்க முழுக்க முதல் தமிழ் நூல்களாகவே அமைவதோடு, அவை இரண்டுமே தமிழ்நாட்டிற்கு வந்த வேற்றுச் சமயங்களை விளக்கும் முதல் நூல்களாகவும் அமைந்துவிட்டன. மேலும் இவை இரண்டும் பிற பேரிலக்கியங்கள் போலாது, கதைகள் நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்த ஆசிரியர்களாலேயே எழுதப்பெற்றமையின் வெறும் கற்பனைகளுக்கு இடமின்றியும் அமைகின்றன.

மணிமேகலைக்குப் பழங்காலத்தில் 'மணிமேகலைத் துறவு' என்ற பெயரே இருந்ததென்பதனை நீலகேசி உரையாலும் சிவஞான சித்தியாரின் பரபக்கத்தாலும் அறிந்துகொள்ள வாய்ப்பு உள்ளது.[2]

## ஏன் சிறக்கவில்லை

இலக்கியம் சமுதாய வாழ்வைக் காட்டும் கண்ணாடி என்பதைக் கண்டோம். எனவே சமுதாயச் சூழல்களை விளக்கும் ஒன்றாக இலக்கியம் அமைவதோடு, அந்தச் சூழல் அடிப்படையைக் கொண்டு, இலக்கியம் என்றும் வாழும் மக்கட் சமுதாயத்துக்கு நிலைத்த உண்மைகளை உணர்த்துவதாகவும் அமையவேண்டும். மணிமேகலையில் அறநெறி, கொல்லாமை, கற்பு போன்ற வாழ்க்கைநெறிகள் நன்கு காட்டப்பெறுகின்றனவேனும், அவற்றுக்ெல்லாம் மேலாக, அது ஒரு சமயத்தின் பெருமையை விளக்கும் நூலாக அமைந்துவிட்டது. அதிலும் தம்

1. The great Twin Epics, pp. 39 & 40 (Foot notes).
2. டாக்டர் உ. வே. சா. பதிப்பு, முன்னுரை 13.

சமயத்தை மட்டும் சாத்தனூர் விளக்கிப் பெருமைப்படுத்தினூர் என்றாலும் இழுக்கில்லை; பிற எல்லாச் சமயங்களைப் பற்றியும் தாமே வலிந்து காட்டவந்து, அவைப்பற்றியெல்லாம் கூறி, அவை பிடிக்கவில்லை என ஒதுக்கப்பெற்று, அவை அனைத்திலும் பௌத்தமே சிறந்தது என மணிமேகலை கொண்டாள் எனக் காட்டுவது சிறந்த ஒன்ருகாது. இதுவே மணிமேகலைக் காப்பியம் மக்களிடம் நல்ல இடத்தைப் பெருமைக்கு முக்கிய காரணமாகும். மணிமேகலையில் இலக்கியச் செறிவும் பிற சிறப்பியல்புகளும் அமைந்திருந்த போதிலும் இந்தச் சமயம் காட்டும் செயலே அதன் வாழ்வில் மாசு உண்டாக்கி இருக்க வேண்டும். இந்த நிலை ஒரு சார்பு பற்றித் தோன்றிய எல்லா இலக்கியங்களுக்கும் காணலாம். சேக்கிழார் தம் பெரிய புராணம் சிறந்த இலக்கியம் என்பதை மறுப்பாரிலர். எனினும் அது சைவ சமயத்தைப் பற்றிப் பாராட்டுவதோடு, பிற சமயங்களைப் பழித்துரைக்கின்றமையின் உலகில் அனைவராலும் ஒருசேரப் போற்றப் பெறவில்லை. சிந்தாமணியும் அப்படியே. சாத்தனூரின் சமகாலத்தவராகிய இளங்கோவடிகள் தாம் சைனராக இருந்தும், காவியத் தலைவன் கோவலன் சைனன் எனக் கொள்ளச் சான்றுகள் இருந்தும் தம் நூலில் சைனக் கொள்கையை விளக்கி காட்டும் அளவுக்கு அவர் நின்ருரே ஒழியப் பிற சமயங்களைப் பற்றிய ஆய்வு ஒன்றையும் கொண்டு, அவை தேவையற்றவை எனத் தள்ளவில்லை; மாருக, சமுதாயத்தில் ஆங்காங்கே வாழும் மக்கள் வழிபடு தெய்வங்களாகப் போற்றப் பெற்ற, கொற்றவை, திருமால் முருகன் ஆகியோரை வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முதலியவற்ருல் பாராட்டிப் போற்றுகின்ருர். ஆய்ச்சியர் குரவைப் பாடல்களை நாம் கேட்கும்போது அவற்றைப் பாடியவர் ஆழ்வாருள் ஒருவரோ என எண்ண வேண்டியுள்ளது. எனவேதான் சிலப்பதிகாரம், 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' எனப் போற்றப் பெற்று வாழ்கின்றது. அத்துணைச் சிறப்பு மணிமேகலைக்கு இல்லை என்ருலும், இதுவும் சமயநெறி மாறுபாடு ஒன்றைத் தவிர்த்து

மற்றைய வகைகள் அனைத்திலும் சமுதாயத்தை நமக்குக் காட்டுகின்றமையின், இதுவும் வாழ்விலக்கியம் என்று போற்றப் பெறும் வகையில் இன்றும் நம்மிடை வாழ்ந்து வருகின்றது.

## நூலில்

சாத்தனார் தம் மணிமேகலையில் பௌத்த சமய உண்மைகளை நன்கு விளக்குகிறார். புத்த தருமத்தையும் புத்த சங்கத்தையும் பலவிடங்களில் விளக்குகிறார், புத்தரைப் பலவிடங்களில் வாயாரப் புகழ்கின்றார்; இவையே புத்த சமய அடிப்படைகள் என்பதை நன்கு காட்டுகின்றார். கொலை செய்யாமை, புலால் மறுத்தல் ஆகிய அறங்களும் காட்டப் பெறுகின்றன. யாகம் செய்யும் கொலைத் தொழிலுக்கு மாறாகவே ஒருபுரட்சிச்சமயமாகத்தோன்றிய பௌத்தம் அதேநெறியைத் தமிழ்நாட்டிலும் பரப்பிற்று. அசோகர் காலத்திலும் அதற்குப் பிறகும் புத்த மதம் தமிழ்நாடு, இலங்கை முதலிய நாடுகளில் பரவின போதிலும் பொது மக்கள் சமயமாக அது மாறவில்லை. சாத்தனார் தம் நூல் வழி அதைப் பொதுமக்கள் சமயமாக மாற்றப் பெருந் தொண்டு செய்துள்ளனர். எனினும் கால வெள்ளத்தில் அதன் நிலைகெட அது நாட்டில் இல்லையாயிற்று.

வைதிக சமயம் பௌத்த சைனங்களுக்கு முன்பே தமிழ் நாட்டில் வந்த ஒன்றாயினும் அது சமயத்திடையே கொலைசெய்யும் வேள்வியை இணைத்தமையின் தமிழ் நாட்டில் முதலில் காலூன்றவில்லை. அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பௌத்தம் தமிழ் நாட்டில் கொலைசெய்யாக் கொள்கையை முன்வைத்துத் தன்னை வளர்த்துக்கொண்டது. அப்படியே சைனமும். ஆனால் ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வைதிக சமயம் தன் அடிப்படைக் கொள்கைகளாகிய கொலை செய்யும் யாகம் சாதிப் பிரிவின் கொடுமை இவைகளை விட்டுத் தமிழ்

நாட்டுப் பழஞ்சமயங்களாகிய சைவம், வைணவம் ஆகியவற்றின் கொள்கைகளேயும் கடவுளர்களேயும் தன்ன கத்தே கொண்டு, யாகம் முதலியவற்றைப் பற்றி அவ்வளவாக வற்புறுத்தாது, தம்மொழி முன் உயர்ந்த தெனக் கூறியதை மறுத்துத் தமிழ்மொழிக்கு ஒத்ததே என்று கூறி. எல்லோரும் சமயத் தலேவராகலாம் என்ற நிலேயை உண்டாக்கிற்று. அப்பர் போன்ருரும் அதனுல் உயர, சம்பந்தர், அப்பூதி போன்ருரும் அவரடி பணியும் நிலேயை உண்டாக்கித் தம்மைத் தாழ்த்திக் கொண்டனர். கோயில் அமைத்து அதில் 'தமிழோடு இசை பாடல் மறந் தறியாத' நிலேயைக் கண்டனர். எனவே, தமிழ் மக்கள் அந்த வைதிக சமயத்தைச் சார, பௌத்தம் சைனம் இரண்டும் தளர்ந்தன. இத்தகைய புரட்சிகளே மாத்திரமின்றிப், புறத்திலும் புத்தர்களுக்குரிய அரச மரங்களின் கீழ், புத்தர் உருவத்தைப் போன்றே பெரிய பிள்ளேயார் உருவத்தை - அந்த ஏழாம் நூற்ருண்டில் பரஞ்சோதியார் வாதாபியை வென்று கொண்டுவந்ததை - எல்லா ஊர்களிலும் நிறுவினர். மேலும் பௌத்த சமண சமயத்தவர் பாலி, வடமொழி முதலியவற்றையே பற்றி நிற்க, வைதிக சமயத்தார் தமிழில் தம் வழிபாட்டை மாற்றிக்கொண்டனர். இத்தகைய மாறுபாடுகளால் ஏழாம் நூற்ருண்டில் வைதிகம் வளர்ந்து, இன்றளவும் சிறுசிறு மாற்றங்களோடு வாழ, அப்போது வீழ்ந்த அந்த இரு சமயங்களும் பிறகு தமிழ்நாட்டில் எழுந்து நடமாடவே யில்லே.

மற்ருெரு காரணமும் இதற்கு உண்டு. பௌத்தம் சைனம் இரண்டும் தமிழ் மரபுக்கு மாறுபட்ட 'துறவி'னே அதிகமாக வற்புறுத்த, சைவரும் வைணவரும் துறவினும் இல்லறமே ஏற்றமெனக் கொண்ட பழந்தமிழ்க் கொள்கை யினேயே பின்பற்றி வாழ்ந்தனர். வைதிக சமயமும் இந்த அடிப்படையை உணர்ந்து, துறவுநிலே பற்றிய தன் சமயத்திலுள்ள ஒரு தனிக் கொள்கையை வலியுறுத்தாது, சைவ, வைணவ நெறி பற்றிப் பண்டைத் தமிழ்க்

கொள்கையைக் காட்டி, அதுவே தன் சமயநெறி எனக் கூறிற்று. எனவே, தமிழர் அம் மதத்தை நன்கு பற்றிக் கொண்டனர். பின் வளர்ந்த வேதாந்த சமயம் முதலியனவும் அந்த நிலையிலேயே தமிழ்நாட்டில் நிலைநிற்க முயன்றும், கொள்கை அடிப்படையிலே மாறுபட்டமையின் இங்கே நிலைபெற்று வாழ முடியவில்லை. இவற்றுக்கிடையில் சில தமிழ் உள்ளம் படைத்த சைன, பௌத்தப் பெரியவர்கள் எழுதிய தத்தம் சமய உண்மைகளை விளக்கும் ஒரு சில நூல்கள் மட்டும், அவற்றின் இலக்கிய வளம் முதலியவற்றின் காரணமாகத் தமிழ்நாட்டில் நிலைத்து, இன்றளவும் வாழ்கின்ற நிலைபேற்றினைப் பெற்றுவிட்டன. அவற்றுள் சைனர் தம் சிந்தாமணியும் பௌத்தர் தம் மணிமேகலையும் சிறந்தனவன்றோ!

## கதை வரலாறு

மணிமேகலையின் கதை நாடறிந்த ஒன்று. எனினும் அதைச் சுருங்கிய அளவிலாவது சொல்லுவது என் கடமையாகும். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. அவள் எப்போது பிறந்தாள் என்பதை, கோவலன் மாதவியை விட்டுப் பிரியும் வரையிலும் நமக்குக் காட்டவில்லை எனினும், பிறகு இளங்கோவடிகள் அக்குழந்தை பிறந்ததையும் அதன் பெயர் மணிமேகலை என அமைந்த காரணத்தையும் சொல்லிவிடுகிறார். கோவலன் கொலையுண்ட காலத்தில் மணிமேகலை தக்க பருவம் பெற்றவளாகவே இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. கோவலன் கொலையுண்டதைக் கேட்ட மாதவி தான் மட்டுமன்றித் தன் மகள் மணிமேகலையையும் துறவில் செலுத்தினாள் என்பதையும் அறிகிறோம். ஆயினும் மணிமேகலை மணிமேகலா தெய்வத்தால் தன் பெயருடைய தீவுக்கு எடுத்துச் செல்லப்படும் முன் அவள் துறவியாயினாள் என்பதற்குச் சான்று இல்லை. மேலும் விழாவறை காதையில் மாதவி தன் மகளைத் துறவிடைப் படுத்தப்போகின்ற நிலையினை,

"மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்த லல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்" —2/55-57

எனக் கூறுவதிலிருந்து, பாட்டியாகிய சித்திராபதி, மணி மேகலையை இந்திர விழாவுக்கு அழைத்துத் தம் தொழிற் படுத்த விரும்புவதையும், மாதவி மறுத்துரைப்பதையும் காண்கிறோம். பிறகு, மணிமேகலை சுதமதி இருவரும் மலர் கொய்யச் சோலை செல்ல, அங்கு உதயகுமரனின் தோற்றத் தால் அஞ்சி இரவில் தங்க, மணிமேகலா தெய்வம் அவ்விரவில் உறங்கிய மணிமேகலையைத் தூக்கிச் சென்றது என அறிகிறோம். எனவே மாதவி தான் துறவி ஆன உடனேயே மகளையும் துறவியாக்கவில்லை என்று தெரிகிறது.

எனினும் கோவலன் மறைந்தபின் குறைந்து மூன்று ஆண்டுகளுக்குள் மணிமேகலை துறவு எய்தினள் என்பது தேற்றம். இந்திர விழாவில் எழுந்த கானல் வரிக்குப்பின் பிரிந்த கோவலன் மறைந்த அடுத்த இந்திர விழாவோ, அன்றி அதற்கடுத்த விழாவோதான் மணிமேகலையில் முதற் காதையில் விழாவாகக் காட்டப்பெறுவது எனக் கொள்ளல் வேண்டும். கோவலன் கொலையுண்டமைக்கும் கண்ணகி விழா எடுப்பதற்கும் இடையில் மூன்றாண்டுகள் கழிந்திருக்கவேண்டும் எனக் காண்கின்றோம். மதுரை யிலிருந்து புறப்பட்ட கண்ணகி 14 நாட்கள் நடந்து சேரர் தம் அகநாடு சென்று இறைநிலையுற்றாள் என்பதும் உடனே செங்குட்டுவன் அவள் சிறப்பறிந்து இமயம் நோக்கிக் கல் எடுக்கச் சென்றான் என்பதும், அவ்வாறு சென்றவன் செயல்முடித்துத் திரும்புமுன் முப்பத்திரண்டு திங்கள் கழிந்தன என்பதைக் கங்கைக் கரையில் 'எண்ணான்கு திங்கள் நீங்கியது' என்று கணி உணர்த் தினான் என்பதும் நாம் அறிந்தவை. செங்குட்டுவன் திரும்பி வந்ததும் விழா நடைபெற்றது. திரும்புவதற்கும் விழா ஏற்பாட்டுக்கும் 3 திங்கள் எனக் கொண்டால்

மொத்தம் 36 திங்கள் அல்லது மூன்றாண்டுகள் ஆகின்றன. அந்த விழாவிற்கு வந்த அடித்தோழி,

"மாதவிதன் துறவும் கேட்டாயோ தோழி
மணிமேகலைத் துறவும் கேட்டாயோ தோழி" — சிலம்பு 29.7

என்று அரற்றுகிறாள். அதைக் கேட்ட செங்குட்டுவன் தேவந்தியை நோக்கி,

"வாய்எடுத்து அரற்றிய மணிமே கலையார்?
யாதுஅவள் துறத்தற்கு ஏது? ஈங்குரை" – சிலம்பு 30/4.5

எனக் கேட்க, தேவந்தி மணிமேகலை மாதவியால் துறவியாக்கப் பெற்ற தன்மையை எடுத்து உரைக்கிறாள். சிலம்பின் இறுதிக் காதையில் இவ்வாறு அறிமுகம் செய்யப்பெற்ற மணிமேகலையே 'மணிமேகலை மேல் உரைப் பொருள் முற்றிய சிலப்பதிகாரம்' என்ற தொடருக்கு இயைய, அடுத்த பெருங் காப்பியத்தின் தலைவியாகின்றாள். இதன் வழி மற்றொன்றும் தெரிகின்றது. அன்று ஆண்ட செங்குட்டுவனுக்கும், நம்மைப்போல் அதுவரை 'மணிமேகலை யார்?' என்பதுகூடத் தெரியாதிருக்கின்றது. மதுரைக்கு எல்லையில் நின்று மாடலன் வழியே மணிமேகலையின் பிறப்பையும் பெயரையும் நமக்கு உணர்த்திய இளங்கோவடிகள், தம் இறுதிக் காதையில்தான் அவள் துறவு எய்தியதனையும் காட்டுகின்றார். 'யாது அவள் துறத்தற்கு ஏது?' என்ற செங்குட்டுவன் வினாவிற்குத் தேவந்தி சில அடிகளால் இறுத்த விடையே பின் அருகிருந்த சாத்தனாரால் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் பெரு நூலாக ஆகப்பெற, இன்று நம்முன் பேசப்பெறும் பொருளாகவும் நிற்கிறது.

## மணிபல்லவம் சார்தல்

இந்திர விழா நடைபெறுவதற்கான முன்னறிவிப்பினை வள்ளுவன் முரசறைய, நாட்டு மக்கள் விழாச்செய்யவிழை

கின்றனர். விழாவிற்குச் செய்ய வேண்டுவன இன்னின்ன என்று வள்ளுவ முதுமகன் திட்டமாக விளக்குகிறான். மக்கள் தம் அணிநகரை அழகுசெய்ய முற்படுகின்றனர். மாதவி தனி இடத்தே துறவுக்கோலத்தில் புத்தநெறியைப் பின்பற்றி அமைதியாக இருக்கிறாள். எந்த விழா தன் தலைவனைத் தன்னிடமிருந்து பிரித்ததோ, அதே விழா நாள் திரும்பத் திரும்ப வரும்போது அவள் உள்ளம் அனலிடை மெழுகென உருக, 'வாடிய மேனி யளாய் இருக்கிறாள் மாதவி. உடன் மகள் மணிமேகலையும் அவள் துணையாகச் சுதமதியும் உள்ளனர். அந்த வேளையில் சித்திராபதியின் சூழ்ச்சி தலைதூக்குகிறது. மணிமேகலையைக் குலத் தொழிலுக்கு ஈர்க்க நினைக்கிறாள் அவள். அதை வசந்த மாலை வழி மாதவிக்கு உணர்த்துகிறாள். அவள் மாதவியிடம் பேசும்போது, 'அனைத்தும் அறிந்து கலைநலம் உணர்ந்தவள் - கற்றுத்துறைபோயவள் - நல்தவம் புரிந்தது நாணுடைத்து' என்கிறாள். இந்த நிலை மாதவிக்கும் முற்றும் பொருந்தும்; ஆயினும் வசந்தமாலை வந்தது மணிமேகலையைக் கொண்டுசெல்லவே என்பதை உற்றறிந்தவளாய்,

''காவலன் பேரூர் கனைஎரி யூட்டிய
மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழில் படாஅள்'' -2/54-57

என்கின்றாள். அதற்குமுன் தான் கற்புடைப் பெண்களைப் போன்று உயிர் நீங்காது நெருப்பிடை மூழ்காதிருந்த நிலையை எண்ணி எண்ணி ஏங்குகிறாள். ஈண்டுச் சாத்தனார் மாதவி குலப்பிறப்பாட்டிற்குரிய குன்றா ஒழுக்கங்கொண்டவள் என்பதை உலகுக்கு உணர்த்துகிறார். மேலும் சித்திராபதி ஒருவேளை தன்னையே இந்திரா விழாவிற்கு ஈர்க்கும் உள்ளத்தளாய் வசந்தமாலையை அனுப்பியிருப்பினும், தான் மட்டுமன்றித் தன் மகளும் அத் திருந்தாச் செய்கைக்கு அனுப்பப் பெறாள் என்பதைத் திட்டமாகக்

காட்டிவிடுகிருள். மேலும் ஈண்டே மாதவி புத்த சமயத்துக்குரிய ஐவகைச் சீலத்தையும் காட்டிப் பிறந்தார் உறும் துன்பத்தை விளக்கி, அதை நீக்கி நலம்பெறத் தான் துறவுகொண்ட-மணிமேகலை கொள்ள இருக்கும் நிலையினையும் உணர்த்துகிருள். இவற்றைக் கேட்ட சித்திராபதி வாளா இருப்பள்கொல்?

## உதயகுமரன்

மணிமேகலையின் எழில் உலகம் அறிந்த ஒன்று. அந் நாட்டு மன்னன் மகன் உதயகுமரன், அவளை அடைய ஏங்கி நின்ருன். அவளைத் தனக்குச் சாதகமாய்ப் பயன் படுத்த நினைத்த சித்திராபதி அதில் வெற்றியும் பெற்று விட்டாள். அதற்கேற்ப மணிமேகலையும் சுதமதியும் மலர் கொய்ய மலர்வனம் அனுப்பப் பெறுகின்றனர். ஈண்டு ஆசிரியர் பூம்புகாரில் உள்ள பல்வேறு வனங்களையெல்லாம் நமக்குக் காட்டி, அவற்றுள் உவவனம் பாதுகாவலானது எனவும் அதில் உள்ள பளிக்கறை துன்பம் வரினும் பாதுகாக்க வல்லது எனவும் கூறுகிருர். உண்மையில் சித்திராபதியால் தூண்டப் பெற்ற உதயகுமரன் மலர் வனம் புக, அவனிடமிருந்த மணிமேகலையை அப்பளிக்கு மண்டபமே காப்பாற்றியதை அறிகிறோம்.

> "பளிக்கறை மண்டபம் பாவையைப் 'புகுக' என்று
> ஒளித்தறை தாழ்கோத்து உள்ளகத்து இரீஇ" –4/87-88

வெளியே சுதமதி நிற்க, உதயகுமரன் வந்து, பளிக்கறை புக முடியாது வருந்தித் திரும்புகிருன். அவனுக்கு அற முரைப்பதன் வழியே சுதமதி உடலின் அவலநிலையை உலகுக்கு உணர்த்துகிருள்.

மாலைப்பொழுது வந்துவிட்டமையின், வழியிடை மன்னகுமரன் தொல்லை தரவும் கூடும் என எண்ணி மணிமேகலையும் சுதமதியும் சக்கரவாளக் கோட்டம் சென்று தங்குகின்றனர். அவ்வாறு செல்லத் தூண்டிய தெய்வம் மணிமேகலா தெய்வமேயாகும். தன் பெயரால் வாழும்

மணிமேகலைக்கு எத்தகைய இடரும் வாராமல் தடுக்க வேண்டும் என்ற நிலையில் மட்டுமன்றி, மணிமேகலையை மணிபல்லவம் தூக்கிச்சென்று, அவளுக்குப் பழம்பிறப்பை உணர்த்தி அமுதசுரபியையும் அளிக்கவேண்டும் என்று மேல்வினை விதிக்கும் வழியாக எண்ணிமிட்டது அது. எனவே சக்கரவாளக் கோட்டத்தில் அவர்கள் உறங்கிய போது, மணிமேகலையைத் தூக்கிக் கொண்டு, விண்வழியே பறந்து தெற்கே 30 யோசனை தூரத்திலுள்ள மணிபல்லவம் என்ற தீவில் கொண்டு சேர்த்தது.

## மணிபல்லவம் எங்கே உள்ளது?

"அந்தரம் ஆரு ஆறைந்து யோசனை
தென்திசை மருங்கின் சென்று திரையுடுத்த
மணிபல் லவத்திடை மணிமேகலா தெய்வம்
அணியிழை தன்னை வைத்தகன் றதுதான்"-6/211-214

என்று சாத்தனூர் நடந்த நிகழ்ச்சியைக் கூறுகின்றூர். அம் மணிபல்லவம் எங்கே உள்ளது? அல்லது அது வெறும் கற்பனை இடமா? மணிமேகலையில் வரும் பல தீவுகளும் நாடுகளும் கற்பனையில் பிறந்தவை யல்ல. சில அதே பெயர்களோடு இன்றும் உள்ளன. மணிபல்லவம் அதே பெயருடன் 'நாகத் தீவு' என்ற மற்ரொரு பொயரையும் தாங்கி இன்றும் தமிழர் வாழிடமாக உள்ளதை அறிதல் வேண்டும். அம்மணிபல்லவத்தே தரும பீடிகை உண் டென்றும் பழம்பிறப்பை அது உணர்த்தவல்ல தென்றும் சாத்தனூர் கூறுகின்றூர்.

"அறவோர்க் கமைந்த ஆசனம் என்றே
நறுமல ரல்லது பிற மலர் சொரியாது
பறவையும் முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி அறத்தகை யாசனம்
கீழ்நில மருங்கின் நாகநா டாளும்
இருவர் மன்னர் ஒரு வழித் தோன்றி
எமதீ தென்றே எடுக்க லாற்றூர்

தம்பெரும் பற்று நீங்கலு நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை உயிர்த்து
தம்பெரும் சேனையொடு வெஞ்சமம் புரிநாள்
இருஞ்செரு ஒழிமின் எமதீ தென்றே
பெருந்தவ முனிவன் இருந்தற முரைக்கும்
பொரு அறு சிறப்பின் புரையோர் ஏத்தும்
தரும பீடிகை''

என்று சாத்தனூர் காட்டிய இதே வரலாறு அந்தச் சிறுதீவுக்குரிய தலபுராணத்திலும் குறிக்கப் பெறுகின்றது. இன்று அங்கே அந்தப் புத்த பீடிகை இல்லையாயினும், புத்தர் தூபி உயர்ந்ததாக எழுப்பப் பெற அதன் அடியில் புத்தர் அடிச் சுவடு பொதித்த தரும பீடிகை காட்சி தருவதையும் இலங்கையிலுள்ள புத்த சமயத்தவர் பலரும் அத்தீவினுக்கு நாள் தோறும் யாத்திரை செல்வதையும் கண்டுகண்டு மகிழ்ந்தவன் நான். அந்தப் புத்த தூபியின் அருகில்—அதனோடு அமைந்த புத்த பீடிகையினையும் சுற்றி அமைந்துள்ள சோலையின் அமைதியினையும் கண்டும் கருதியும்—நிற்பின் நம்மை மறந்த நிலையினை நாமடைவோம். மணிமேகலை கண்ட அப்பீடிகைதான் இதுவோ என்ற உணர்வு நமக்குத் தோன்றும் போது நாமும் அந்தப் பெருந்தலைவியின்வழித் தொண்டரான உணர்வு பிறக்கிறது. அண்மையில் கோமுகிப் பொய்கை இல்லையாயினும் அது இருந்த இடம் 'புத்தர் பள்ளம்' என்னும் பெயரால் பொட்டலான பள்ளமாக இன்றும் உள்ளது. எனினும் அந்த நிலம் நான் கண்டபோது தனி ஒருவருக்குச் சொந்தமாகி, வேலியிடப் பட்டிருந்தது. அதையும் பொது விடமாக்க வேண்டும் என்று யாத்திரிகர்கள் பேசிக்கொண்டனர்.

அத் தீவின் ஒரு புறம் இலங்கை வாழ் புத்த மதத்தினரும் பிறநாடுகளின் புத்த சமயத்தவரும் சென்று பீடிகையை வழிபடும் அதே வேளையில், அத்தீவின் கடற்கரையில் அமைந்த 'நாக கன்னிகை'யின் கோயிலை இலங்கை வாழ் இந்துக்களும் பிறரும் நாள்தொறும் சென்று வழிபடுகின்றனர், தமிழ்நாட்டு அமைப்பிலே அமைந்த

அக் கோயிலில் தமிழ்நாட்டு மக்களே அர்ச்சகராக அமர்ந்து வழிபாடாற்றுகின்றனர். ஆண்டுதொறும் பெரு விழா நடைபெறுகின்றது. அது காலையில் பல்லோர் கூடி விழா எடுக்கின்றனர்.

நாக நாட்டிலிருந்து வந்த இருமன்னர் பீடிகைக்காகப் போட்டியிட, பீடிகை 'தமது' என், இடையில் வந்த புத்த சாரணர், அதைத் 'தமது' எனக் கொண்டு சென்றமையின் அந்நாக நாட்டு மன்னர் இருவரும் தம்முள்மாறுபட்டதற்கு கன்னிகையின் உருவமைத்துக் கோயில் கட்டி வழிபட, அது பிறகு பெருங்கோயிலாக அமைந்தது என்பர். மேலும் அந்நாள் முதல் அத் தீவும் நாகத் தீவு என்றே அழைக்கப் பெறுகின்றது. 'மணிபல்லவம்' என்ற அதன் பண்டைப் பெயர் மெல்ல மறைய நாகத் தீவு என்றே பலருக்கும் இன்று அத்தீவு அறிமுகமாகின்றது.

இத் தீவு யாழ்பாணக் கரையிலிருந்து சுமார் 30 கல் தொலைவில் தென்மேற்கில்—புகாருக்கு நேர் தெற்கெனும் படி—சிறு தீவாக ஐந்து கல் சுற்றளவுள்ளதாக அமைந் துள்ளது. அதற்கு நாள்தோறும் சென்று வருவதற்கு வசதி யாக—இருசமயத்தோரும் தூய தலமாக அதைக் கருதி வழிபடச் செல்கின்ற காரணத்தால்—விசைப் படகுகளைச் செலுத்த ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது. அத் தீவிலேயே வசிக்கும் மக்கட்தொகை எண்ணிக்கையில் குறைந்துள்ள தாயினும் நாள்தோறும் இருசமயத்தைச் சார்ந்தவர்களும் பலப்பலராகச் சென்று வழிபாடாற்றி வருகின்றனர். அத் தீவில் கால்வைத்துப் புத்த பீடிகையையும் நாக கன்னிகை யின் நன்றேற்றத்தையும் அவற்றின் இயற்கைச் சூழலையும் கண்டு மகிழ்ந்த யாரும் அந்தத் தீவினை விடுத்துவர மனம் விரும்பார். ஆம்; அத்தகைய இயற்கை எழிலோடு இன்று, அன்று மணிமேகலை பழம்பிறப்புணர்ந்த பண்பார் தீவு, சிறக்கத் தன் தெய்வநலம் கெடாத வகையில் நலமுற்று-நலம் தந்து இன்றும் உயர்ந்துள்ளது.

## சென்றதும் வருவதும்

புகாரின் சக்கரவாளக் கோட்டத்தில் உறங்கிய மணிமேகலை, விழித்ததும் புது இடத்தில் இருப்பதறிந்து மயங்கி வருந்தித் தன் தந்தையையும் அன்னையையும் நினைத்துப் புலம்பும்போது எதிரில் புத்த பீடிகை தோன்றுகின்றது. அதைக் கண்டதும், மணிமேகலை தெளிவுபெற்று, அதை வலம் வருகிறாள். அது அவளுடைய முன்னைப் பிறப்பினையும், அப்பிறப்பில் அவள் இலக்குமி என்ற அரச மகளாய்ப் பிறந்து இராகுலன் என்னும் அரச மகனை மணம் செய்து கொண்டு வாழ்ந்த வகையினையும் அறிய வைக்கின்றது. அப் பிறப்பில் பிரமதத்தனை வழிபட, வரும் பிறப்புக்களை அவர் வழி அறிந்ததையும் காட்டுகிறது. அதே வேளையில் மணிமேகலா தெய்வம் அங்குத் தோன்றி, மணிமேகலைக்குப் பல உண்மைகளை உணர்த்துகின்றது. அவள் கணவனை இராகுலனே—முந்தைப் பிறப்பின் கணவனே—அது காலை உதயகுமரனாகப் பிறந்துள்ளான் என்பதையும் அதனாலேயே அவள் விரும்பாவிடினும் பளிக்கறையில் அவள் உள்ளம் அவன்பால் சென்றநிலையையும் சுட்டியதோடு, மாதவி, சுதமதி இருவரும் சென்ற பிறப்பில் அவள் தமக்கையர் என்பதையும் உணர்த்துகிறது. மேலும் அவள் வருங்காலத்துக்குத் துணையாக அமைய, வேற்றுருப் பெறுவதற்கும், விண்வழிப் பறப்பதற்கும், பசியாதிருப்பதற்குமாக மூன்று மந்திரங்களைச் சொல்லித் தந்து செல்கின்றது.

பின் அத் தீவை வலம்வரும் மணிமேகலையைத் தீவதிலகை காண்கிறாள். அவள் வழியே ஆபுத்திரனின் அமுதசுரபியைப் பற்றி அறிய, அப்பாத்திரத்தினைப் பெற விழைகிறாள் மணிமேகலை. அப்பத்திரம்,

''கோமுகி என்னும் கொழுநீ ரிலஞ்சி
இருது இளவேனில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையின்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்''—11/39-43

நிலையினையும் தீவதிலகை கூறுகிருள். அந்த எல்லையைக் குறிக்கும்போது வைகாசித் திங்கள் நிறைமதி நாளில் விசாக நட்சத்திரம் பொருந்தும் சிறந்த நாளாகிய—புத்தர் ஞானேதயம், பரிநிருவாணம் பெற்ற நாளாகிய—அந்தச் சிறந்த நாளில் சுரபி தோன்றும் எனக் குறிக்கின்ருள். இதன்வழி அக்காலத்தில் கார்த்திகையே நட்சத்திரங்களின் முதலாகக் கணக்கிடப் பெற்றமை அறிகிருேம். 'மீனத் திடைநிலை மீனம்' என்று விசாகம் குறிக்கப்பெறுவதால் 27-இல் இடைமீன் அது என அறிய முடிகின்றது. எனவே மணிமேகலை காலத்தில் கார்த்திகை முதல் மீனுகக் கணக் கிடப் பெற்றது என அறிகிருேம். இந்நிலை மாறி அசுவனி எப்போது முதல் நட்சத்திரமாகக் கணக்கிடப் பெற்றது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மணிமேகலை அப்பொய்கைக்குச் சென்ற நேரம் அது வாதலின் அப்பாத்திரம் அவள் கையிலடைய, அந்நிலை உணர்ந்த அவள் தன்னை மறந்து புத்த தேவனைப் போற்று கிருள். அருகிருந்த தீவதிலகையும் அவளுடன் வழி பாட்டிற் கலந்ததோடு, அமுதசுரபியின் சிறப்பைக் கூறி, அத்துடன் பசிக் கொடுமைகளை விளக்கி, அப்பசியை நீக்கும் அறமே சிறந்ததெனக் காட்டி, முன்னைப் பிறவியில் நல்லவரை உண்பித்த பயனே அப் பிறவியில் மணி மேகலைக்கு அப் பாத்திரத்தைப் பெற வைத்தது என உணர்த்துகிருள். மணிமேகலை நாவலந்தீவு பசியால் வாடு வதையும் உடன் சென்று உதவவேண்டும் நிலையினையும் உணர்த்திப் புறப்பட்டு விண்வழியே புகார் அடைந்து தன்னை பிரிந்து வருந்தும் மாதவி, சுதமதி மகிழ அமுதசுரபி யொடு நிற்கிருள்.

## அறவண அடிகள்

சாத்தனுர் இந்த இடத்தில் பௌத்த சமயப் பெருந் துறவியாம் அறவண அடிகளை நமக்கு அறிமுகப்படுத்தி வைக்கிருர். கதைப் போக்கில் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் கூறிவிடாது, கேட்பாக்கு விருப்பம் உண்டாகும்

வகையில் சிலவற்றைப் பின்னுல் கேட்டு உணரும்படியாக அமைத்து விடுகிருர். அமுதசுரபியைப் பற்றிச் சொல்லிய தீவதிலகை அதன் திறத்தையும் வரலாற்றையும் 'நின் ஊர் அறவணன் தன்பால் கேட்குவை' என்று விட்டுவிட, அதைக் கேட்டறியவும் பிற உணரவும் புகார் வந்த மணி மேகலை, மாதவி, சுதமதியுடன் அவரை நாடிச் செல்கிருள். அவரை அறிமுகம் செய்கையில்,

> "நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின்
> உரைமு தாளன்" —12/3-4

என்று சொல்லி வயதினையும் அதே வேளையில் நடுங்காத தெளிந்த நாவன்மையினையும் குறிக்கிருர் சாத்தனுர். மணி மேகலையின் முன்னைப் பிறவி நாளிலும் அறவணர் இருந்த மையின் அவர் வயதானவராக உள்ளனர்; வாழ்க்கை அநுபவம்—சமய உணர்வு—வருவதறியும் தகுதி—உரிய செயலாற்றுந் திறன் அனைத்தும் அவரிடம் உள்ளன. அறவண அடிகள் மாதவி, சுமதி ஆகியோர் பழம்பிறப்பி லும் தான் கொண்ட தொடர்பினைக் காட்டுகிருர். உடன் அடிகள் வழியே, சாத்தனுர் புத்த தேவன் தோற்றம், திறன் பிற நிகழ்ச்சிகள் அனைத்தையும் உணர்த்துகிருர். பின் பசிப்பிணி தீர்க்க வேண்டுமெனக் கூறி, அமுதசுரபி பெற்ற ஆபுத்திரன் வரலாற்றைக் கூறுகின்ருர்.

## ஆபுத்திரன் வரலாறு

ஆபுத்திரன் வரலாற்றைக் கூறும் வகையில் வேத வேள்வி புரியும் வைதிக நெறியைக் கடிந்து கொல்லா அறமே நல்லறம் என்ற தம் சமயக் கொள்கையை வற் புறுத்துகிருர் சாத்தனுர். அதே வேளையில் வைதிகர் தம் சாதி வேறுபாட்டுக் கொள்கையை அவர்தம் சமய அடிப் படை காட்டிக் கடிகிருர். மேலும் பசு, நாட்டின் செல்வ மாகி உயிரூட்டும் பண்பினைப் பாராட்டுகிருர். ஆபுத் திரன் சாலியின் மகனுகப் பிறந்து வயனங்கோட்டு அந்தணனுல் வளர்க்கப் பெற்று, வேள்வியைத் தகர்ந்து

பின் 'மாமறை மாக்களால்' ஒதுக்கப்பெற்று, மதுரையில் சிந்தாதேவியின் அருளால் அமுத சுரபியைப் பெற்றதைச் சொல்லுகிறார்.

''விடுநில மருங்கில் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டுச் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சொடு அருள்சிறந் தூட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை —13/51-55

என்று பசுவின் ஏற்றத்தையும்,

" ஆன்மகன் அசலன் மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்றும்
நரிமக னல்லனோ கேச கம்பளன்?
இங்கிவர் நும்குலத் திருடி கணங்களென்
றோங்குயர் பெருஞ்சிறப் புரைத்தலும் உண்டால்
ஆவொடு வந்த அழிகுலம் உண்டோ
நான்மறை மாக்காள்'' –13/63-69

என்று பலரும் பிறந்து உயர் ஒழுக்குற்று மறைவிளி பயிற்றிச் சிறந்தார் ஆயினமை காட்டிப், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற உண்மையையும் நிலைநாட்டுகிறார். மேலும் சாதியால் மிக்காராகத் தம்மைக் கருதும் அப் பார்ப்பன மாக்களை, 'மாக்கள்' என்றே சுட்டி, மக்களினத்துக் கீழ்ப்பட்டார் என்பதை நிறுவுகிறார். சாத்தனார் புரட்சிக் கவிஞர் என்பதைக்காட்டப் பின் பல கருத்துக்கள் காணப்போகும் நமக்கு இது ஓர் எடுத்துக்காட்டு என இங்கே அமைகிறேன்.

ஆபுத்திரன் பாத்திரம் பெற்றதைச் சொல்லிப் பின் அவன் கொடைநலத்தால் இந்திரன் குலைந்ததைக் காட்டி, மாறாக, அவன் மழைநலம் பெருக்க விளையுள் மிக தன் அமுதசுரபிக்கு வேலையின்மையின், சாவக நாட்டில் பஞ்சம் என அறிந்து அங்கே செல்லப் புறப்பட்ட ஆபுத்

திரன் இடையில் மணிபல்லவத்தில் இறங்கவும் தன்னை விட்டுக் கப்பல் புறப்பட்டபின், அங்கேயே அமுதசுரபி யைப் பொய்கையில் விட்டுத் தான் உண்ணுநோன்பிருந்து உயிர் விட்டதையும், பின் அவன் விரும்பிச் சென்ற சாவக நாட்டிலே ஆ வயிற்றில் பிறந்து, பின் அரசனுகி ஆள்வதை யும் கூறினர். (அவன் மதுரைக்குக் கிழக்கே இருந்த கொற் கைத் துறைமுகத்தில் புறப்பட்டு இலங்கையைச் சுற்றிச் செல்லும் கப்பலில் சென்றிருக்கவேண்டும்.) பின் அமுத சுரபியால் மக்கட்கு உணவிடப் பணித்தனர். பிறகு அந்த அமுதசுரபி அதுபோது வெறுமையாக இருந்தமையின் கற் புடை மாதர் முதலில் அதில் பிச்சை இடின் பிறகு பெருகும் என்றும் அக்கற்புடை மாதராய்ப் பூம்புகாரில் சிறக்க உள்ளவள் ஆதிரையே என்றும் வித்தியாதர நாட்டுக் காய சண்டிகை காட்டி உணர்த்துகிருள். இவள் ஒரு புதிய பாத்திரமாக இங்கே அமைகிருள். பின் மணி மேகலை அவ்வாதிரை நல்லாள் வீட்டில் சென்று 'புனையா ஓவியம்' போல நிற்க.

> "பாரக மடங்கலும் பசிப்பிணி அறுகென
> ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து" (16/134-135)

எனக் காட்டுகிருர் சாத்தனுர்.

## ஆதிரை

ஆதிரையின் வரலாறு கூறுவதன்வழி, அவள் கணவன் சாதுவன் கணிகையொடு வாழ்ந்த வாழ்க்கையும், பின் இழந்த பொருள், ஈட்ட மரக் கலத்துச் சென்றதும், கலம் உடைய அவன் இறந்தானென ஆதிரை தீயிடை மூழ்க அது சுடாது நின்றதும், தன் நிலைக்கு வருந்த அசரீரி சாது வன் இறக்கவில்லை என உணர்த்தியதும், அவள் 'பொய்கை புக்காடிப் போதுவாள் போன்று' தீயிடை யிருந்து வந்ததும், அவன் நாகர் தீவில் அங்கே வாழ்ந்த நலமிலார் வாழ்வைத் திருத்தியதும், பின்வந்து மனைவி யோடு வாழ்ந்ததும் எடுத்துக் காட்டுகிருர். நாகர் நாட்டில்

அவன் கூறும் அறிவுரைவழியே கள், காமம், புலால் முத லிய பாதங்கள் ஒழியவேண்டிய நன்னெறி வாழ்வையும். உயிருக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பு முதலியவற் றையும் காட்டிச் சமய நெறியையும் அறவாழ்வையும் சாத்தனுர் வற்புறுத்துகிருர். இவற்றைப் பின் சமுதாய— சமய நெறி காணும்போது நன்கு காணலாம்.

## காயசண்டிகை - உதயகுமரன் முடிவு

ஆதிரை யிட்டதை ஏற்ற மணிமேகலே உலக அறவி யில் சென்று அனைவருக்கும் உணவளிக்கிருள். அதற்கு முன் ஆதிரையின் தன்மையை உணர்த்திய காயசண்டி கையின் யானைப்பசியினைப் போக்க, அவள் பசி நீங்கி வித்தியாதர நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்கிருள். அதே வேளையில் அவள் கணவன் தன் மனைவியிடம், குறித்த கால எல்லை கடக்கும் நிலையில் நேரில் காண வருகின்ருன், உதயகுமாரனுல் தனக்கு ஊறு வரும் என உணர்ந்த மணி மேகலை தன் உருவைக் காயசண்டிகையாக மாற்றிக் கொண்டு உலக அறிவிலேயே அறம் செய்கிருள். வந்த வித்தியாதரனுகிய காஞ்சனன் அவளே காயசண்டிகை எனக் கைப்பற்ற நினைக்கிருன். இடையில் மணிமேகலை யைத் தேடி, உதயகுமரன் வர அவன் மறைந்து காண் கிருன். முந்தைப் பிறப்பின் கணவனுன உதயகுமரன் வரவே அவனை வணங்கி அறமுரைக்கிருள் மணி மேகலை. இங்கேயும் சாத்தனுர் தம் சமய நெறியையும் துறவு நெறியையும் வற்புறுத்துகிருர். மறைந்திருந்த காஞ்சனன் வேறு வகையில் எண்ணுகிருன். மணிமேகலை யினையே காயசண்டிகை எனக் கருதி, அவள் அரச குமரன் வயப்பட்டமையாலேயே தன் நாட்டுக்கு வர வில்லை எனவும் தன்னைப் புறக்கணித்தாள் எனவும் கருதி, மறைந்திருந்து அரசகுமரன் வரவை எதிர்பார்க்கிருன். உலக அறவியிலுள்ள மணிமேகலையை எப்படியும் கொள் ளும் எண்ணத்தோடு இரவில் வருகிற உதயகுமாரன் அவன் வாளால் மடிகிருன். பின் காஞ்சனன் காயசண்டி

கையாக நிற்கும் மணிமேகலையை நினைத்துப் பற்றப் போகையில், கந்திற் பாவை அவள் காயசண்டிகை அல்லள் எனவும், விண்விழிப் பறந்து வருகையில் விந்தா கடிகையின்மேல் செல்லலாகாதென அறியாது செல்ல, அக் காவல் தெய்வ தன் சாயையால் அவளைப் பற்றி அடக்கியதெனவும் கூற, அவன் வருந்தித் தன்னுடு செல்கிருன். பின் மணிமேகலை வந்து உதயகுமரன் வாளால் வெட்டுண்டிருப்பதை அறிந்து அருகில் செல்ல, கந்திற்பாவை தடுத்து, உண்மையை உரைக்க. உணர்வுபெற்று, காயசண்டிகை வடிவினை மாற்றிக்கொள்ளுகிருள்.

> ''பிறந்தோர் இறத்தலும் இறந்தோர் பிறத்தலும்
> அறந்தரு சால்பும் மறந்தரு துன்பமும்
> யான்நினக் குரைத்துநின் இடர்வினை ஒழிக்க
> காய சண்டிகை வடிவானேன் காதல்'' —21/19-22

என்று கூறி மணிமேகலை உதயகுமரன் உடலிடம் செல்வதும், கந்திற்பாவை.

> ''செல்லல் செல்லல் சேயரி நெடுங்கண்
> அல்லியந் தாரோன் தன்பால் செல்லல்
> நினக்கிவன் மகனுத் தோன்றி யதூஉம்
> மனக்கினி யார்க்குநீ மகளா யதூஉம்
> பண்டும் பண்டும் பல்பிறப் புளவால்
> கண்ட பிறவியே அல்ல காரிகை
> தடுமாறு பிறவித் தாழ்தரு தோற்றம்
> விடுமாறு முயல்வோய் விழுமங் கொல்லோ'' -21/27-34

எனக் கூறித் தடுப்பதும் எண்ணற்பாலன. ஒருவருக்கு ஒருவர் உற்ற பந்தம் ஒரு பிறவியில் மட்டுமன்றித் தொடர்ந்து எண்ணற்ற பிறவிகளில் வரும் என்பதும், பற்றற்ற நிலையிலும் சற்றே தளரினும் முன்னை வினைவந்து பற்றச் சமயம் பார்க்கும் என்பதும் இவற்ருல் உணர்ந்திட முடிகின்றனவன்ருே!

## அரசியல் தொடர்பு

இடையில் மணிமேகலை அரசன் துணைக்கொண்டு சிறைக் கோட்டத்தை அறக்கோட்ட மாக்கி, அங்குள் ளார்க்கு உணவு அளித்துக் காப்பாற்றுகிறாள்.

"அரசன் ஆணையின் ஆயிழை அருளால்
நிரயக் கொடுஞ்சிறை நீங்கிய கோட்டம்
தீப்பிறப் புழந்தோர் செய்வினைப் பயத்தால்
யாப்புடை நல்பிறப் பெய்தினர் போல
பொருள்புரி நெஞ்சின் புலவோர் கோயிலும்
அருள்புரி நெஞ்சத் தறவோர் பள்ளியும்
அட்டிற் சாலையும் அருந்துநர் சாலையும்
கட்டுடைச் செல்வர் காப்புடைத் தாயது" –20/1–9

உதயகுமரன் வாளால் வெட்டுண்டதை முனிவரால் அறிந்த அரசன் தன்னால் கடியப்படவேண்டியவன் காஞ் சனால் கொல்லப்பட்டமைக்கு வருந்தி மணிமேகலையைச் சிறை செய்கிறான்,

## அரசியின் வஞ்சகம்

அரசியோ தன் மகன் மறைவுக்குக் காரணமாய மணி மேகலையைத் தன்னிடம் அனுப்பவேண்டிப் பெற்று, அவ ளைப் பழிவாங்க நினைக்கிறாள். மறுபிறப்பறிந்தமையின் பித் திடு மருந்தால் பிழைபடாதும், ஊணொழி மந்திரத்தால் புழுக் கறை தப்பியும், மாற்றுருவத்தால் மற்றொரு கொடுமை பிழைத்தும் நின்ற நிலைகண்ட அரசி, அஞ்சி, அவளடி பணிந்து மன்னிப்பு வேண்டுகிறாள். முந்தைப் பிறப்பின் கணவனின் தாயானமையின் அக் கொடுமையை மணி மேகலை ஏற்றுக் கொள்ளவில்லை. அவளுக்கு அறம் பல உணர்த்துகிறாள். சாத்தனார் ஈண்டு ஐம்பெரும் பாவங் கள் பற்றியும் பிறவற்றையும் விளக்குகிறார். இந்த நிலையில் மணிமேகலையைத் தேடிக்கொண்டு வந்த சித்திராபதி அவ ளைத் தன்னுடன் அனுப்புமாறுவேண்ட, அரசி மறுக்கிறாள்.

அதே வேளையில் மாதவியுடன் அறவண அடிகள் அங்கு வர அனைத்தும் செம்மையாக முடிகின்றது. அடுத்து, இந்திர விழா எடுக்கா நிலையில் அழியப்போகும் புகாரின் நிலையையும் பிறவற்றையும் ஈண்டுச் சாத்தனர் விளக்குகிறார். அறவண அடிகள் வழியே வினைகளைப் பற்றியும் விளக்குகிறார், மணிமேகலை அவர்களை விடுத்து ஆபுத்திரன் வாழ்ந்துவரும் சாவக நாடு செல்கிறாள்.

சாவக நாட்டினைச் சிலர் ஜாவா என்றும் சிலர் சுமத்திரா என்றும் சொல்லுவர். இரண்டையும் சாவகம் என்பர் டாலமி.[1] அந்தப் பழம்பெருந் தீவுகள் இணைந்தபகுதிக்கே சாவக நாடு என்று (இன்று போல அன்றும்) ஒரே பெயர் இருந்தது எனக் கொள்ளினும் தவறில்லை. எனினும் இன்று அங்கே ஆபுத்திரன் ஆண்டதற்கான சான்றுகளோ கதைகளோ வேறு சிறப்புகளோ தெளிவாக இல்லையேனும் இது போன்ற கதைகள் சில நாட்டுப்புறங்களில் வழக்கத்தில் உள்ளன என்பர் ஆய்வாளர்.[2]

## ஆபுத்திரனுடன்

நாகநாடு, நாகபுரம் என்பன யாவை என அறியாது தடுமாறுவோருக்கு இந்நாடும் நகரும் தெளிவு தருகின்றன. ஆபுத்திரன் நாடு எனினும் அதன் தலைநகர் நாகபுரம் எனவே கொள்ளப்பெறுகின்றது. நாகநாடு அல்லது சாவக நாடு என்பதில் ஒன்று அத்தீவுகளுக்குப் பொதுப் பெயராகவும் மற்றொன்று நாகபுரத் தலைநகரை உடைய தீவுக்கு உரிய பெயராகவும் கொள்ளல் பொருந்தும்.

இந் நாகநாட்டொடு தொடர்பு கொண்ட காரணத்தினாலேயே தமிழ்நாட்டுக் கடல் வாணிகத்தில் சிறந்தஇடங்கள் நாகூர், நாகப்பட்டினம் என்ற பெயர்களைப்பெற்றன. நாகப்பட்டினத்தில் புத்தவிகாரம் இருந்ததும் வரலாற்று உண்மை. சாவகம் என்பது தமிழ் நூல்களில் கூறப்படும்

1. The Great twin epics. By Kanakasabai Pillai, page 81
2. " " "

18 மொழிகளுள் ஒன்று (திவாகரம்) என்பதும், அம்மொழி வழங்கிய சுமத்திரா, ஜாவா உள்ளிட்ட தீவுகளின் தொகுதியே சாவக நாடு என்பதும் பல்கலைக் கழக அகராதி வழியே தெளியும் செய்திகள் ஆகும்.[1] எனவே இந்நாட்டின் தலைநகரில் வாழ்ந்த ஆபுத்திரனைக் கண்டு மணிமேகலை, அவனை மணிபல்லவம் வரப்பணித்துத் தான் பறந்து சென்று அத் தீவை அடைகிறாள். ஆண்டு அவள் பீடிகையைக் கண்டு, பழம் பிறப்புணர்ச்சியால் பல உண்மைகள் உணர்ந்து தன்வசமிழந்து நிற்கிறாள். புண்ணியராசன் என்ற பெயர் கொண்ட ஆபுத்திரன் ஆண்டுவர, அவனுக்குப் பழம்பிறப்பை உணர்த்த, தீவதிலகை அங்கே அவன் இறந்ததையும், அவனை விட்டுச் சென்ற மரக்கலச் செட்டிகள் திரும்பிவந்து உயிர்விட்டதையும் கூறி, அந்தப் பழம் பிறப்பு கொண்ட எலும்புகளையும் காட்டுகிறாள். இதற்கிடையில் மகன் பிரிவால் மாழ்கிய கிள்ளிவளவன் இந்திர விழாவை மறக்க, புகார் கடலால் கொள்ளப்பெற்றது. தீவதிலகை அதையும், அறவணரும் மாதவியும் வஞ்சிக்குச் சென்றமையையும் கூறி மணிமேகலையையும் வஞ்சிக்குச் செல்லச் சொல்லுகிறாள், அங்கும் வருவன பற்றிய சிலவற்றைச் சொல்லாது,'வஞ்சியள் அறவணன்பால் கேட்பை' எனக் கதை கேட்க நம்மை ஏங்க வைக்கிறார், பின் மணிமேகலை புண்ணியராசனுககு,

"அறம்எனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்" -25/228-231

என அறம் உணர்த்த, அவனும் அவ்வறத்தை மேற்கொள்வேன் என உறுதி கூற, அவனிடமும் தீவதிலகையிடமும் விடைபெற்று விசும்பாறுக வஞ்சிநகர் நோக்கிப் புறப்படுகிறாள் மணிமேகலை.

1. Vol. III page 1392

## தாயினைக் காணல்

கண்ணகி கோயில் கொண்ட இடம் வஞ்சியல்லவா! தன் உளம் உந்த வஞ்சியடைந்து, கண்ணகிமுன் சென்று,

"அற்புக்கட னில்லாது நற்றவம் படராது
கற்புக்கடன் பூண்டு நுங்கடன் முடித்தது
அருளல் வேண்டும்" -26/7-8

என்று கேட்டுக்கொள்கிறாள். அதற்குக் கண்ணகிதேவி தனக்கு மதுராபுரித் தெய்வம் கூறிய முன்னை வினையெல்லாம் முற்றக் கூறியதோடு அமையாது, தனக்கு மேலும் பிறவி உண்டென்பதை உணர்த்துகிறாள். சிலப்பதிகாரத்தைப் படித்த நமக்கு கண்ணகி தெய்வமானாள் என்ற உணர்வும் அவள் பிறவா நிலை பெற்றுள்ளாள் என்ற உணர்வுமே தோன்றுகின்றன. எனினும் மணிமேகலையே அவள் இன்னும் பிறக்கப்போகிறாள் என்பதையும் அதற்குக் காரணம் அவள் கொண்ட சீற்றமே என்பதையும் விளக்குகிறது. கண்ணகி கணவனோடு சுவர்க்கம் புகுந்தாள் என்றே சிலம்பு கூறுகிறது. அச்சுவர்க்க வாழ்க்கை நிலையற்றதென்பதை இந்திரன் முன்னாலேயே ஆபுத்திரனால் விளக்கிய சாத்தனார், அச்சுவர்க்கம் சென்றார் திரும்பவும் மண்ணில்பிறந்து புண்ணிய பாவ வினைகளைத் துய்த்த பிறகேதான் பிறவாப் பெருநெறி அடைவர் என்பதையும் கண்ணகி வாயிலாகவே காட்டுகிறார். சைவ சமயம் போன்ற பிறவற்றுள்ளும் இவ்வுண்மை ஏற்றுக் கொள்ளப் பெறுவதேயாம். சுவர்க்க வாழ்வு நிலைத்த ஒன்றன்று என்பதும் இறைநிலையுறும் பேரின்ப வாழ்வே பெருவாழ்வு என்பதும் சமய உண்மைகள்.

## சமயம் உணர்தல்

தாயை வணங்கி அவள் அறிவுரை ஏற்றபின், மணிமேகலை வஞ்சியில் வாழ்ந்த பல சமயத்தவர் கொள்கைகளையும் கேட்டு அறிய விரும்புகிறாள். அதற்குத் தன் இளமை

உரு ஏற்றதன்றென முதிர்ந்த தவசி வேடங் கொண்டு ஒவ்வொரு சமயத் தலைவரிடமும்சென்று பற்பல உண்மை களைக் கேட்டறிகிறாள். அளவைவாதி, சைவவாதி, பிரம வாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசிவகவாதி, நிகண்ட வாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி ஆகியோ ரைக் காண்கிறாள். எனினும் சாத்தனார் ஐவகைச் சமயமும் அறிந்தாள் என்கிறார். இவற்றைப்பற்றிப் பின்னர்க் காண்போம். இச் சமயங்களுள் சில தற்போது நாட்டில் இல்லை; சில வேறு பெயர்களில் உள்ளன. அக்காலத்தில் சைவம், வைணவம், வைதிகம் என்ற மூன்றும் தனித்தனிச் சமயங்களாக இருந்தனவே அன்றி, மூன்றும் கூடிய கலவையாக இந்து சமயம் இல்லை என்பதும் தேற்றம். மணிமேகலை பிற சமயங்களையெல்லாம் பற்றி ஒன்றும் கூறுது கடவுளே இல்லை என்னும் பூதவாதக் கொள்கையை மட்டும் கண்டிக்கிறாள், சமயங்கள் பல அறிந்தபின் தன் பௌத்தமே மேலோங்கியதென உணர்ந்து, பின்னும் வஞ்சியில் தன் பாட்டனாகிய மாசாத்துவானைக் காண்கிறாள். ஈண்டு, அவன் வஞ்சிக்கு வந்த காரணத்தை உரைக்கு முகத்தான் கோவலனுக்கு ஒன்பதாம் தலைமுறையில் வாழ்ந்த கோவலன் என்பான், வஞ்சி மன்னனுக்கு உற்றவனாக இருந்ததோடு புத்தன் நல்லருளுக்கு இலக்காயினான் என்பதையும் சாத்தனார் காட்டுகிறார். பின் அவர் வழியே அறவணரும் அன்னையாம் மாதவியும் காஞ்சி சென்றதைக் கேட்டு, அவரிடம் விடைபெற்று வான்வழியே காஞ்சி வந்தடைகிறாள் மணிமேகலை.

## காஞ்சியில் அறச்செல்வி

புகார், மதுரை, வஞ்சி மூன்றும் சிலம்பில் காட்டப்பெற மறைந்த புகாருக்கு ஈடாகப் புகழ்சேர் காஞ்சி மணிமேகலையால் காட்டப்பெறுகின்றது. காஞ்சி மன்னன், சோழமன்னனுக்கும் பீலிவளை என்பானுக்கும் பிறந்த இளந்திரையன் மரபினன் என்பர் ஆய்வாளர். சிலர் இளந்திரையனே என்பர். அவன், மணிமேகலை வரவை முன்னரே

அறிந்து, அங்கே முன்னமேயே மணிபல்லவம் புத்த பீடிகை, கோமுகிப் பொய்கை அனைத்தையும் அமைத்திருந்தான். வந்தவளை வரவேற்று, அந்த 'மணி பல்லவத்தில்' அவளைத் தங்க வைக்கிறான். அவளும் அங்கிருந்து அறமாற்றிச் சிறக்கிறாள்.

மணிமேகலை தங்கிய அறச்சாலைக்கு மாதவியும் அறவண அடிகளும் வந்து சேர, 'வாய்வதாக என் மனப் பாட்டு அறம், என மணிமேகலை அவர்களை வணங்கித் தவத்திறம் பூண்டு, புத்த தருமத்தைக் கேட்டு மெய்ப் பொருள் அறிந்து கொள்ளத் தொடங்குகிறாள். ஈண்டும் சாத்தனார் சமயக் கொள்கைகள் பலவற்றையும் காட்டிக் காட்டிச் சமய நுணுக்கங்களின் உண்மைகளை உணர்த்துகிறார். இவற்றை ஏற்ற மணிமேகலை,

"புத்த தன்ம சங்க என்னும்
முத்திற மணியை மும்மையின் வணங்கி
சரணு கதியாய்ச் சரண்சென் றடைந்தாள்."-30/3-5

உண்மையைத் தெரிந்து கொள்ள மேலும்மேலும் முயன்று அறவண அடிகள்பால் பலப் பல உண்மைகளை உணர்ந்து, உள்ளொளி பெறுகிறாள் மணிமேகலை.

"தவத்திறம் பூண்டு தருமம் கேட்டுப்
பவத்திறம் அறுகெனப் பாவை நோன்றனள்"-30/263-264

என்று சாத்தனார் தம் நூலை முடிக்கிறார். கடைசியில் சில காதைகள் வழிச் சாத்தனார் தம் சமய உண்மைகளைப் பற்றியே அதிகம் கூறிப் பௌத்த சமயமே சிறந்தது எனக் காட்டுகிறார். சமயங்தளுக்கெனத் தனிப் பெருநூல்களோ வாதப் பிரதிவாதங்களோ இல்லாதிருந்த தமிழ் நாட்டில், இவ்வாறான சமய வாதங்களையும் போராட்டங்களையும் எழுப்பித் தம் சமயமே மெய்ச்சமயம் என வாதிக்கும் வகையினைத் தமிழ் நாட்டில் முதல் முதல் நாட்டியவர் சாத்தனாரே யாவார்.

## முடிவுரை

இவ்வாறு சிறந்த இலக்கியமாக-சமயக் காழ்ப்பற்று விளக்கும் சிலம்பொடு ஒட்டி எழுந்த மணிமேகலை, நல்ல இலக்கியமாக விளங்குவதோடு, சமய நூலாகவும் மாறி விட்டமை தான், நான் முன்னே காட்டியபடி, இது அறிஞராலும் பொதுமக்களாலும் சிறந்து போற்றப் படாமைக்குக் காரணமாகும். சாத்தனார் இந் நூலின் வழியே தம் சமய உண்மையைக் காட்டியதோடன்றி விதியின் வலிமையை அதனினும் அதிகமாகக் காட்டி வற்புறுத்துகிறார். எந்த இடத்திலும் அவரவர் செய்த நல்வினை தீவினை இரண்டுமே ஆட்சி செய்வதைக் காண லாம். நாமெலாம் தெய்வநிலை பெற்றவராக எண்ணப் பெறும் கண்ணகியையே விதிக்குள்ளாக்கி, மறுபடியும் பல பிறவி அவள் எடுத்தாகவேண்டும் எனக் காட்டுகிறார். மேலும் அப்பிறவியிலிருந்து விடுதலை பெறுதற்கு ஆண் பிறப்பே இன்றியமையாத தெனவும் அப்பிறப்பும் புத்தர் பரிநிர்வாண மடைந்த உத்தர மகத்தில் அமைய வேண்டுமெனவும் நம்பிக்கையை உண்டாக்க வைக்கிறார். இவையெல்லாம் அனைவருக்கும் ஏற்புடைக் கொள்கைகள் அல்லவானமையின் இலக்கியச் செறிவுடைய போதிலும் மணிமேகலை சிறக்கவில்லை எனலாம்.

சாத்தனார் தம் நூலின் வழி வெறும் மணிமேகலையின் கதையினையும் தம் சமய உண்மைகளையும் மட்டும் காட்டி இருப்பார் ஆயின், இவ்விலக்கியம் என்றோ வழக்கழிந்து மறைந்திருக்கும். அவர் இவற்றை மூலமாகக் கொண்டு அன்றைய தமிழ்நாட்டையும் அவற்றின் தலைநகர்களையும் அவை பெற்ற அமைப்பின் சிறப்பையும் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளையும், சிறப்பாகப் பிறர் நெஞ்சு புகாத தமிழ்நாட்டுக்கே சிறப்பினைத் தரும் மகளிரின் கற்பின் நிலையையும், அக்காலச் சமுதாய நெறிகளையும் அரசியல் செம்மையையும் உணவளித்தலின் சிறப்பையும் மக்கள் வாழ்வுக்கும் உயிர் வாழ்வுக்கும் தேவையான பிற உண்மைத் தத்துவங்களையும் நூல் முழுதும் விளக்கிக்

கொண்டே செல்கிருர். அவற்றுடன் இலக்கிய நயம் குன்ரு வகையில் உவமை முதலிய அணிநலன்களும் பிற நல்லி யில்புகளும் பொருந்தவும் தம் காப்பியத்தை ஆக்கியிருக் கின்ருர்.மேலும் கதைக்கு அங்கமாக எத்தனையோ சிறு கதைகளையும் இணைத்துள்ளார். அவற்ருலேயே இவ்விலக் கியம் வாழ்கிறது. எனவே, அடுத்த இரண்டு நாள்களி லேயும் அவர் காட்டிய தமிழ் நாட்டு நகரங்களின் சிறப்பு அரசியல், சமூக இயல் முதலியவற்றையும் இலக்கிய வளத் தையும் மற்றும் சமயம், சமூகம் பற்றிய குறிப்புக்களையும் தொடர்ந்து கர்ண்போம். இன்று இந்த அளவில் அமை கின்றேன்.

வணக்கம்.../

## சொற்பொழிவு—உ— (30-1-1973)

# அரசும் சமூகமும்

### தலைப்பு

வாழும் இலக்கியம் எதுவும் வெறும் வரலாற்றோடு நிற்பதில்லை. வெறும் கதையை மட்டும் சொல்லுவது இலக்கியமாகாது; அது ஒருவேளை 'வரலாறு' என்ற தகுதியைப் பெறலாம். ஆனல் வரலாற்றுக் கிடையில் மக்கள் வாழ்வை மையமாக வைத்து, கற்பனை கலந்து என்றும் வாழும் உண்மைகளை அன்றைய சமுதாயத்திடை வைத்துக் காலமெலாம் வாழும் சமுதாயத்துக்கு எடுத்துரைப்பதே இலக்கியம். மணிமேகலை இந்த வகையில் வெறும் மணிமேகலையின் கதையை மட்டும் கூறி இருக்குமாயின், அது வாழும் இலக்கியமாக அமைந்திருக்காது. மணிமேகலையொடு தொடர்புகொண்ட எத்தனையோ பாத்திரங்கள் எத்தனை எத்தனையோ வகைகளில் நமக்கு அறிமுகமாகின்றனர். எத்தனையோ நாடுகளைப்பற்றி நாம் அறிந்து கொள்ளுகிறோம். அவ்வந்நாட்டு மக்களையும் அவர்தம் வழக்க ஒழுக்கங்களையும் உணர்ந்து கொள்ளுகிறோம். அவற்றுள் கொள்ளவேண்டுவனவற்றையும் தள்ளவேண்டுவனவற்றையும் சாத்தனர் நன்கு பாகுபடுத்திக் காட்டுகிறர். நாடுகளையும் நகர்களையும் பற்றிப் பேசும்போது சாத்தனர், அக்காலத்திய நகர, ஊர் அமைப்புகளையும் அவற்றின் சிறப்பியல்புகளையும் நன்கு காட்டுகிறர். எனவே, மணிமேகலையை ஒருமுறை படித்தால் கி. பி. இரண்டாம் நூற்றண்டில் இருந்த தமிழ்நாட்டு நிலையினையும் அதனெடு தொடர்புகொண்ட பிற நாடுகளின் அமைப்பு, அரசியல் முதலியவற்றையும் உணர்ந்து

கொள்வதோடு, அவ்வந்நிலத்து வாழும் மக்கள் வாழ்க்கை நெறிமுறைகளையும் சமுதாயப் பண்பாடுகளையும் உணர்ந்து கொள்வதோடு, அவை எவ்வெவ்வாறு என்றென்றும் வாழும் சமுதாயப் பெருநெறிக்கு வழிகாட்டிகளாய் - ஒளி விளக்கங்களாய் அமைகின்றன எனவும் அறிந்து கொள்ளுகிறோம். எனவேதான் மணிமேகலையை வாழ்விலக்கியம் என்று போற்றுகிறோம்.

மணிமேகலையைப் படிக்கும்போது, பாத்திரங்களுடனேயே நாம் செல்லுகிறோம். செல்லும்போது எத்தனையோ நாடுகள், தீவுகள், ஊர்கள், பெருநகர்களில் நம்மை ஈர்க்கும் கட்டடங்களும் பிற சிறப்பியல்புகளும் மிக்கிருப்பதையும் அவற்றுள் வாழும் மக்கள் நிலை, வாழ்க்கை முறை முதலியவற்றையும் நன்கு உணர்ந்து, நாமும் அவர்களோடு ஒன்றிவிடுகிறோம். எனவே, அவ்வந் நாடுகளைப் பற்றியும், அவற்றின் மக்கள் பற்றியும் அறியும் நாம் அவர்தம் நெறிமுறைகளை நம் சமுதாய வாழ்வொடு பிணைத்துக் காணமுடிகிறது. எனவேதான் இன்றைய பேச்சின் தலைப்பாக 'அரசும் சமூகமும்' என்பது அமைகின்றது.

## எவை எவை

மணிமேகலையில் புகார் விளங்கும் சோழநாடு மட்டுமன்றி அங்கநாடு, உத்தர மகதம், கலிங்க நாடு, காந்தார நாடு, சாவக நாடு, நாக நாடு, பாண்டி நாடு, பூருவ தேயம், மகத நாடு ஆகியவையும் காஞ்சி, வஞ்சி போன்ற தலைநகர் பெற்ற நாடுகளும் பேசப் பெறுகின்றன. அசோதர நகரம், இடவயம், உஞ்சை, கச்சயம், கபிலை, காஞ்சன புரம், காஞ்சி, புகார், கொற்கை, கோசாம்பி, சண்பை, சிங்க நகரம், சித்தி புரம், சேடி, மதுரை, நாக புரம், வஞ்சி, வயனங்கோடு, வாரணசி ஆகிய நகரங்களும் பேசப்பெறுகின்றன. இரத்தின தீவகம், இலங்கா தீவகம், சம்புத் தீவம், சிறுதீவு இரண்டாயிரம், பெருந் தீவு நான்கு, மணிபல்லவம் ஆகியவையும் காட்டப்பெறு

கின்றன. இவற்றுள் சிலவற்றைக் கதைவழியே அறிந்து கொள்வதோடு சில நகரங்களிலும் நாடுகளிலும் தீவு களிலும் நாமும் பாத்திரங்களோடு ஒன்றி உலவிவரும் வாய்ப்பினைப் பெறுகிறோம். அவ்வாறு உலவும்போது அவ்வந் நாட்டு நிலை, வாழ்க்கை முறை, வரலாற்று நெறி ஆகியவை பற்றி நன்கு உணர்ந்து கொள்ளுகிறோம். இந்த நாடுகளிலும் நகரங்களிலும் நம்மை ஈர்த்துச் சென்று சாத்தனார் அனைத்தையும் காட்ட நினைந்தாலும் நாம் முற்றும் உணர்ந்து கொள்ள முடியவில்லை; மற்றும் அவர் காட்டும் எல்லா ஊர்களுக்கும் நம்மால் செல்லவும் முடிவதில்லை. எனவே ஒரு சிலவற்றை மட்டும் ஈண்டுக் காண முயலலாம்.

## புகார்

சிலம்பில் புகார், மதுரை, வஞ்சி, என்ற மூன்று பெரு நகர்கள் நன்கு காட்டப்பெறுவன போன்றே, ஈண்டும் புகார், வஞ்சி, காஞ்சி என்ற மூன்று பெருநகர்களும் காட்டப்பெறுகின்றன. மதுரைக்கும் நம் கதைக்கும் பெருந்தொடர்பு இல்லையாயினும் நம் கதையில் முக்கிய மாக வரும் அமுதசுரபியை ஆபுத்திரனுக்கு அளித்த பெருமை மதுரைக்கே உண்டு. ஆண்டிருந்த சிந்தா தேவியின் கோயிலிலேதான் அத்தெய்வம் தர, ஆபுத்திரன் அமுதசுரபியைப் பெற்றான் என அறிகிறோம். அம் மதுரையைச் சாத்தனார் 'தக்கண மதுரை' என்கிறார்[1].

மணிமேகலையின் கதையின் பெரும்பகுதி புகார் நக ரிலும் அடுத்த ஒரு பகுதி மணிபல்லவத்திலும் நடை பெறுகின்றது. சாவக நாட்டு நாக புரம், வஞ்சி, காஞ்சி ஆகியவற்றிலும் சிற்சில பகுதிகள் நடைபெறுகின்றன. நாமும் மணிமேகலையுடனே அவ்விடங்களுக்குச் செல் லும்போது அவை பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு உண் டாகின்றது. முதலாவதாகப் புகார் பற்றி மணிமேகலை

1. 13/105

காட்டுவ தறியலாம். இப்புகார் நகர்பற்றி முன்னரே நமக்குச் சிலப்பதிகாரம் நன்கு காட்டுகிறது. எனினும் சிற்சிலவற்றைச் சாத்தனுர் நமக்குப் புதிதாகக் காட்டு கிருர்.

மணிமேகலையின் பதிகம் பாடியவர் யார் என்பது புரியவில்லை. பதிகத்து இறுதியில் சாத்தனுர், இளங்கோ வடிகள் இருவரையும் படர்க்கையில் குறிப்பதால் மூன்ரு மவர் ஒருவர்தாம் இதைப் பாடி இருக்கவேண்டும் என அறிகிருேம். அவர் புகார் பற்றிக் கூறும்போது 'சம்பு' என்பாளையும் காவிரியையும் இணைக்கிருர். பரந்த பாரத நாடு 'சம்புத் தீவு' என அழைக்கப் பெற்றமையும் 'சம்பு' என்ற நாவல் மரக் காடுகள் நிறைந்து இருந்தமை யின் இப்பெயர் பெற்றதென்பதையும் புராண மரபு வழியே அறிகிருேம். 'நாவலோங்கிய மாபெருந் தீவு' என்றே சாத்தனுர் (2 / 2) குறிக்கின்ருர். இச் சம்புத் தீவின் காவல் தெய்வமாகச் சம்பு என்பாள் கொள்ளப் பெறுகிருள். அவள் வடக்கிருந்து, 'மாநில மடந்தைக்கு வருந்துயர் கேட்டுத்' தெற்கே வந்தவள் என்கிறது பதிகம். ஆயினும் அத்துயர் எத்தகையது என அறிய முடியவில்லை. மேலும் இத்தகைய வரலாறு மணிமேகலை நூலிலும் வேறு இடங்களிலும் காணக் கிடைக்கவில்லை. ஆனுல்,

> "வெங்கதிர் வெம்மையின் விரிசிறை இழந்த
> சம்பாதி இருந்த சம்பாதி வனமும் —3/53 - 54

என்ற அடிகள் நூலில் உள்ளன. அந்த எல்லையில் 'சம்பாதி என்ற புள்ளரசன் இருந்து, அங்கே கோயில் கொண்டிருந்த இறைவனை வழிபட்டமை பின்வந்த சம்பந்தர் பாடலாலும் அறிகிருேம்.

> "தள்ளாத சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
> புள்ளானுர்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே"
> — சம். புள்ளிரு. 1

இச் சம்பாதி சடாயு உடன் பிறந்த கழுகு வேந்தன் என்ற உண்மையைக் கம்பர், சடாயு வாக்காகவே,

> இமையா ரோடும்
> வருணங்கள் விரிகின்ற காலத்தே வந்துதித்தேன் கழுகின் மன்னன்
> தருணங்கொள் பேரொளியீர் சம்பாதி பின்பிறந்த சடாயு என்றான்"
>
> - ஆரணிய. சடாயுகாண் படலம் 25

எனக் காட்டுவர். எனவே சம்பாதி, சடாயு என்பார் இருவரும் மிகப் பழங்காலத்தே தோன்றியவர் என்பதும் இராமாயணக் காலத்தில் எங்கோ வடக்கே இருந்தவர் என்பதும் அவர்கள் ஒரு காலத்தில் இறைவனை வழிபட்ட இடமே இன்று "வைதீசுவரன் கோயில்" என வழங்கும் 'புள்ளிருக்கு வேளூர்' எனப் பெயர் பெற்றது என்பதும் அறியக்கிடக்கின்றன. புகார் நகரம் அன்று பரந்து விரிந்து இருந்தமையின் அதன் சுற்றிலும் இன்றுள்ள பல ஊர்கள் அன்று அப்பெருநகர் எல்லைக்குட்பட்டனவாக இருத்தல் வேண்டும். இன்றைய பரந்த சென்னையில் பல சிற்றூர்கள் அடங்கியுள்ளமையே இதற்குச் சான்றாகும். அன்றைய விரிந்த பூம்புகாரின் எல்லையில் சம்பாதி வனமாகிய புள்ளிருக்கு வேளூரும் சண்பை என்னும் சீகாழியும் மயிலாடுதுறையாகிய மாயூரமும் அடங்கிக்கிடந்தன என்பது பொருந்தும்.

சிலம்பில் கண்ணகியொடு இருந்த தேவந்தி, துயர் நீங்குவதற்கு வழிகாட்ட வருவளாய்,

> "கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்
> மடலவிழ் நெய்தலங் கானல் தடமுள
> சோமகுண்டம் சூரிய குண்டம் துறைமூழ்கிக்
> காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
> தாமின்புறுவர் உலகத்து" 9/57 - 61

என்று காட்டப்பெற்ற இரு குளங்களே இன்றளவும் அதே எல்லையில் திருவெண்காட்டில் அதே பெயர்களோடு சூரிய தீர்த்தம் சந்திர தீர்த்தம் என்ற பெயர்களோடு இருப்பதை அறிகிறோம், அவற்றுடன் அக்கினி தீர்த்தம் ஒன்றையும் சேர்த்துக் கணவரொடு இன்புறுவது மட்டுமன்றி, அவர் வழியே கான்முளைகளையும் பெறக்கூடும் என்ற உண்மை யையும் உணர்த்தப் பின் வந்த திருஞானசம்பந்தர்,

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினொடு உள்ளநினை
வாயின்வே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே"
—சம். வெண்-2

என்று காட்டுவர். எனவே தேவந்தி கூறிய அந்தக் கோட்டமே இன்று வெண்காடாக விளங்குகின்றது. இவ்வாறு பரந்த புகாரில் இருந்த ஊர்கள் அனைத்தும் உள்ளடங்க, அப்பெருநகர் விரிந்த நிலையில் சிறந்த ஒன்றாகப் பல்வேறு காரணங்களால் பல்வேறுவகைப் பெயர்களைப் பெற்றுச் சிறந்ததொடு, பல்வேறு வனங்களை யும் பல்வேறு கோட்டங்களையும் பெற்றுச் சிறந்திருந்தது எனவும் அறிகின்றோம்.

## பல்வகை வனங்கள்

பூம்புகார் நெருங்கிய மக்கள் கூட்டத்தொடு பொருந் திய பெருநகராக மட்டும் இல்லை என்பதும் அப்பேரூரின் நடுநடுவே இதய வெளிகளெனப் பல வனங்கள் இருந்தன என்பதும் அறியக்கிடக்கின்றன. சுதமதி மணிமேகலைக்குக் கூறிய வகையில் அவர்கள் உறையும் இடத்துக்கு அருகிலேயே ஐந்து பெரு வனங்கள் இருந்தன என்று குறிக்கின்றார் சாத்தனார். இலவந்திகை வனம், உய்யான வனம், சம்பாதி வனம், கவேர வனம், உவவனம் என அவை அழைக்கப்பெற்றன என்பதை மலர்வனம் புக்க காதை வழியே (44-61) நன்கு அறிகின்றோம். அவற்றுள்

இலவந்திகை என்பதை இலந்தி வாளிசூழ் சோலை என்பர். அஃது அரசனும் உரிமையும் ஆடும் காவற்சோலை என்பர் அடியார்க்கு நல்லார். (சிலம்பு. உரை 10/30-31) எனவே, அந்நகரில் சோலைகளும் வாவிகளும் அரசர்களுக்கென வும் மற்றய பொதுமக்களுக்கெனவும் தனித்தனியாக இருந்தன எனக் காண்கிறோம்.

## பளிக்கறை (கண்ணாடியின் இயல்பு)

உவவனத்தினிடையே பளிக்கறை உள்ளமை அறிகிறோம். அஃது கண்ணாடி மாளிகை போலும். இன்றும் பெருநகரங்களில் அத்தகைய மாளிகைகள் காட்சிப் பொருள்கள் வரிசையில் காட்டப் பெறுவனவாக உள்ளமை அறிவோம். சாத்தனார் அக்கண்ணாடி, ஒலியை விடாது ஒளியை மட்டும் புறத்துவிடும் தன்மையை,

"விளிப்பு அறைபோகாது மெய்புறத் திடூஉம்
பளிக்கறை மண்டபம்" -3/64-65

என்பர். எனவே மக்கள் பொழுதுபோக்குக்காகவும் மலர் முதலியன கொய்வதற்காகவும் விளையாடுவதற்காகவும் பிற பொது நலங்களுக்குப் பயன்படுவதற்காகவும் பூம்புகாரின் இடையிடையே பல சோலைகள் இருந்தன எனக் காண்கின்றோம்.

## வண்ணமும் சுண்ணமும்

இத்தகைய இயற்கை நலம் தோய்ந்த நகரில் மக்களின் கைவண்ணத்தான் செயற்கை நலன்கொண்டு சிறக்கும் காட்சிகளையும் சாத்தனார் பலவிடங்களில் காட்டிச் செல்லுகின்றார். (நான் இத்தகைய பல்வேறு காட்சிகள் பற்றிய விளக்கங்களுள் ஒன்றிரண்டனையே காட்டிச் செல்லுகின்றேன்).

"'வம்ப மாக்கள் கம்பலை மூதூர்
சுடுமண் ணோங்கிய நெடுநிலை மனைதொறும்

மையறு படிவத்து வானவர் முதலா
எண்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம்.'' -3/126-131

என்று சாத்தனார் செங்கற்களால் கட்டப்பெற்ற பல அடுக்குகளினாலாகிய மாளிகைகளையும் அச்சுவர்களில் நன்கு அரைக்கப்பெற்ற வெள்ளிய சுண்ணாம்புச் சுதை கொண்டு விளக்கப்பெறும் கண்கவர் ஓவியங்களையும் நமக்குக் காட்டுகின்றார்.

சாத்தனார் புகார் நகரினையே ஒரு பெண்ணாக உருவகம் செய்கின்றார். ஒரு பெண்ணுக்கு அமையவேண்டிய எல்லாச் சிறப்புகளையும் எண்ணிச் சாத்தனார், புகார் என்னும் பூங்கொடியினை,

''புலவரை இறந்த பூகாரெனும் பூங்கொடி
பன்மலர் சிறந்த நன்னீர் அகழி
புள்ஒலிச் சிறந்த தெள்ளரிச் சிலம்படி
ஞாயில் இஞ்சி நகைமணி மேகலை
வாயில் மருங்கியன்ற வான்பணைத் தோளி
தருநிலை, வச்சிரம் என இரு கோட்டம்
எதிரெதி ரோங்கிய கதிரிள வனமுலை
ஆர்புனை வேந்தற்குப் பேரள வியற்றி
ஊழி எண்ணி நீடுநின் றோங்கிய
ஒருபெருங் கோயில் திருமுக வாட்டி
குணதிசை மருங்கில் நாள்முதல் மதியமும்
குடதிசை மருங்கில் சென்று வீழ் கதிரும்
வெள்ளிவெண் தோட்டோடு பொன்தோ டாக
எள்ளரு திருமுகம் பொலியப் பெய்தலும்'' -5/109-122

எனக்காட்டி, நல்ல பெண்ணுக்குரிய அழகினையும் அணிகளையும் 'பாதாதி கேச' வர்ணனையாக விளக்கிக் காட்டுகிறார். மேலும் சுவர்களின் அமைப்பினையும் அவற்றாலாகிய வாயில்களையும்

"நெல்லும் கரும்பும் நீரும் சோலையும்
நல்வழி எழுதிய நலங்கிளர் வாயிலும்
வெள்ளி வெண் சுதை இழுகிய மாடத்து
உள்ளுரு எழுதா வெள்ளிடை வாயிலும்" 6/40-43

எனக் காட்டுகிறுர். இத்தகைய பேரூரில் அமைந்த கோயில்களையும் கோட்டங்களையும் வெவ்வேறு வகைகளில் அடுக்கி அடுக்கிக் காட்டுகிறுர் சாத்தனுர்.

## கோட்டமும் மன்றங்களும்

இத்தகைய பெருநகரில் உள்ள சக்கரவாள கோட்டத்தில் வாகை மன்றம், வெள்ளில் மன்றம், வன்னி மன்றம், இரத்தின மன்றம், வெள்ளிடைமன்றம் முதலிய மன்றங்கள் அவ்வம் மரங்களை அதிகமாகக் கொண்டு இருந்தன எனக் காட்டுகின்றுர். சுடுகாட்டில் இத்தகைய மன்றங்கள் இருப்பது மட்டுமின்றி, செம்மை நலஞ்சான்ற இடங்களில் நன்மன்றங்கள் பல இருப்பதையும் அங்கங்கே சாத்தனுர் காட்டுகின்றுர். உலக அறவி போன்ற அறம் வளர்க்கும் பெருமன்றங்களும் பட்டி மண்டபம் போன்ற அறிவு வளர்க்கும் பெருமன்றங்களும் பூம்புகார் நகரில் இருந்தன எனக் காட்டுகிறுர் இளங்கோவடிகளும்.

## பாவை

மன்றங்களிலும் கோட்டங்களிலும் பல்வேறு வகைத் தூண்கள் நிறுத்திவைக்கப் பெற்றன என அறிகின்றேம். அவற்றுள் பலவகை உருவங்கள் செதுக்கப்பெற்றிருந்தன போலும். அத்தூண் உருவங்கள்—கத்திற் பாவையர்—மணிமேகலையில் பெரும்பங்கு கொள்கின்றனர். மனிதன் நிலை நெடுங்காலத்து அறவோரும் அறிஞரும் உயிரில் பொருள்களைக் காட்டி, அவை பேசுவன போன்று பல உண்மைகளைக் காட்டித் திருத்த முயல்வர். நன்றிகெட்ட மனிதனைப் பார்த்து ஔவையார் 'தளரா வளர்தெங்கு, தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்' உனக்கு உதவி செய்

தார்க்கு நன்றியுடையனாக வாழ் என்கின்றார். 'கேட்பன போலவும் கிளக்குந போலவும் அஃறிணை மருங்கில் பேச்சும் செயலும் நிகழ்வதை இலக்கணமாகக் கொள்ளு கின்றனர். இந்த அடிப்படையில் அன்றிச் சமயநெறி வழி யிலோ அன்றி வேறு கருதியோ சாத்தனார் இக்கந்திற் பாவைகளைப் பேச வைத்துக் கதையில் பல திருப்பங்களை உண்டாக்குவதோடு பல உண்மைகளையும் உணர்த்து கிறார். விண்வழிப் பறத்தல் போன்று இந்தக் கந்திற் பாவை காட்டுவன மனிதநிலைக்கு அப்பாற்பட்ட செயல் களெனக் கொள்ளவேண்டியதே என எண்ணத் தோன் றும். எப்படியாயினும் சித்திர வேலைப்பாடமைந்த கம்பங் களில் உள்ள உருவங்கள் பேசுவதனால் பல நிகழ்ச்சிகள் நன்றாமாறு காண்கின்றோம். மணிமேகலைக்கு வருவதை முற்றும் உரைப்பது கந்திற் பாவையே என அறிகிறோம். சுதமதியோடு பேசுவதும் உதயகுமரனைத் தடுப்பதும் மணி மேகலையை அவன் உடலருகில் செல்லாது விலக்குவதும் காஞ்சனனுக்கு அறிவுறுத்துவதும் மருதிக்குக் கற்பின் சிறப்பை விளக்குவதும் பிற இன்றியமையாச் செயல்களும் வஞ்சியில் கண்ணகி தன் வரலாற்றையும் வரும் நிகழ்ச்சி களையும் விளக்குவதும் பாவைகள் பேசும் செயல்களாக அமையினும் அவற்றைத் தெய்வ வாக்காகவே கொள்ளும் நிலையில்தான் நாம் நிற்கிறோம். எனவே, கோட்டம் அன்றி மண்டபம் அமைப்பில் இச்சித்திரப்பாடும் சிலை உருவும் அமைந்த தூண்களின் அமைப்பு சிறந்தனவாக மணி மேகலையிற் போற்றப்பெறுகின்ற தறிகிறோம்.

## சிறைக் கோட்டமும் அறக் கோட்டமும்

நகரங்களில் இற்றை நாட்களைப் போன்றே அன்றும் சிறைக் கோட்டங்களும் அறக் கோட்டங்களும் இருந்தன என்று காண்கிறோம். மணிமேகலையின் வாய்மொழியால் சோழ மன்னன் ஒரு சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்கினமை அறிகிறோம். சிறைச்சாலையோடு 'புழுக்கறையில்' அடைப்பது போன்ற தண்டனைகளும் அக்காலத்தில் இருந்தமை உணர்கிறோம். (23/58-63).

## மன்னரும் மக்களும்

மணிபல்லவம் பற்றியும் அதில் அமைந்த புத்த பீடிகை, கோமுகிப் பொய்கை முதலியவை பற்றியும் நாக நாடு, சாவக நாடுகள் பற்றியும் ஓரளவு முன்னமே கண்டுள்ளோம். இனி, மணிமேகலையுடனே சாவக நாட்டின் ஒரு பகுதியான நாகநாட்டின் தலைநகராகிய நாக புரம் நாடிச் செல்வோம். ஆனால் சாத்தனர் அவ்வூரைப் பற்றி நமக்கு அதிகம் காட்டவில்லை. ஆயினும் மன்னன் அறத்தாறு நலம்புரக்கும் மன்னனாதலின் அவன் நாடு எப்படி இருந்தது எனக் காட்டுகின்றனர். முன் உதய குமரன் வெட்டுண்ட போதும் ஈண்டும் நாட்டு மன்னர் நிலையையும் மக்கள் நிலையையும் சாத்தனர் காட்டி, 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்ற உண்மை யைத் தெளிய வைக்கிறார். புண்ணியராசன் ஆளும் அந்த நாக நாடும் நாக புரமும் நல்லவன் ஆள்கின்ற காரணத் தாலே,

> ''ஈங்கிவன் பிறந்த அந்நாள் தொட்டும்
> ஓங்குயர் வானத்துப் பெயல்பிழைப் பறியாது
> மண்ணும் மரனும் வளம்பல தருஉம்
> உள்நின் றுருக்கும் நோய்உயிர்க் கில்லை'' -24/171-174

என்று நல்லவர் வாழின் நாட்டில் மழைபெய்ய வளஞ் சுரக்கு மென்பதையும் எவ்வுயிருக்கும் நோயில்லா நல் வாழ்வு கிடைக்கும் என்பதையும் வற்புறுத்துகிறார்.

> ''மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
> இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
> காவலற் பழிக்கும் இக்கண் ணகன் ஞாலம்''
> –புறம் 35/27-29

என்ற புறநானூற்று அடியை நன்கு அறிந்து போற்றுகிறார் சாத்தனர். வேலும் கோலும் அரசனுடைய அருள் கண் களென அமையவேண்டும் என்பதை மேலே முனிவர்கள் வாக்கிலே (22/15) காட்டியுள்ளார்.

"நீஓழி காலை நின்நாடு எல்லாம்
தாய்ஒழி குழவி போலக் கூஉம்" -25/110-411

என்று கூறி இப் புண்ணியராசன் துறவுகொள்ள நினைத்த போது, அமைச்சன் தடுத்ததாகச் சாத்தனரே கூறுகின்றர். இங்கே 'தாயில் தூவாக் குழவி போல' என்ற சங்க அடி நினைவுக்கு வருகின்ற தன்றோ? அரசருக்கு இன்றியமையா அறம் அவர் நாட்டு உயிர்களை ஓம்புதலும் அவற்றிற்கு வேண்டிய உண்டி, உடை, உறையுள் ஆகியவற்றைக் கொடுத்தலும் என்பதை மணிமேகலை வாக்காலேயே சாத்தனர் காட்டுகின்றர். அவள் புண்ணியசாசனுக்குக் கூறு முகத்தானே, என்றென்றும் ஆள்வோருக்குக் காட்டும் அறநெறியை ஈண்டு நாமும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

"அரசர் தாமே அருளறம் பூண்டால்
பொருளும் உண்டோ பிறபுரை தீர்தற்கு
அறனெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்" -25/226-230

என்ற இவ்வடிகள் என்றென்றும் ஆள்வோர் எண்ணத்தக்கன. உயிாகளுக்கு மூன்றினை இன்றியமையாதனவாகக் காட்டும் சாத்தனர், அவற்றின் வைப்பு முறையிலேயே தனித்தனி ஒவ்வொன்றின் இன்றியமையாத் தன்மையினை விளக்கிக் காட்டிவிட்டார். மனிதன்-அல்லது உயிர் அடிப் படையாகப் பெறவேண்டுவது உணவேயாகும். அதனலேயே இவரே மற்ருரிடத்து,

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்"
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே -11/95-96

எனச் சுட்டிக் காட்டி அந்த உணவிடும் அறத்தின் அடிப் படையிலேயே தன் கதையினையும் கொண்டு செல்லுகின்றர்.

உணவு முதல் அடிப்படைத் தேவையாக அமைய அடுத்து உடையைக் காட்டி, மூன்ருவதாகவே உறையுளைக் காட்டுகிருர். இம் மூன்றும் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவே. எறும்பிற்குப் புற்றும் ஈசலுக்கு மண்ணும் பறவைக்குக் கூடும் மனிதனுக்குக் குடிலும் தேவை தானே. அப்படியே உடுக்கவேண்டிய மனிதனுக்கு உடை இரண்டாவதாக அமைகிறது. உறையுள் மூன்ருவதாக உள்ளது. இந்த முறையினை நாடாளும் நல்லவர் எண்ணிச் செயலாற்ற வேண்டுமெனத் திட்டமாகச் சாத்தனுர் காட்டிச்செல்கிருர். இவ்வரச முறைபற்றிப் பின்னர் மேலும் காண்போம்.

## வஞ்சியில்

பலவடிகளாலாகிய சில காதைகளால் இளங்கோவடிகள் கூறிய செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்பைச் சாத்தனுர் சிலவடிகளாலேயே நமக்குத் தெளிய வைக்கிருர். வஞ்சிமாநகர எல்லையில்-புறஞ்சேரியில் நல்லவர்கள் தங்கி இருக்கும் செம்மையைச் சாத்தனுர்,

> ''நற்றவ முனிவரும் கற்றடங் கினரும்
> நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
> எங்கணும் விளங்கிய எயிற்புற இருக்கை'' –26/74–76

எனக் காட்டுவர், நகர்ப்புறங்களிலே புறஞ்சேரியில் இத்தகைய அறிவோரும் அறிஞரும் தங்கியிருத்தல் மரபு போலும்.

> ''அறத்துறை மாக்கட்கு அல்லது இந்தப்
> புறஞ்சிறை இருக்கை பொருந்தாது''
> –சிலம்பு 15/107-108

என இளங்கோவடிகளும் இவ்வுண்மையை வற்புறுத்துகின்ருரன்ரே! அகநகரிலே எல்லா மக்களும் கலந்துறையும் நிலையிலே, நகர்ப்புறங்களில் உள்ள சேரிகளில் அறவோரும் புலவரும் முனிவரும் மூதறிஞரும் தம்முட் கலந்து

பல பொருள்களைப் பற்றி ஆய்வு நடத்தி, நாட்டுக்கு நலம் புரியும் வகையில் அன்றைய நகரமைப்பும் நாட்டு வாழ்வும் அமைந்தன எனக் கொள்ளல் பொருந்துவதாகும். இவர்களையன்றி நாடு காவல் புரியும் மதில் காக்கும் மறவரும் அப்புறஞ்சேரியில் தங்குவர் என்ற உண்மையை,

> "வேற்று மன்னரும் உழிஞை வெம்படையும்
> போற்புறஞ் சுற்றிய புறங்குடி" –28/3-4

என்று சாத்தனாரே சொல்லுகிறார். எனவே நகர் அமைப்பில் அகழியையும் புறமதிலையும் ஒட்டி அறவோர் ஒரு புறம் இருக்க நாடு காக்கும் நற்படையும் காவல்புரியும் எனக் காண்கிறோம். இளங்கோவடிகளும் இந்த வகையிலேதான் வஞ்சியின் குணவாயிற்கோட்டத்து அரசு துறந்து அறநெறி போற்றி இருந்தார் போலும்.

வஞ்சிக் காண்டத்தில் இளங்கோவடிகள் சேரன் தலைநகரை விரிவாகக் காட்டவில்லை என்ற குறையைச் சாத்தனார் போக்கிவிடுகிறார். சேரன் மலை வளத்தையும் நாட்டு மக்களின் தன்மையையும் ஓரளவு இளங்கோவடிகள் காட்டியுள்ளார். சாத்தனார் வஞ்சியில் இருந்த பல்வேறு தெருக்களையும் அங்கே நடைபெற்ற பலவகைத் தொழில்களையும் சுட்டிக் காட்டுகிறார். அதற்குமுன் நகர் புகு எல்லையில் இருந்த அகழியின் சிறப்பைச் சித்திரிக்கிறார். பல்வேறு வண்ண நீர்களும் மலர்களும் பரந்துள்ளமையின் இந்திர தனுவென அது இருந்தமை காட்டப்பெறுகிறது. அகழிகை அடுத்து மதில், மதிலகவாயில் — பின் அகன்ற தெருக்கள் ஒன்றன்பின் ஒன்றாக நம்முன் தெரிகின்றன அத்தெருக்களைக் காட்டும்போது முதலாவதாக, இன்றியமையாத் தொழில் வளம் சிறப்பதைக் காட்டுகிறார்; பின் பாணர் கூத்தர் முதலியோர் வாழ் தெருக்களைக் காட்டுகிறார்; அடுத்து, கடைத்தெருக்கள் — பின் அரசர் பணியாளரின் தெருக்கள் இப்படி வஞ்சிநகரின் முழுச் சிறப்பையும் சில அடிகளில் விளக்கிய சாத்தனார் இறுதியாக,

"மறையோர் அருந்தொழில் குறையா மறுகும்
அரசியல் மறுகும் அமைச்சியல் மறுகும்
மன்றமும் பொதியிலும் சந்தியும் சதுக்கமும்
புதுக்கோள் யானையும் பொன்தார்ப் புரவியும்
கதிக்குற வடிப்போர் கவின்பெறு வீதியும்" -28/56-60

எனத் தெருதோறும் நம்மை அழைத்துச் செல்கிறார். இவையன்றிப் பொழுதுபோக்குக்காக அமைந்த பல்வேறிடங்களை,

"சேணோங் கருவி தாழ்ந்த செய்குன்றமும்
வேணவா மிகுக்கும் விரைமலர்க் காவும்
விண்ணவர் தங்கள் விசும்பிட மறந்து
நண்ணுதற் கொத்த நன்னீ ரிடங்களும்
சாலையும் கூடமும் தமனியப் பொதியிலும்
கோலம் குயின்ற கொள்கை யிடங்களும்
கண்டு மகிழ்வுற்று" -28/61-67

மணிமேகலையுடனே நம்மையும் அழைத்துச் சென்று நமக்கும் காட்டி மகிழ்ச்சியூட்டுகிறார். இளங்கோவடிகள் சொல்லாத மற்றொன்றையும் சாத்தனார் இங்கே நமக்குக் காட்டுகிறார். கண்ணகிக்குக் கோயிலெடுத்த செங்குட்டுவன் "ஆனே றுயர்த்தோன் அருளிற் றோன்றியவன்"என இளங்கோவடிகள் கூறி, அங்கே 'ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்த' திருமால் வழிபாடு உண்டென்பதையும் குறிக்கிறார். தாம் சைன சமயத்தைச் சார்ந்திருந்த போதிலும் அச்சமயம் அந்நாட்டில் பரவியுள்ளமை பற்றி ஒரு குறிப்பும் காட்டவில்லை அடிகள். ஆனால் சமயத்துக்காகவே தம் காப்பியத்தைப் பாடினாரோ என எண்ணத்தக்க வகையில் உள்ள சாத்தனார் வஞ்சியில் பல பௌத்த விகாரங்கள் உண்மையை மட்டும் கூறுது, கோவலனுக்கு ஒன்பதாவது தலைமுறையில்—சுமார் அக்காலத்துக்கு 200 அல்லது 250 ஆண்டுகளுக்கு முன்பே அங்கே பௌத்த சங்கம் இருந்ததாகவும் அந்நெறி பற்றிக் கோவலன் முன்னோனாகிய ஒன்பதாந் தலைமுறைக் கோவலன் அங்கே வந்தான்

எனவும் கூறுவர். இக்கூற்று உண்மையில் எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்றன்றோ? இதன்வழி கண்ணகி கடைசிக் காலத்தில் மலைநாடு நோக்கிச் சென்றதும் பொருத்தம் எனவும் கொள்ளவேண்டும்.

## காஞ்சியில்

இளங்கோவடிகள் தொடாத தொண்டை நாட்டையும் அதன் தலைநகராம் காஞ்சியையும் சாத்தனர் நமக்கு எடுத்துக்காட்டுவதோடு, மணிமேகலை, அறவண அடிகள், மாதவி ஆகியோர் பிற்கால வாழ்வுக்கு இக்காஞ்சியே அடைக்கலம் தந்தது என்பதை உணர வைக்கிருர். அக்காலத்தில் காஞ்சியில் எண்ணற்ற புத்த விகாரங்கள் இருந்தன வென்பதும் பல புத்தர்கள் அங்கே வாழ்ந்தார்கள் என்பதும் சைனமும் பரவிய சமயமாய் இருந்த தென்பதும் கற்ருர் வாழ் காஞ்சியிலிருந்து சென்று வட இந்திய நாலந்தா பல்கலைக்கழகம் போன்றவற்றுள் பல அறிஞர்கள் பேராசிரியர்களாய் இருந்தனர் என்பதும் வரலாறு காட்டுவன. எனவே இவர்களுக்குக் காஞ்சி அடைக்கலந் தந்ததில் வியப்பில்லை யன்ரே? அது மட்டுமன்றிக் காஞ்சியும் தொண்டை நாடும் சோழநாட்டின் பகுதியாகவே இருந்தமையானும், அக்காலத்துச் சோழ மரபினைச் சார்ந்தே இளங்கிள்ளி இருந்தமையானும் சோழர் தலைநகராகிய பூம்புகார் நிலைகெட, அதன் மற்ருெரு தலைநகராகிய காஞ்சியிலே இறுதி நாள்களில் இவர்கள் தங்கினுர்கள் என்பதும் பொருந்துவதாகும். இவர்களைப் போன்று எண்ணற்ற புகார் மக்களும் காஞ்சியில் அடைக்கலம் பெற்றிருக்கவும் கூடும்.

காஞ்சிநகர் மதில் சூழ்ந்த பெருநகர் என்ற உண்மையைப் 'பொன்கொடி மூதூர் புரிசை வலங்கொண்டு' மணிமேகலை நடுநகர் நண்ணினள் எனக் காட்டுகிருர் சாத்தனுர். அந்நகரில் மணிமேகலை வரவை முன்னமே அறிந்த மன்னன், மணிபல்லவத்தைப் போன்ற திட்டு, புத்த பீடிகை, கோமுகிப் பொய்கை முதலியவற்றை இயற்றி

அவள் வந்தால் தங்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தான் என அறிகிறோம். இங்கும் நாட்டில் பஞ்சம் உண்டானமைக்குக் காரணம் தன் கொடுங்கோல்தானோ என்று எண்ணுமாறு,

"செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் குழலார் கற்புக் குறைபட்டோ
நலத்தகை நல்லாய் நன்னா டெல்லாம்
அலத்தற் காலை ஆகியது அறியேன்" —28/188-191

என்று அரசன் வாக்காகவே காட்டுகிறார்.

இத்தகைய காஞ்சியில் அஞ்சுதற் கஞ்சி அறம் போற்றி வாழ்ந்த அரசனால் அமைக்கப் பெற்ற அந்த மணிபல்லவத் திட்டில் மணிமேகலை அறவண அடிகளிடம் மாதவியுடன் அறம் கேட்டு, முத்தரும நெறியாம் புத்த நெறி போற்றி வாழ்ந்து வந்தாள். இந்த மணிபல்லவம் இன்றும் 'பல்லவமேடு' என்ற பெயரால் வழங்குகின்றது. இதைச் சிலர் பல்லவர் ஆட்சி செய்த மேடு எனக் குறிப்பினும் மணிபல்லவமாகிய மேடு எனக் கொள்வதே சாலப் பொருந்துவதாகும். 'தீவகம் போன்ற காவகம்' எனச் சாத்தனார் கூறியபடியே இன்றும் இம் மணிபல்லவமாகிய பல்லவமேடு தீவகமென விளங்குகின்றது.

## மக்களும் நாடும்

இவ்வாறு பல்வேறு வகையில் நம் நாட்டின் நிலப்பரப்பையும் பிற நிலங்களின் அமைதிகளையும் சாத்தனார் அந்நாடுகளையும் நகரங்களையும் முன்னிறுத்தி ஆண்டாண்டே வாழ்வார் வாழ்க்கை நெறி காட்டி, வழுக்கு நெறி சுட்டி, தக்க இன்ன, தகாதன இன்ன என எடுத்தியம்பி, அன்று வாழ்ந்தார் வழியே நாம் என்றும் வாழ வழி வகுத்துள்ளார். இனி இத் தலைப்பின் அடிப்படையில் சில உண்மைகளை இன்று காணலாம் எனக் கருதுகிறேன். இந்த அடிப்படையிலேயே மேலும் ஈண்டுக் காணாத சில நாடுகளையும் தீவுகளையும் காணலாம் எனக் கருதுகிறேன்

## புரட்சிக் கவிஞர்:

இளங்கோவடிகளோடு சேர்ந்து இலக்கியத்தில் ஒரு புதுத் திருப்பம் கண்டு, புதியதொரு புரட்சியைச் செய்தார் சாத்தனார் என்பதைக் கண்டோம். இத்தகைய மாற்று நெறிக்குச் செல்ல அஞ்சினவராகிய சாத்தனார், அதற்கென அரச குடும்பத்தில் பிறந்த அடிகளாரைச் சார்ந்து சென்ற சாத்தனார், தாமே தனியாகப் பலவகையில் சமுதாயப் புரட்சிகளைச் செய்துள்ளார். இலக்கியத்திலேயே அவர் செய்த மற்றொரு புரட்சி சமயத்தை இலக்கியத்தில் புகுத்தியதேயாம். இதுபற்றி மேலேயும் கண்டோம். நாளையும் தேவையாயின் காணலாம். இங்கே அந்தப் புரட்சியை—அதுவரையில் எந்தப் பெரும் புலவரும் செய்ய நினைக்காத—செய்யாத—ஒன்றை மட்டும் சுட்டிச் செல்லலாம். சங்க இலக்கியங்களில்—சிறப்பாக எட்டுத் தொகையில் (பரிபாடல் நீங்கலாக) காணாத சமய உணர்வை இலக்கியத்தில் சேர்த்து வழங்கும் பான்மையை—முதன்முதல் சாத்தனாரே கையாண்டார். பரிபாடலும் முருகாற்றுப்படையும்கூடத் தத்தம் வழிபடு கடவுளர்களை வாழ்த்தும் முறையில்—அதிலும் தமிழ்நாட்டுப் பழம்பெருந் தெய்வங்களாகிய சேயோன், மாயோன் ஆகிய இருவரை முன்னிறுத்திப் போற்றும் முறையில் அமைந்தனவேயன்றி, பிற சமயங்களொடு ஒப்பு நோக்கி, மற்றவற்றை ஒதுக்கித் தம்முடையதே உயர்ந்தது எனக்காட்டும் மாற்றுநிலையில் செல்லவில்லை. மேலும் தமிழ்நாட்டுக்கு முன்பின் அறிமுகமில்லாத வேற்றுச் சமயத்துக்கென்றே கச்சைகட்டி வரிந்து நின்று சமயப் போராட்டம் செய்து, அதையே இலக்கியத்தில் அமைத்த புரட்சி சாத்தனாருடையதே ஆகும். பின்னால் வந்த சமயப் போராட்டங்களுக்கும் மாறுபட்டங்களுக்கும் வித்திட்டவர் இச்சாத்தனாரேயாவார். வாழ்விலும் சமுதாயத்திலும் மட்டுமின்றி, இலக்கியத்திலேயே இத்தகைய மாறுபாட்டை உண்டாக்கினார் இவர். இவர் வழியே பின்னால் எண்ணற்ற இலக்கியங்கள் உண்டாயின. எனவே இவர்தம் மாற்றத்தால் சமய மாறுபாடு நாட்டில் தோன்றிய நிலை ஒருபுறம் இருக்க, பல சமய இலக்கி

யங்கள் தோன்றிய நிலையினையும் நம்மால் உணர முடிகின்றதன்றோ!

## மகளிர் வாழ்வில் புரட்சி

பெண்களை வெறுத்து, அவரொடு கூடிவாழும் வாழ்வையே கண்டு ஓடும் பௌத்த நெறியை ஒரு பெண்ணைக் கொண்டே வளர்த்த பெருமை சாத்தனாருக்கு உண்டு, புத்தர் தம் கண்ணனைய மனைவியை விட்டுவந்து, பற்றே அனைத்துக்கும் காரணம் என்றார். ஆனால் சாத்தனாரோ அதே பெண் இனத்தில் பிறந்த—அழகே உருவான மணிமேகலையை முன்னிறுத்தி அப்புத்த சமயத்தை வளர்த்து வாழவைத்தா ரல்லரோ! அசோகர் தம் காலத்திலே சில பெண்களை—அவர் மக்களுள் சிலரையே—சமயம் பரப்ப இலங்கை வரையில் அனுப்பினார் எனக் காண்கிறோம். ஒரு சிலர் பிக்குணிக் கோலத்தோடு சமயத் தொண்டு ஆற்றியதையும் உணர்கின்றோம். எனினும் இப்படி ஓர் இளம் பெண்—காமனும் மருளும் அழகெல்லாம் ஒருங்கே திரண்ட காரிகை—தன் கையில் அமுதசுரபி ஏந்தி, ஊர் தொறும் உழன்று உதவி, தனியளாய்ச் சமயம் பரப்பிய புரட்சி நிலையைப் புத்தர் தோன்றிய அவர் நாட்டிலேயும் காண இயலாது,

## மகளிர் நிலை

அக்காலத்தில் நாட்டில் இருந்த சமயத்தொடு பெண்டிரைத் தொடர்பு படுத்திய வகையினையும் சாத்தனார் சுட்டாமல் இல்லை. இளையவளாகியவளும் பெண்ணாக உள்ளவளுமாகிய மணிமேகலைக்குச் சமய உண்மையை அவ்வச் சமயத்தோர் கூற மாட்டார்கள் என்பதை இவர் சுட்டிக் காட்டுகிறார். பௌத்த சமயமட்டுமன்றிச் சங்க காலத்துக்குப்பின் சமயநெறிகள் அனைத்திலும் பெண்கள் தாழ்த்தியே பேசப் பெறுகின்றனர். பெண்களுக்கு வீடாகிய மோட்சம் கிடையாதென்றும் அவர்கள் ஆடவராகப் பிறந்தே அந்தப் பெருநெறி பெறவேண்டும் என்றும் அவர்கள் நம்பினர். சாத்தனாரே இவ்வுண்மையை

இரண்டிடங்களில் உணர்த்துகிருர். மணிமேகலை இறுதியில் இறைநிலையுற்று அருளறம் புரிந்து அண்ணலின் அருளுக்கு இலக்காகும்போது ஆண் பிறவியே பெறப் போகிருள் என்ற உண்மையை அவள் கடைசிப் பிறப்புக்களைப் பற்றி அறவண அடிகள் வாயிலாக,

"உத்தர மகதத்து உறுபிறப் பெல்லாம்
ஆண்பிறப் பர்கி அருளறம் ஒழியாய்
மாண்பொடு தோன்றி மயக்கங் களைந்து
பிறர்க்கற மருளும் பெரியோன் தனக்குத்
தலைச்சா வகனுய் சார்பறுத் துய்தி" - 21/176-179

எனக் காட்டுகிருர்.

மேலும் வஞ்சிமா நகருள் மணிமேகலை சமயக் கணக்கர் தம் திறம் கேட்க விரும்பிய காலை, அவள் இளையவளாகவும் பெண்ணுகவும் இருப்பதால் அவளுக்கு அச்சமயத் தலைவர்கள் சமய உண்மைகளை உரைக்க மாட்டார்கள் என்றும், எனவே வேற்று உருக்கொள்க எனவும் தெய்வமாகிய கண்ணகியே கூற, இவள் 'மாதவன்' வடிவாகிய ஆண் உருக்கொண்டு சென்ருள் எனச் சாத்தனுரே காட்டுவர்.

"இளையள் வளையோள் என்றுனக்கு யாவரும்
விளைபொருள் உரையார் வேற்றுருக் கொள்கென
மையறு சிறப்பின் தெய்வதம் தந்த
மந்திரம் ஓதிஓர் மாதவன் வடிவாய்" -26/68-71

மணிமேகலை சென்று சமயநெறிகள் பற்றி அறிந்தாள் எனக் காண்கிறேம். எனவே, அவர்காலத்தில் மகளிர் பெற முடியாததாகக் கருதிய சமய ஞானத்தை - சமயம் அறிந்துகொள்ளும் திறனை, அவரே மறுக்கும் வகையில் புரட்சி செய்து மணிமேகலை வழியிலேயே புத்த தருமத்தை வளர்க்கத் துணிந்தமை போற்றக்கூடிய ஒன்றேயாம்.

## பெண்வழிப் புரட்சி

மேலும் அக்காலத்தில் மகளிரின் இல்லிகவா நிலையில் இருந்தமையைச் சில விடங்களில் காட்டும் ஆசிரியர் மணிமேகலையை - இளமையிலேயே துறவியாகக் காட்டு வதோடு அவளை நாடும் நகரும் ஊரும் உலகமும் தனி யாகச் சுற்றவைத்துச் சமயம் வளர்க்கப் பயன்படுத்து கிருர். மேலே காட்டியபடி அவள் வஞ்சியுள் சென்று கண்ணகியைக் கண்டபோது இளையளாகவே இருந்தமை எண்ணத் தக்கது.

ஆடவர் காம வயப்படுவர் என்பதைப் பலவிடங்கள் பல துறவிகள் - பல புலவர்கள் - பல நூல்களில் சுட்டிக் காட்டியுள்ளனர். ஆனல் அந்நெறியை மறுக்கும் புலவர் அனைவரும் ஆடவர்களாகவே உண்மையைக் காண் கிரேம். அவர்தம் நூல்களிலும் ஆடவர்களாகிய முனிவர் முதலியோரையே பாத்திரங்களாகப் படைத்து, அக்காம இன்பத்தை முனியும் வகையில் காவியம் செய்துள்ளமை அறிவோம். ஆனல் சாத்தனர் பெண் இன்பத்தை ஒரு பெண்ணைக் கொண்டே துறக்க வைக்க முயலும் சாதனை யில் சிறந்த பெரும் புரட்சியல்லவா செய்துள்ளார்! தன்னையே நாடிவந்த உதயகுமரனை முன்னிறுத்தி, நரை மூதாட்டி ஒருத்தியைக் காட்டிப் பெண் இன்பத்தை வெறுக்கும் வகையில் அவன் உள்ளத்தைத் தெருட்ட நினைத்து மணிமேகலை கூறிய சொற்கள் ஈண்டு எண்ணத் தக்கன வன்றே! தன் துறவுக்குக் காரணம் யாதெனக் கேட்ட அரசகுமாரனுக்கு மணிமேகலை,

"பிறத்தலும் மூத்தலும் பிணிபட் டிரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்" -19/136-139

என்று கூறுகிருள். பின் ஒருமுறை அவன் அவளை நாடி வந்தபோது, காயசண்டிகை வடிவிலிருந்த மணிமேகலை

'நரைமூதாட்டி ஒருத்தியைக் காட்டி' அவள் ஒவ்வோர் உறுப்பும் எவ்வெவ்வாறு நிலைகெட்டன எனக் காட்டுகிறாள்.

''தண்ணறல் வண்ணம் திரிந்து வேறாகி
வெண்மண லாகிய கூந்தல் காணாய்
பிறைநுதல் வண்ணம் காணா யோநீ
நரைமையின் திரைதோல் தகையின் றாயது
விறல்விற் புருவம் இவையும் காணாய்
இறவின் உணங்கல் போன்று வேறாயின
கழுநீர்க் கண்காண் வழுநீர் சுமந்தன
குமிழ்மூக் கிவைகாண் உமிழ்சீழ் ஒழுக்குவ
நிரைமுத் தனைய நகையும் காணாய்
சுரைவித்து ஏய்ப்பப் பிறழ்ந்து வேறாயின
இலவிதழ்ச் செவ்வாய் காணா யோநீ
புலவுப் புண்போல் புலால்புறத் திடுவது
வள்ளைத் தாள்போல் வடிகா திவைகாண்
உள்ளூன் வாடிய உணங்கல் போன்றன
இறும்பூது சான்ற முலையும் காணாய்
வெறும்பை போல வீழ்ந்து வேறாயின
தாழ்ந்தொசி தெங்கின் மடல்போல் திரங்கி
வீழ்ந்தன இளவேய்த் தோளும் காணாய்
நரம்பொடு விடுதோல் உகிர்தொடர் கழன்று
திரங்கிய விரல்கள் இவையும் காணாய்
ஆவக் கணைக்கால் காணா யோநீ
மேவிய நரம்பொடு என்புபுறங் காட்டுவ
தளிரடி வண்ணம் காணா யோநீ
முளிமுதிர் தெங்கின் உதிர்காய் உணங்கல்
பூவினும் சாந்தினும் புலால் மறைத்து யாத்துத்
தூசினும் அணியினும் தொல்லோர் வகுத்த
வஞ்சம் தெரியாய் மன்னவன் மகனே'' -20/41-69

என்று மணிமேகலை வாக்காகவே மகளிர்தம் 'கேசாதிபாத' நிலையையும் அவை கெடும் வகையினையும் விளக்கி

யாக்கை இழிநிலை காட்டி, காம மயக்கம் நீங்கச் சொல்லுகிறார் சாத்தனார். வேறு எந்தப் புலவரும் இப்படி ஓர் இளம்பெண் வாயிலாகவே, அதே பெண்ணின் இழிநிலை காட்டித் துறவை வற்புறுத்தும் இலக்கியம் எந்த மொழியிலும் பாடி இரார் என்பது திண்ணம். சாத்தனார் சார்ந்த புத்த சமயத்து இலக்கியங்களிலேயும் இத்தகைய புரட்சியை வேறு யாரும் செய்திருக்கமாட்டார்கள் என்பதும் உறுதி. எனவே, இத்தகைய மாறுபட்ட புரட்சி செய்த சாத்தனார் போற்றற் குரியரல்லரோ!

## கற்பியல் புரட்சி

" கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை"

என்பது ஔவை வாக்கு. மணம் புரிந்துகொண்ட இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியா நிலையில் வாக்கினைக் காப்பாற்றி, என்றென்றும் இணைந்து நிற்பதே அது.மேலும் தான் கொண்ட கணவனையன்றி வேறு ஒருவரை நாடாத உள்ளத்தோடு இருப்பதே கற்பு என்று பலரும் காட்டுவர். பாரதியார் அந்த உண்மை நிலையினை ஆடவர் மேலும் ஏற்றி,

"கற்புநிலை என்று சொல்லவந்தார் — இரு
கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்
எய்ப்பும் அறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காண் என்று கொம்மியடி"

எனக்காட்டி, அக்கற்பு ஆடவர் பெண்டிர் இருவருக்கும் உரிய ஒன்று எனக்காட்டுவர். அஃதாவது, கொண்டவளை விட்டு வேறொருத்தியை நினையாது ஆடவனும், கொண்டவனை விட்டுவேறொருவனை நினையாது மகளும் வாழவேண்டும் என்பது உலக நியதி. இதைத்தான் எல்லாப் புலவர்களும் கொள்ளுகின்றனர். சில நாட்டு மக்கள் இந்த அடிப்படை கூட உணரமுடியாமல் மனம் போன போக்கில் போகின்றனர். வள்ளுவர் இக்கற்பு நிலையினை ஒரு பிறவியோடு நிறுத்திவிடாது என்றென்றும் எடுக்கும் பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும் ஒரு பெரு நெறியாகக் காட்டுவர்.

"இம்மைப் பிறப்பில் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்" குறள்-1315

என்று அவர் பிறவிதொறும் என்றென்றும் பிரியாது இணைந்த வாழ்வையே வற்புறுத்துகிறார். ஆனால் சாத்தனார் இவற்றிற் கொல்லாம் ஒரு படி மேலே சென்று 'கற்பு' என்ற சொல்லுக்கே புது விளக்கம் தருகிறார்.

## எது கற்பு?

தன் கணவனைத் தவிர்த்து வேறு ஒருவரை நினைக்கா திருப்பது மட்டும் பெண்களுக்குக் கற்பாகாது; தன்னைப் பிறர் நினைக்காத வகையில் நடந்து கொள்வதுவே சிறந்த கற்பு என்று பேசப் பெறுகின்றது. இந்த உயர்ந்த நிலை எல்லோராலும் பின்பற்ற முடியாத ஒன்று என்றாலும் இது உயர்ந்த குறிக்கோளாகும் என்பதை மறுக்க முடியாதன்றோ. இந்த மரபில் உற்று நோக்கின் நமது புராண இதிகாசங்களில் வரும் எத்தனையோ கற்புக்கரசிகள் யாவரும் எண்ணத்தக்கவர்களாகின்றனர். எனவே சிலர் இதை ஏற்றுக்கொள்ள விரும்பார் ஆயினும் இது தமிழ் மரபின் சிறந்த ஒன்றாகப் போற்றப் பெறுகின்றது. 'குலமகள்', 'விலைமகள்' ஆகிய இருவரைப் பற்றி விளக்கிக் காட்ட வந்த ஔவையார் தம் கொன்றைவேந்தனில்,

"குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்"

என்றும்.

"விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்"

என்றும் கூறுகிறார். இந்த அடிப்படையில் நாம் வாழ்கின்றோமோ என்பது ஐயத்துக்கு உரிய ஒன்றாயினும் எந்தக் குலமகளும் தன் கணவனைத் தவிர, பிறரால் விரும்பத்தக்க வகையில் நடந்து கொள்ள மாட்டாள் என்பது உறுதி. இன்றைய நாகரிக வாழ்க்கையில் வீட்டில் எவ்வளவு எளிமையாக வாழ்ந்தாலும் வெளியே போகும் போது பகட்டாகச் செல்லவேண்டுமென ஆடவர் மகளிர் இருவருமே விரும்புகின்றனர். வெளியில் தங்களைப் பகட்

டாகக் காட்டிக்கொண்டு, இல்லாதவரும் உள்ளவர் போன்று நடிக்கின்றனர். வாழ்க்கையே நடிப்போ என்னு மாறு சில ஆடவரும் பெண்டிரும் பல்வேறு அழகுப் பொருள்களை அணிந்தும் பூசியும் சூடியும் உடுத்தும் பிறர் கண்டு மகிழ வாழ்கின்றனர் என்பது உண்மையாயினும், அவ்வாழ்வில் தன்னைக் கண்டு தன்கணவனேயன்றி வேறொரு ஆடவன் விரும்பி நெருங்குவானாயின் அவனை எந்தக் குலமகளும் ஏற்கமாட்டாள் என்பது உறுதி. சிலம் பில் வெளியே சென்ற தம் கணவர் வரும்வரையில் கல்லாக இருந்தும், குரங்கு முகம் பெற்றும் தம்மைப் பிறர் விரும் பாத வகையில் பாதுக்காத்துக்கொண்ட கற்பு நெறியினைக் காண்கிறோம். ஆனால் இன்றைய நாகரிகச் சூழலில் புற அழகால் தம்மை மற்றவர் கண்டு மதிக்கும் வண்ணம் அழகுபடுத்திக் கொண்டாலும் அக அழகில் மாசற்று இருப்பவரைக் காண முடிகிறது. இந்த வகைக்குச் சில விதி விலக்குகள் இருக்கலாம். அவர்களை 'யாரோ' என ஒதுக்கித் தள்ளி மேலே சொல்லலாம். மணிமேகலை காலத் தில் இவ்வாறு பிறர் தம்மைக் கண்டு விரும்பும் வகையில் தம்மை அழகுபடுத்திக் கெள்வார், கற்புநெறி பிறழ்ந்தவ ராக வேண்டும் என்கிறார் சாத்தனார். இந்தப் புரட்சி யாரும் செய்யாத ஒன்று.

> ''மணிடிணி ஞாலத்து மழைவளம் தரூஉம்
> பெண்டி ராயின் பிறர்நெஞ்சு புகாரே'' –22/44-45

பூம்காரில் வாழ்ந்த மருதியின் வரலாற்றில் இவ்வுண்மை யை அரசனுக்கு முனிவர் உணர்த்து முகத்தான், சாத்தனார் உணர்த்துகிறார். காவிரி ஆடிவரும் மருதியைக் சுகந்தன் என்னும் மன்னன் மகன் 'நீ வா' என அழைக்கிறான். அவள் அஞ்சி ஒதுங்கி, அருகில் உள்ள பூத சதுக்கத்துள் புகுந்து அலமந்து ஆண்டுள்ள தெய்வத்தைக் கண்டு தான் தவறாதிருந்தும் தன் கற்பு மாசுபட நேர்ந்த காரணத்தைக் கேட்கிறாள். எனவே மற்றவன் கண்டு தன்னை விரும்பிய அளவிலேயே தன் கற்பு கெட்டதென அவள் கருதுகிறாள். அதற்குத் தெய்வம்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் 22/59-61

என்ற பொருளுரை பொதிந்த குறளையே சான்றாகக் காட்டி, அவள் 'விழாக்கோள் விரும்பிக் கடவுள் பேணலே' காரணம் என்று கூறியதைக் காட்டி, சாத்தனார் கற்பு நெறியை விளக்குவதோடு, அந்நெறியையும் உலக வாழ்வையும் போற்றிய வள்ளுவரையும் 'பொய்யில் புலவன்' எனப் பாராட்டுகிறார். இவ்வாறு கற்பு நெறியில் பெரும் புரட்சியை இதுவரையில் சாத்தனாரை யன்றி வேறு யாரும் எம்மொழியிலும் செய்திலர்.

## சாதிப் புரட்சி

சங்க காலத்தில் எத்தனையோ தொழில்களும் அதன் வழியே பிரிவுகளும் இருந்தன. 'பிறப்பொவ்வா, செய் தொழில் வேற்றுமையான்' என்ற வள்ளுவர் வாய்மொழிக் கேற்ப மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆயினும் வைதிக சமயத் தவராகிய வடவாரியர் கடைச் சங்க காலத்துக்குச் சற்று முன்னர்த் தமிழ்நாட்டில் புகுந்து தம் வருணப் பிரிவைப் புகுத்திட நினைத்தனர். சங்க காலத்தில் அப் பிரிவு அதிக மாகக் கால்கொள்ளவில்லை யாயினும், அதை ஒட்டி அது வளர்ந்துவிட்டதைக் காண்கிறோம். சிலப்பதிகாரத்தி லேயே வைதிக சமயச் சடங்குகளும், மாடலன் போன்றார் தம் சொல் போற்றலும் இடம்பெறக் காண்கிறோம். அவர் தம் வேத நெறியும் வேள்வி நெறியும் நாட்டில் வளர்ந் திருக்க வேண்டும். அதனால்தான் தமிழறம் போற்றிய வள்ளுவர்,

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று" குறள் 259

என வற்புறுத்தினர். வைதிகத்தைச் சாடுவதற்கென்றே தம் இலக்கியத்தை எழுதிய சாத்தனார் அவ்வேள்வியையும் அதைச் செய்யும் மரபினையும் மாக்களையும் வன்மையாகக் கண்டிக்கிறார்.

ஆபுத்திரன் வரலாறு உலகறிந்த ஒன்று. அவன் கையில் பெற்ற அமுதசுரபியே பின் மணிமேகலையின் கைப்பட்டு இலக்கியத்தில் சிறப்படைகின்றது. ஆபுத்திரன் வழியே—வாயிலாகவே, சாத்தனுர் வைதிகர்தம் வேள்விக் கொடுமையைக் கண்டிக்கிருர். பெண்ணினைக் கொண்டே பெண்ணிடம் 'காமங்' கொள்ளல் தகாது எனக் காட்டியது போலவே, அந்தணர்க்குரிய வேதங்களையெல்லாம் நன்கு கற்ற ஒருவனைக் கொண்டே சாத்தனுர் வேள்வியைக் கண்டிக்க வைக்கிருர். ஆபுத்திரனை அவர் அறிமுகப் படுத்தும்போது,

"மார்பிடை முந்நூல் வனையா முன்னர்
நாவிடை நன்னூல் நன்கனம் நவிற்றி
ஒத்துடை அந்தணர்க்கு ஒப்பவை யெல்லாம்
நாத்தொலை வின்றி நன்கனம் அறிந்து 13/23-26

சிறந்தான் என்கிருர். பின் அவனே வேள்விக்குரிய பசுவை பிரித்துச் செல்ல, வேள்வி செய்யும் அந்தணர் அவனைப் பழிக்கின்றனர்.

"ஆ கொண் டிந்த ஆரிடை கழிய
நீ மக னல்லாய் நிகழ்ந்ததை உரையாய்
புலைச்சிறு மகனே போக்கப் படுதி" ...13/42-44

என்று அவனை அவர்கள் பழிக்கின்றனர். ஆபுத்திரன் செல்வமாகிய பசுவின் சிறப்பைக் காட்டி அதன்

"பிறந்தநாள் தொட்டுச் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சொடு அருள்சுரந் தூட்டும்" —13/53-54

தன்மையை விளக்கினும், அவர்கள் மேலும் அவனை ஆமகன் என்றே பழித்துரைக்கின்றனர். அவர்களுக்குப் பதிலாக, வெவ்வேறு வகையில் வெவ்வேறு விலங்கிடத்துப் பிறந்த பெரியோர்களே அவர்தம் வேதங்களை

இயற்றியும் குலமுதல்வராகியும் சிறந்த தன்மையை ஆபுத்திரன் வழியே சாத்தனுர் விளக்குகிருர். விளக்கி, அத்தகைய 'வேள்வி' ஒம்பும் மரபினைக் கடியின் 'அருள் சுரந் தூட்டும் அமுத சுரபி'யைப் பெறக்கூடும் என்று காட்டி, தான் வைதிக சமயத்துக்கு மாறுபட்ட உண்மையைப் புலப்படுத்துகிருர்.

## இந்திர உலகின் இழிதகைமை

சாத்தனுர் மற்ருெரு பெரும்புரட்சியையும் செய்கின்ருர். இம்மையில் நம் வாழ்விடைச் செய்யும் புரட்சிகள் பல இருக்க, மறுமையில் பெறும் இந்திர உலகையே துச்சமாகக் காட்டுகிருர். 'தேவர் அனையர் கயவர்' என்ற 'பொய்யில் புலவராம்' வள்ளுவர் வழி நிற்பவர் ஆதலின், அத் தேவலோகத் தலைவனையே முன்னிறுத்தி, அத் தேவலோக வாழ்வு எவ்வளவு கீழ்மையும் இழிதகைமையும் உடையது என்பதைத் தெளிவாக உணர வைக்கிருர்.

ஆபுத்திரன் அளவுக்கு மீறிய அறச்செயல் இந்திரனை நடுங்க வைக்கிறது. 'இந்திர போக' வாழ்வு, நாடகக் காட்சிக்கோ படக் காட்சிக்கோ நுழைவுச் சீட்டினைப் பெற்றுச் செல்வது போன்றது என்பது எல்லாச் சமயங்களும் கொண்ட உண்மை. ஒருவன் செய்த புண்ணியத்தின் பலன் முடியும் வரையில்தான் அவன் அங்கிருக்க முடியும். பிறகு அவன் பூமிக்குத் தள்ளப்படுவான். மேலும் இந்திர பதவி பிறவற்றினும் குறைந்தது. வாழும் இந்திரனைக் காட்டிலும் அதிகமாக ஒருவர் அறம் ஆற்றின், உரிய இந்திரன் காலம் கடப்பதன் முன்பே தள்ளப் பெற்றுப் புதியவன் அப் பதவியையும் இந்திராணியோடு வாழும் வாழ்வையும் பெறுவான் போலும். இந்த அடிப்படையில்தான் ஆபுத்திரனுடைய அறம் இந்திரனுக்கு நடுக்கத்தை உண்டாக்கியது எனச் சாத்தனுர் காட்டுகிருர்.

தன் பதவிக்கே கேடு வந்ததென அறிந்த இந்திரன் கிழ வேடங்கொண்டு பூமிக்கு வந்து, ஆபுத்திரன் முன்

நின்று, அவன் தானத்தின் பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறன், அவனுக்கு ஏதேனும் ஒரு பதவி இந்திர உலகில் தந்து சரிசெய்து விடலாம் என நினைத்திருப்பான். தனக்குப் போட்டியாக வருபவர்களை எத்தனையோ விதத்தில் சரிக்கட்டும் 'நாகரிக' உலகில் வாழும் நமக்கு இந்த முறை புதியதன்றே! ஆனல் தம் கடமை உணராது தலைமைக்கும் உரிமைக்கும் போட்டியிடும் இன்றைய அநாகரிகரைப் போலாது, ஆபுத்திரன் கடமைக்காக அறஞ் செய்கின்றவனுதலின் பயன் எதிர்பார்க்கவில்லை. மேலும் சாத்தனுர் இந்த இடத்தில் இந்திர உலகத்தின் இழிநிலையைக் காட்ட நினைக்கின்ருர்; எழுதுகிருர்.

"அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்நன் ஞட்டுக்கு
இறைவ ஞகிய பெருவிறல் வேந்தே" –14/40-43

என்று அத் தேவநாட்டு இழிநிலையைக் காட்டுகிருர். எனவே, தெய்வ உலக வாழ்வு,உலக வாழ்வினும் மிகவும் தாழ்ந்ததென்பதையும், அந்நாட்டில் நல்லவர் யாரும் இல்லை என்பதையும், அறவோரும் பண்பாட்டாளரும் அவ்வுலகை விரும்ப மாட்டார்கள் என்பதையும் அவ் வாழ்வைச் சிறப்பித்துக் கூறும் அந்தணர் மரபில் தோன்றிய ஆபுத்திரன் வாயிலாகவே காட்டி நம்மைத் தெருட்டுகிருர். இந்த அடிப்படையில்தான் பின்வந்த பலரும் அத் தேவ உலக வாழ்வை அறவே வெறுத் தொதுக்குகின்றனர் என அறியலாம்.

## அறநெறிப் புரட்சி

இந்த அடிப்படையிலே அறம் பற்றிய மற்ருெரு புரட்சியையும் சாத்தனுர் நம்முன் காட்டுகின்ருர். சாத் தனுர் காலத்தில் வைதிக நெறி வலுப்பெற்ற காரணத்தால் 'பார்ப்பார்க் கல்லது பணியறி யலேயே' என்ற போற்றலும் அவர்கட்குப் பொன்னும் மணியும் புனைபூணும் அளித்தல் அறமெனக் கொள்ளலும் சிறந்தனவாக ஏற்கப் பெற்றன போலும். இத்தகைய அறவழியில் பொருள் பெற்ற ஒரு வன், திருத்தங்காவில் தான் பெற்றவற்றை, வேதத்தை

நன்கு சொன்ன ஒரு பிராமணப் பிள்ளைக்குக் கொடுத்ததாகச் சிலப்பதிகாரம் செப்புகிறது. எனவே இத்தகையவற்றை அறமல்ல எனக் கண்டிக்க நினைத்த சாத்தனார் உயிர்களுக்குள் யாதும் வேறுபாடு கருதாது உயிர்கள் எல்லாவற்றிற்கும் உணவளித்தலே சிறந்த அறம் எனக் காட்டுகின்றார்,

"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்" –25/228-231

என்று கூறி, உண்டி, உடை, உறையுள் இவையன்றி வேறு எதையும்—மேலே கூறிய வைதிக வழி வரும் பிறவற்றை—அறமெனக் கொள்ளலாகாது எனத் திட்டமாகக் கூறுகிறார்.

இவ்வாறு அறமாற்றுவதைப் பற்றி மற்றொரு விளக்கமும் தருகிறார். விருந்தென்றும் விழாவென்றும் வேண்டியவர்களை அழைத்து வைத்துப் பொழுது போக்கும் இன்றைய வன்கண்மையையும் சாத்தனார் கண்டிக்கத் தவறவில்லை. ஆற்றாமக்களுக்கு அளிப்பதே உண்மையில் கொடையாகும் என்ற உண்மையை,

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகில் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"
–11/92-96

எனக் காட்டி, மற்றவர்களை அறவிலை வாணிகராக்கி இகழ்கின்றார்.

## வினையின் வலிமை

நம் வாழ்வில் வினையே வலியுடையது என்பதற்கென இந்த இரு காப்பியங்களும் எழுந்தன. இளங்கோவடிகள்

கோவலன் கண்ணகியை முன்னிறுத்தி, அவர்தம் பழம் பிறப்பை உணர்த்தினர். சாத்தனரோ எத்துணை முடியுமோ அத்துணை அளவு பாத்திரங்களின் பழம்பிறப்பைக் காட்டு கிறார். பழம்பிறப்பினை மட்டுமின்றி அவர்தம் பழைய எலும்புகளையும் காட்டுகிருர். மேலும் வினையின் வினை வால் கழிந்த பிறப்புக்களைக் காட்டுவதோடு, அவ்வினை கூட்டவரும் மேல் வினை பிறப்புக்களைப் பற்றியும் சாத்த ஞர் சுட்டுகிருர். மொத்தத்தில் உயிர் சுழன்று சுழன்று வரும் வாழ்வியலைத் தம் சமய நெறியியலோடு புகுத் துகிருர். சிலம்பில் காட்டிய வினையினை மணிமேகலை வாயி லாகவே சாத்தனர்,

> "எம்மிதில் படுத்து வெவ்வினை உருப்ப
> கோற்ருெடி மாதரொடு வேற்றுநா டடைந்து
> வைவா ளுழந்த மணிப்பூண் அகலத்து
> ஐயாவோ" -8/40-43

எனக்காட்டி, மணிமேகலைக்கு இனி அவள் முன்னை வினை யின்படி நடப்பதையெல்லாம் காட்டத் தொடங்குகின் ருர். நல்லறம் செய்வோர் அவ்வறவினை வயத்தால் செல்வ நலம் பெறுவதும் அல்லோர் அவல முறுவதும் உலகியல் என்ற உண்மையை,

> "நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து
> வித்தி நல்லறம் விளைந்த அதன்பயன்
> துய்ப்போர் தம்மனை துணிச்சிதர் உடுத்து
> வயிறுகாய் பெரும்பசி அலைத்தற் கிறங்கி
> வெயிலென முனியாது புயலென மடியாது
> புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
> அறங்கடை நில்லா தயர்வோர் பலரால்"-11/107-118

என விளக்குகிருர்.

உதயகுமரன் வாளால் வெட்டப்படுவதற்கு அவனு டைய ஊழ்வினையே காரணம் என அறிவோம். ஆனுல் அதற்குச் செயல்பட நின்ற விஞ்சயனையும் அவ்வாளால்

வெட்டிய ஊழ்வினை பற்றும் எனக் காட்டுகிறார். ஆக, ஒருவர் தம் ஊழ்வினை காரணமாகப் பெறும் எச்செயலும் அச்செயலைச் செய்வோனுக்கும் பயன்தரும் என்ற புது விதியை–அதுவரை யாரும் சொல்லாத விதியைச் சாத்தனார் சொல்லுகிறார்.

'ஊழ்வினை வந்திங் குதய குமரனை
ஆருயிர் உண்டது ஆயினு மறியாய்
வெவ்வினை செய்தாய் விஞ்சைக் காஞ்சன
அவ்வினை நின்னையும் அகலா தாங்குறும்''—20/123-126

என்று காட்டுகிறார். இதே அடிப்படையில்தான், இளங்கோ வடிகள் கூறுது விட்டபோதிலும் கண்ணகிக்கு, மதுரையை எரித்த காரணத்தால், மறுபிறப்புக்கள் பல உள என இவர் காட்டுகிறார். எனவே, வினையின் வலிமை இளங்கோ வடிகளைக் காட்டிலும் சாத்தனாரால் நன்கு விளக்கிக் காட்டப் பெறுகின்றது.

## இல்லறச் சிறப்பு

புத்த சமயத்தையும் துறவறத்தையும் வற்புறுத்துகிறார் என்ற கூற்றினை மறுத்துச் சாத்தனார், நாமெல்லோரும் மேற்கொள்ளும் இல்லற வாழ்வின் ஏற்றத்தையும் பாராட்டுகிறார். நாம் மேலே கண்ட கற்புநெறி அந்த அடிப்படையில் அமைவதேயாம். அக்கற்பில் வரும் இல்லற நெறி நிற்கும் நல்ல மகளிரால்தான் வையம் தழைக்கும் என்ற நம்பிக்கை உடையவர் சாத்தனார். அதனாலேயே துறவியாகிய மணிமேகலை அமுதசுரபியால் தன் பணியைத் தொடக்க, இல்லற நெறிபற்றி வாழும் கற்புடையளாம் ஆதிரை நல்லாள் முன்சென்று நிற்கிறாள். விசாகையின் வரலாற்றைக் கூறுகையில்,

''பத்தினி இல்லோர் பலஅறம் செய்யினும்
புத்தேள் உலகம் புகார்'' —22/117-118

என்று திட்டமாக இல்லற வாழ்வு அற்றவர் இம்மை மறுமைப் பயன்கள் அற்றவரே எனக் காட்டுகிறார்.

ஆதிரையின் கற்புநெறி பற்றியும் ஈண்டே நினைத்தல் வேண்டும். இல்லறம் வழுவா நெறியில் ஒழுகிய காரணத்தால், வாழ்கின்ற தன் கணவன் இறந்தான் என எண்ணித் தீப்புக முயல்கின்ருள் ஆதிரை. ஆனுல், அங்கியந்தேவன் அவளைச் சுடவில்லை. அவள் தீயிடை நின்ற தன்மையைச் சாத்தனுர்,

**"படுத்துடன் வைத்த பாயல் பள்ளியும்**
**உடுத்த கூறையும் ஒள்ளெரி யுருது**
**ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலில்**
**சூடிய மாலையும் தொன்னிறம் வழாது**
**விரைமலர்த் தாமரை ஒருதனி இருந்த**
**திருவின் செய்யோள் போன்றினி திருப்ப"** —16/29-34

எனக் காட்டுகிருர். எனவே பிற்காலத்தில் வந்த வெற்றுத் துறவை வற்புறுத்தும் புத்த நெறியாகிய மகாயான மரபிலன்றிச் சாத்தனுர் வாழ்வாங்கு வாழும் இல்லற நெறியையும் உளம் தூய்மையாகி அறம் போற்றும் துறவற நெறியையும் இணைத்தே பாராட்டுகிருர். பிறவி, 'பற்றின் பற்றிடம் குற்றம் கொள்கல'மாக இருப்பினும், இல்லறம் துறவறம் என இரு நெறியிலும் அவ்வந் நெறிக்குரிய வழியே தான் தவருது ஒழுகின் தெய்வநலம் பெறலாம் என்பது சாத்தனுர் கருத்தாகும். எனவேதான் கற்பின் சிறப்பினையும் இல்லற ஏற்றத்தினையும் பிற இல்வாழ்வுக்குரிய விருந்தினரை ஏற்றல், துறவியைப் போற்றல் முதலிய பண்புகளையும் சிறக்கக் கூறி, அவற்றுடன் துறவும் வைத்துப் போற்றக்கூடிய நிலையில் தம் காவியத்தைச் செய்கின்ருர். பௌத்த தருமத்திலேயே 'பத்தினி'ப் பெண்டிருக்கு உரிய ஒழுக்கங்கள் சிறப்பாகப் பேசப் பெறுகின்றன.[1] சாத்தனுர் கருத்தெல்லாம் இல்லறம் துறவறம் இரண்டிடத்தும் தம் சமயமாகிய பௌத்தத்தைப் பரப்பவேண்டும் என்பதேயாகும்.

1. டாக்டர் ஐயர் முன்னுரை—பக்கம் 104, 105.

## வாழ்க்கைப் புரட்சி

ஆதிரையின் கணவனுகிய சாதுவன் வாழ்வில், உலகில் இருவேறு வகைப்பட்ட மக்கள் வாழ்வதைக் காட்டி, அவற்றுள் ஏற்றமிக்க வாழ்வு எது என்பதையும் நன்கு விளக்குகிறுர். கலத்திலிருந்து தப்பிய சாதுவன் 'நக்க சாரணர் நாகர் வாழ்மலைப் பக்கம் சார்ந்து அவர் பான்மையனுயினன்' என்பர் சாத்தனுர். அத் தீவு முன் நாம் கூறிய நாகநாட்டுத் தீவுகளில் ஒன்றுகக் கொள்வதிலும் நிக்கோபார் தீவுகளில் ஒரு சிறு தீவு எனக் கொள்வது பொருத்தமெனக் கொள்வர் சிலர்.

நாகர் மலையைச் சார்ந்த சாதுவன், அம்மக்களின் குருமுன்னர் அழைத்துச் செல்லப்பெற, அவன் கற்ற அவர்கள் மொழியிலேயே பேசத் தொடங்குகிறுன். குருமகனுக்கும் சாதுவனுக்கும் இடையில் நடைபெறுகின்ற உரையாடலே ஈண்டு எண்ணத்தக்கது. இன்றைய உலகில் நன்ருகக் குடித்துப் புலாலும் புழுக்கலும் உண்டு, கண்ட மகளிரொடு களிநடம்புரிவதை நாகரிகமெனச் சிலர் போற்றுகின்றனர். பண்பின் நிலைக்களனுகிய தமிழ்நாட்டிலேயே இத்தகைய கூத்தும் பாட்டும் குடியேறி ஆட்சி செலுத்தத் தொடங்கியுள்ளமை அறிவோம். "பெண்டிர், உண்டி" இவை இரண்டுமே மனிதருக்கு இன்றியமையாதன என எண்ணும் மாக்களும் அவர்வழிச் செல்லும் சமுதாயமும் அச் சமுதாயத்தில் உயர்ந்தார் எனப் பெறும் ஒரு சிலரும் இன்று வாழ்ந்து வருவதைப் பல 'நாகரிக' நாடுகளில் கண்கிறேம். ஆனல் அதே வேளையில் குறளும் கீதையும் பிற அறநெறி பற்றியும் சமயம் பற்றியும் பறைசாற்றும் நூல்களும் பல இலட்சக்கணக்கில் அச்சிடப் பெற்று வழங்கப் பெறுகின்றன. இந்த இரண்டின் இடைப்பட்ட மக்கள் சமுதாயத்தில் வாழும் சில நல்லவர்கள் செய்வதறியாது திகைக்கின்றனர்.மறுபிறப்பைப் பற்றிக் கவலையுருது உயிரைப் பற்றி ஒன்றும் சிந்தியாது, உடலைமட்டும் ஓம்பி அதன் ஆவலை நிறைவேற்றும் வெறும் மிருக உணர்ச்சி

யின் உருவமாகவே நாகர்தம் குருமகன் நிற்க, உண்மை விளக்கும் ஒளி விளக்காகச் சாதுவன் காட்சி தருகிறான்.

குருமகன் சாதுவனை ஏற்று உபசரிக்கும் முறை விசித்திரமானது.

"அருந்துதல் இன்றி அலைகடல் உழன்றோன்
வருந்தினன் அளியன் வம்மின் மக்காள்
நம்பிக் கிளையோர் நங்கையைக் கொடுத்து
வெங்களும் ஊனும் வேண்டுவ கொடும்" –16/74–77

என அவன் ஆணையிடுகிறான். இன்றைய நாகரிகத்தில் சில பெரும் விடுதிகளில் தங்குவோர் இத்தகைய வரவேற்பினை யும் உபசரிப்பினையும் பெறுகிறார் என்று கேள்விப்படு கிறோமல்லமோ! ஆமாம்! இங்கே பணம் தேவை. அங்கே அரசாங்க உபசரிப்பே அப்படி! ஆனால் சாதுவன் மனிதப் பண்பு தூண்டப்பெற்றவன். அவன் வாழ்வின் முற்பகுதி யில் 'கணிகை ஒருத்தி கைத்தூண் நல்க, வட்டினும் சூதி னும் வான்பொருள் வழங்கி' னவனாயினும், பின் தெளிவு பெற்ற சிந்தையினன் ஆனமையின், 'வெவ்வுரைகேட்டேன் வேண்டேன்' என அஞ்சி ஒதுங்குகிறான். அதற்கு நாகர் தலைவன் இன்றும் சிலர் பேசுவது போன்று,

"பெண்டிரும் உண்டியும் இன்றெனில் மாக்கட்கு
உண்டோ ஞாலத் துறுபயன்?" –16/80–81

எனக் கேட்கிறான். இதற்குப் பதிலாகச் சாத்தனார், சாது வன் வாயிலாக, உலகுக்கு – இன்றைய உலகுக்கும்தான் – அறிவுரை பகர்கின்றார்.

"மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்

அல்லறம் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்''
-16/84-90

எனக் காட்டி, கள்ளும் கொலையும் தள்ளப்படவேண்டிய- மக்கள் நீக்க வேண்டிய - இரு கொடுமைகள் எனச் சுட்டு கிறார். ஆனால் சாத்தனார் அத்துடன் அக் குருமகனைத் திருத்த முடியா நிலையில் அவன் வாயிலாகவே வேறொரு வினாவை விடுத்து, இன்றைய உலகில் வாழும் நம்மில் பலருக்குத் தேவையான நல்ல விடையினையும் சாதுவன் வழியாகத் தருகின்றார்.

''உடம்புவிட் டோடும் உயிர் உருக் கொண்டோர்
இடம்புகு மென்றே எமங்கிங் குரைத்தாய்
அவ்வுயிர் எவ்வணம் போய்ப் புகும்?'

என்கிறான் குருமகன். அதற்குப் பதிலாகத் தர்க்க ரீதியில் சாதுவன்,

''உற்றதை உணரும் உடல் உயிர் வாழ்வுழி
மற்றைய உடம்பே மன்னுயிர் நீங்கிடின்
தடிந்தெரி யூட்டினும் தான் உணரா தெனின்
உடம்பிடைப் போன தொன் றுண்டென உணர்நீ
போனார் தமக்கோர் புக்கிலுண் டென்பது
யானே அல்லன் யாவரும் உணர்வர்'' -16/96-101

என்று உயிர் உடம்பினின்று நீங்குவது உண்மையென் பதையும் அது வேறு இடத்தில் சென்று சேரும் என்பதை யும் சுட்டிக் காட்டி, அது பெறும் பிறப்பினைக் காட்டி, மேலும் அவர்கட்கு வேண்டிய அறத்தையும் உணர்த்தித் திரும்புகிறான் சாதுவன். இந்தக் கதையில் சாத்தனார் இன்றைய உலகில் போட்டியிடும் இருவேறு கொள்கை களைச் சுட்டி, அதில் வெல்லவேண்டுவது யாது என் பதைத் திட்டமாக உணர்த்துவதுபோல அறமுரைக் கின்றாரன்றோ!

இவ்வுடம்பும் உயிரும் கொள்ளும் தொடர்பினையும் ஒன்றை விட்டு ஒன்று பறக்கும் நிலையினையும் மற்ருேரிடத்தில் மணிமேகலை வாககாலேயே விளக்கி, அந்த உண்மையின் அடிப்படையில் எல்லா உயிரையும் ஒத்து நோக்க வேண்டும் என்ற பேருண்மையினையும் சுட்டுகிருர். தன் மகன் இறந்த நிலையை எண்ணித் தனக்குத் தீங்கிழைத்த அரசமாதேவியை நோக்கி,

"உடற்கழு தனையோ உயிர்கழு தனையோ
உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே?
உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்
செயற்பாட்டு வினையால் தெரிந்துணர் வரிது
அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்" 23/73-79

என்று மணிமேகலை பேசுவதைக் காட்டுகிருர் சாத்தனுர்.

## நாம் கடிய வேண்டுவன

சமய நெறியை வற்புறுத்துகின்றவர் எனினும் சமுதாய நெறியில் மக்களை மாக்களாக்கும் கொடுமைகளை எண்ணிப் பார்க்கத் தவறவில்லை சாத்தனுர். அறநெறியை இடைக் காலத்தவர் சமய நெறியொடு பின்னிப் பிணைத்தமை போன்றே சாத்தனுரும் செய்கின்ருர். எனினும், சில விடங்களில் சங்க இலக்கியங்களை ஒட்டியும் வள்ளுவர் குறளை ஒட்டியும் அறத்தைத் தனிப்படுத்தியும் காட்டுகின்ருர். நல்வினை, தீவினை இரண்டையும் பாகுபடுத்தி ஒன்றைக் கொண்டு மற்றதைத் தள்ளி நாம் வாழ வேண்டும் என வற்புறுத்துகிருர். அறவண வடிகளாம் பெரியார் வாக்காலேயே இந்த நல்வினை தீவினை இரண்டினையும் காட்டுகிருர்.

"தீவினை என்பது யாதென வினவின்
ஆய்தொடி நல்லாய்! ஆங்கது கேளாய்!
கொலையே களவே காமத்தீ விழைவு
உடலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்

பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்று
உள்ளந் தன்னில் உதிப்பன மூன்றுமெனப்
பத்து வகையால் பயன்தெரி புலவர்
இத்திறம் படரார்'' –24/123-132

என வள்ளுவர் அடியொற்றி, புலவர் காட்டிய வாழ்வறத்தில் நீக்க வேண்டிய தீவினைகள் இவை என்றும், உள்ம், உரை, உடம்பு ஆகியவை பற்றி இவை தோன்றுவதனுல் இம்மூன்றையும் கட்டிக் காக்க வேண்டுமெனவும் சாத்தனுர் நமக்கு அறத்தைச் சுட்டுகிருர். இதை காப்பாரே உயர்திணையாகிய மக்களாவார். அல்லார் மாக்களாவார் என்ற தொல்காப்பிய நெறியை நினைத்து, அடுத்து நல்வினையைக் காட்ட வந்த சாத்தனுர்,

''நல்வினை என்பது யாதென வினவின்
சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கிச்
சீலம் தாங்கித் தானம் தலைநின்று
மேலென வகுத்த ஒருமூன்று திறத்து
தேவரும் மக்களும் பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் உண்குவர்'' –24/135-140

என்கின்ருர்.

மேலும் இவற்ருல் விளைவனவும் இவற்றுக்கு மூலமாக நிற்பனவுமாகிய ஐவகைக் கொடுமைகளையும் அவற்றை நீக்க வேண்டிய நிலையினையும் சாத்தனுர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

''முடிபொரு ளுணர்ந்தோர் முதுநீ ருலகில்
கடியப் பட்டன ஐந்துள அவற்றில்
கள்ளும் பொய்யும் களவும் கொலையும்
தள்ளா தாகும் காமம்'' –22/169-172

என்கின்ருர்.

ஈண்டுக் காமம் என்பது சங்க இலக்கியத்தில் வழங்கும் காதன் மனையாளும் காதலனும் கொள்ளும் வாழ்வின் உயர் பொருளன்றி, பின்வந்தார் வாக்கின்படி இழிபொருளில்– 'மிகுபேராசை' என்ற வகையில் அமைந்தது எனக் கொள்ளல் வேண்டும். உண்மையிலேயே சங்க இலக்கியத்தில் காணப்பெறும் இன்ப வாழ்வைச் சாத்தனுர் வெறுப்பவராயின், நாம் மேலே கண்டபடி கற்பொடு புணர்ந்த இல்லறமாம் காதல் வாழ்வின் ஏற்றத்தை எண்ணிக் காட்டமாட்டாரன்றே? மேலும் அவரும் இளங்கோவடிகளைப் போன்று துறவியாக வாழவில்லை என்பதும் கூலவாணிகம் செய்து குடி ஓம்பி இல்லறத்தை மேற்கொண்டவர் என்பதும் ஏற்கக் கூடியன அல்லவோ!

## அரசியல் பற்றி

நாட்டு மக்கள் அனைவரும்–ஏன்?—உயிர்கள் அனைத்தும் நலமுற்று வாழவேண்டும் என்பதே சமய வாழ்வின் அடிப்படை—சமுதாய நெறியின் அடிப்படையும் அது தான். அரசியல் நெறியும் அதுவேயாகும். ஆளுகின்ற அரசு, நாட்டு மக்களுக்கு—உயிர்களுக்கு என்று எல்லாச் செல்வ வளங்களையும்—குறைந்தது உண்டி, உடை, உறையுள் ஆகியவற்றை—வழங்குகின்றதோ அன்றே நாடு சிறந்ததாகும். இதை என்றும் எல்லாக் காலங்களிலும் ஆட்சியாளர் செய்யக் கடமைப்பட்டவராவர். சாத்தனுர் என்றும் இல்லாவிடினும் விழா நாட்களிலாயினும் நாட்டுமக்கள் நலம்பெற வேண்டும் என விரும்புகிறுர். எனவேதான் பட்டத்து யானை மீது அமர்ந்து, அரசர்க்குரிய வள்ளுவ முதுமகன், விழா அறையும்போது,

> "பற்று மாக்கள் தம்முட னுயினும்
> செற்றமும் கலாமும் செய்யா தகலுமின்" —1/52-63

என்றும்,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன்" —1/70-72

என்றும் காட்டுகிறார். அத்தகைய ஒன்றிய—மாறுபாடற்ற அரசியல் வாழ்வே சமூக வாழ்வைச் செம்மையாக்க வல்லது என்பதை நன்குணர்ந்தவர் சாத்தனார் மட்டுமன்றி, அக்காலத்தில் வாழ்ந்த எத்தனையோ புலவர்கள் இந்த அடிப்படை உண்மையினையே அரசாளுவோருக்கு உணர்த்தியுள்ளனர். மேலும் அரசர்களுக்கு உரிய இன்றியமையா அங்கங்கள் இவை இவை எனக்காட்டி, அவ்வங்கங்களைச் சேர்ந்த நல்லோர் இணக்கத்திலேயே நாட்டைத் திறம்படக் கொண்டு செல்ல வேண்டுமெனக் குறிப்பிடுகிறார்.

நல்லவர் நாட்டில் ஆண்டால் மக்களும் உயிர்களும் மகிழ்ச்சியில் திளைத்து, எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தி வாழ்வார்கள் என்பதைப் புண்ணியராசன் ஆட்சியைக் காட்டி நமக்குச் சாத்தனார் விளக்குகிறார். இவன் ஆட்சியைப் பற்றி முன்னமே அவன் நாட்டினைக் கண்ட போது ஓரளவு கண்டிருக்கிறோம்,

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" —புறம் 187/3-4

"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றிலும்
காலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்"
—புறம் 35/27-29

என்பன போன்ற புறநானூற்று அடிகளில் காணும் அரசியல் அடிப்படை உண்மைகளை எண்ணிய சாத்தனார் நாகபுர நல்லாட்சியைக் காட்டி நம்மை உணரச் செய்கிறார்.

"... ... ... நன்னகர் ஆள்வோன்
பூமி சந்திரன் மகன் புண்ணியராசன்
ஈங்கிவன் பிறந்த அந்நாள் தோட்டும்.
ஓங்குயர் வானத்துப் பெயல்பிழைப்பு அறியாது
மண்ணும் மரனும் வளம்பல தருஉம்
உண்ணின் றுருக்கும் நோய் உயிர்க்கு இல்"—241/69-174

எனக் காட்டுஞ் சாத்தனுர் நல்ல அரசியல் உண்மையை உணர்த்துகிறுர். 'பெயல் பிழைப் பறியாது' என்பதற்கு கிருஷ்ணசாமி ஐயங்கார்[1], போப்[2] ஆகியோர் மழை பெய்தலைத் தவிரவில்லை எனப் பொருள் கொண்டாலும், சாத்தனுர் அந்த அளவில் 'பிழைப் பறியாது' என்பதைக் கூறவில்லை என உணர்தல் வேண்டும். மழை தவருது அளவுக்கு மீறிப் பெருயுமானுல் நாட்டில் அவல மன்றே தோன்றும். அண்மையிலும் நாம் அதன் கொடுமையைக் கண்டோமல்லவா! எனவே மழை அடியோடு பெய்யா மல் நின்றும் தவறு செய்யாது; அளவுக்கு மீறிப் பெய்தும் தவறு செய்யாது என வகைப்படுத்தி, நல்லவர் நாட்டில் வாழ்ந்தால் இருவகையாகவும் மழை—வானம் தவறு செய்யாது என்ற உண்மையினையே சாத்தனுர் வற்புறுத்து கிருர். இந்த உண்மையை நன்கு விளக்காவிடினும் பஞ்சாபகேச ஐயர் அவர்கள்[1] "The rains have been reguler' எனப் பொருள் கொள்வது பொருந்துவதாகின் றது. டாக்டர் ஐயர் அவர்களும் பிழைப்பு அறியாது என்ப தற்கு 'தவறுதலை அறியாது'[2] எனவே பொருள் கொள்கிருர். எனவே, சாத்தனுர் நல்லார் வாழும் நாட்டில் இயற்கை எந்த வகையாலும் கெடுதல் செய்யாது என்பதையே வற்புறுத்த விழைகின்ருர் என அறிதல் வேண்டும்.

அடுத்து நல்லவர் ஆளும் நாட்டில் எந்தவிதமான பிணியும் இருக்கக் கூடாது என்ற பெரும் புரட்சிக்

---

1. Manimekalai in its Historical Settings. Page 180
2. Translation by G. U. Pope. Page 55.
3. The story of Manimekalai· Page 44.
4. மணிமேகலை—உ. வே. சா. பதிப்பு. பக். 2.

கருத்தையும் உண்டாக்குகிருர். அதனுல் விழாவிலும் 'பசி யும் பிணியும் பகையும்' நீங்க வேண்டும் என முரசறைய வைக்கிருர். உண்மையும் அதுதான். நல்ல நாட்டுக்கு— நல்ல அரசுக்கு இலக்கணம் 'தன்னுட்டு மருந்தகங்களில் ஒரு நோயாளிக்கூடக் கிடையாது' என்று சொல்லுவது அன்றி, 'ஊர்தொறும் மருந்தகங்கள் கட்டிவிட்டோம்' என்று சொல்வது அன்று. எந்த நாட்டில் மருந்தகங்கள் நோய் உற்ருறின்றிச் சிறக்கிறதோ அந்த நாடே வள்ளுவர் போன்ருேர்கள் காண விழைந்த பொன்னுடு என்பதைச் சாத்தனுர் தெள்ளத்தெளியக் காட்டிவிட்டார். மேலும் நோய்க்குக் காரணமாகிய பசியினைக் காட்டி, அதன்வழி மாருய பேருண்டியையும் சுட்டுகிருர் எனக் கொள்ளலாம். 'அருந்தியது அற்று அது போற்றி உண்ணும்' நோயற்ற வாழ்வினை வள்ளுவர் காட்டுகிருர் அன்ருே?

பகையை வள்ளுவர் பலவகையில் காட்டுவர். சாத்த னுர் அவை எல்லாவற்றையும் உள்ளடக்கி, நாட்டில் எப்பகையும் இல்லை என்ருல்தான் நலம் காணமுடியும் என்ற உண்மையை உணர்த்துகிருர். எனவே சாத்தனுர் அரசியல் தெளிவும் அறிவும் வாய்ந்த ஒருவர் என்பதும் அவர் காணவிழைந்த அரசியல், 'உலகில் என்று மலரும்' என்ற நிலைதான் அவர் மறைந்து 2000 ஆண்டுகள் சென்ற போதிலும் இன்றும் உள்ளது என்பதும் நினைக்கத் தோன்றுகின்றன.

சாத்தனுர் மருந்தகம் மட்டுமன்றிச் சிறையும் வெற் றிடமாகவே இருக்க வேண்டுமென விழைகின்ருர். அப் பணியையும் மணிமேகலையைக் கொண்டே செய்கிருர். 'சிறைச்சாலையில் இடமில்லை, திறந்தவெளிச் சிறைச்சாலை அமையுங்கள்' என்று கூறும் அரசினைக் காட்டிலும், 'எங்கள் சிறைச்சாலையுள் ஒரு கைதிகூட இல்லை' என்று கூறும் அரசே நாட்டிற் குகந்தது என்பதைத்தான் 'சிறைக் கோட்டத்தை அற கோட்ட மாக்கிய' காதை நமக்கு வற் புறுத்துகின்றது. சோழ மன்னன் மணிமேகலையின் வாய் மொழி கேட்டு,

"கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்
அறவோர்க் காக்கினன்" -19/161-162

என மாற்றி அமைத்தமையைக் காட்டுகிருர். சிறைக் கோட்டத்தில் கைதிகள் இல்லா நிலையைக் 'கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்' என்றே காட்டுகிருர். இதே கருத்தினை,

"சிறைப்படு கோட்டம் சீமின் யாவதும்
கறைபடு மாக்கள் கறை வீடு செய்மின்"
-சிலம்பு. 23/126-127

என்றும்,

"சிறையோர் கோட்டம் சீமின் யாங்கணும்
கறைகொழு நாடு கறைவீடு செய்மின்"

சிலம்பு. 28/203-204

என்றும் இளங்கோவடிகளும் விளக்கி உள்ளமை அறிதல் வேண்டும்.

எனவே, சாத்தனுரின் புரட்சிக் கருத்தினை இக்காலத் தவர் ஏற்றுக் கொண்டாலும், அன்றிக் கைவிடினும், அவர் காட்டிய "பசி, பிணி, பகை, சிறை, நோயாளி" என்பார் இல்லாத நிலையில் உள்ள நாடே நாடெனத் தக்கது என்பதை நல்லவர் ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டவராவர்.

அரசன் நீதி செலுத்தக் கடமைப்பட்டவன் என்ற உண்மையை மற்ருேரிடத்தில் சாத்தனுர் காட்டுகின்ருர். உதயகுமரன் வாளால் மாய்க்கப்பெற்றதை அறிந்த சோழமன்னன் தன் மகன் இறந்ததற்கென வருந்தாது, மற்ருென்றிற்காகவே வருந்துகின்ருன். ஆம்! அவன் குடியின் முன்னேர்களை அவன் உள்ளம் எண்ணுகிறது.

"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான் என்பதை
உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழிஉற ஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்"

மனுநீதி.44

எனச் சேக்கிழாரால் பாராட்டப்பெற்ற அந்த மனுச் சோழனை அவன் உள்ளம் எண்ணி இருக்கும். தனக்கும் அத்தகைய நல்வாய்ப்பு வந்தும், தானே தன்மகனைத் தண்டித்து முறைசெய்து பெருமை தேடிக்கொள்ள முடிய வில்லையே என அவன் உள்ளம் எண்ணியிருக்கும். அதை அவன் வாய்விட்டுப் பேசுவதாகவே காட்டுகிறார் சாத்தனார்.

"யான் செயற் பாலது இளங்கோன் தன்னைத்
தான்செய் ததனால் தகவிலன் விஞ்சையன்
மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலர் காவல் இன்றெனில் இன்றால்"

"மகனை முறைசெய்த மன்னன் வழியோர்
துயர்வினை யாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம்செவி இறுவதன் முன்னம்
ஈங்கிவன் தன்னையும் ஈமத் தேற்றிக்
கணிகை மகளையும் காவல் செய் கென்றனன்" -22/206-214

என்று காட்டி, அவன் செம்மையுள்ளத்தை விளக்கிய தோடு மாதவர் நோன்பும் மடவார் கற்பும் நல்லா வாழும்—ஆளும் நாட்டில்தான் நிலைக்கும் எனச் சுட்டிக் காட்டுகிறார். காஞ்சி மன்னன் தன் நாட்டுப் பஞ்சத்துக்குக் காரணம் தன் செங்கோல் கோடியமைதானோ என ஐயுறு வதை மேலே கண்டோம். இந்த உண்மையினை இளங்கோ வடிகளும் கூறியுள்ளமை நாமறிவோம். கொற்றவை கோயில் கதவந் திறக்கவில்லை என்பதைக் கேட்டதும் பாண்டியன் வாய்,

**"கொடுங்கோல் உண்டுகால் கொற்றவைக் குற்ற
இடும்பை யாவதும் அறிந்தீமின்" -சிலம்பு. -23/111-112**

என்று பேசியதறிவோம், எனவே, அரசாட்சி செய்வோர் யாருக்கும் எந்த வகையிலும் எவ்வகைத் துன்பமும் உண்டாகாமல் பார்த்துக் கொள்ளக் கடமைப்பட்டவர்கள் என்பதைச் சாத்தனும் அவரைப் போன்ற பெரும் புலவர்களும் வற்புறுத்திக் கொண்டே இருக்கின்றனர்.

ஈண்டு,

**"மாநிலங் காவல னுவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தான் பரிசனத்தநல்
ஊனமிலாப் பகைத் திறத்தால் கள்வரால் உயிர்தன்னால்
ஆனபகை ஐந்தும் தீர்த்து அறங்காப்பா னல்லனோ"
மனுநீதி. 36**

என்று அமைச்சராக இருந்த சேக்கிழார், அரசு எந்த வகையிலும் தன் கீழ் உள்ள எந்த உயிர்க்கும் ஊறு நேராமல் பார்த்துக் கொள்ளக் கடமைப்பட்டது என வற்புறுத்துவதையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

## காட்டிய மன்னர்

சாத்தனார் இத்தகைய நல்லாட்சியைக் காட்டுமுகத்தான் தம் காப்பியத்தில் பல மன்னர்களை நமக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறார். அவர்தம் பெயர்களையெல்லாம் வரிசைப்படுத்தித் தம் மணிமேகலையின் முன்னுரையில் ஐயர் அவர்கள் காட்டியுள்ளார்கள். அவருள் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் அரசர் சிலர்; சிலர் பாத்திரங்களாய்—கதை வழியாகவும் கருத்து வழியாகவும் அறிமுகப்படுத்தப் பெறுகின்றனர். தமிழ்நாட்டில் மட்டுமின்றி இக்கதையில் வரும் பாத்திரங்களின் பிறப்பைப்பற்றி மட்டுமன்றி, பிறநாடுகளிலும் பிற பிறவிகளிலும் தொடர்புடைய அரசர்களையெல்லாம் காட்டுகிறார் சாத்தனார். அவருள் பாரத, இராமாயண காலத்து மன்னர்களாகிய இராமன், விராடன், விசயன் போன்றோரும் இடம்பெறுகின்

றனர். இவர்களையெல்லாம் காட்டுழி, சாத்தனார், அவர்கள் வழியே நாடுகள் வாழ்ந்த நெறியினையும் நிலையினையும் காட்டுவதோடு அவரவர் தனி வாழ்வினையும் சுட்டிக் காட்டி, அவர்களும் தத்தம் வினைவழியே நின்று நல்லறம் அல்லறம் ஆகியவற்றின் பயனை அனுபவிக்கும் திறன் காட்டி, அவற்றின் வழியே அரசியலை மட்டுமன்றி, தனி மனிதனின் வாழ்வியலையும் சமுதாய வாழ்வியலையும் தொடர்பு படுத்தி விளக்கிக் காட்டி,நம் சமுதாய அமைப்பு எப்படி இருக்க வேண்டும் எனச் சுட்டுகிறார்.

## சாத்தனார் காட்டும் பிற

நாடுகள் பலவற்றையும் சாத்தனார் காட்டுகிறார் என்று கண்டோம். அவற்றுள் ஒன்று அங்க நாடு ஆகும். மணி மேகலை, மாதவி, சுதமதி ஆகியோர் பழம்பிறப்புக்களைக் கூறும்போது அவர்கள் அந்த நாட்டு மன்னனொடு கொண் டிருந்த தொடர்புகளையும் பிறவற்றையும் கூறுகிறார். அதன் தலைநகரம் கச்சய நகரமெனப் பேர்பெறுகிறது.

> "முந்தை முதல்வி முதியோ ளிருந்த
> குச்சரக் குடிகை"

என்ற அடிகளில், சம்பாபதி இருந்த கோயிலைக் குறிக்கும் போது, குச்சரம், என்பதைக் கூர்சரம் என ஆக்கித் தற்கா லத்திய கூர்ஜ்ஜர நாடெனக் கொள்ளுகின்றனர் சிலர். இக் கொள்கையைக் கொள்ளும் டாக்டர் ஐயர் அவர்கள்வாதத் தையும் பிறர் கூற்றுக்களையும் டாக்டர்கிருஷ்ணசாமி ஐயங் கார் அவர்கள் தக்க காரணங்கள் காட்டி மறுப்பதோடு,[1] அவ்வாறு கொள்வது மணிமேகலையைக் கி.பி. ஆறும் நூற்றாண்டுக்குப் பின் தள்ளும் அவல நிலையைத் தோற்று விக்கும் எனத் திட்டமாகக் காட்டுகிறார். கூர்ச்சர மக்கள் வெளிநாட்டவர்களென்றும் அவர்கள் கி.பி. ஆறும் நூற்றாண்டிற்குப் பின்னரே இந்தியா வந்தனர் என்றும்

---

1. Manimekalai in its Historicni Settings.

வரலாற்று அடிப்படையில் விளக்குகிறுர். கூர்ஜ்ஜரம் என்ற வடமொழிச் சொல்லே குச்சரம் என்ற திராவிட மொழிச் சொல்லிலிருந்துதான் வந்திருக்குமோ எனவும் அவர் எண்ண வைக்கிறுர். குச்சரக் குடிகை என்பது சிறு கோயில் என்ற அளவில் பொருள்கொள்ள அமையும் என்பதையும் மயிலே சீனி வேங்கடசாமி அவர்கள் மறுத்துள்ளார்கள்[1] ஓலேவேய்ந்த கோயில் என்பது அதற்குப் பொருள் எனக் காட்டி, தம் கொள்கைக்குரிய ஏதுக்களே யும் எடுத்துக் காட்டுகிருர் அவர். எப்படியாயினும் சாத்தனுர் கூர்ச்சர நாட்டைக் குறிக்கவில்லே என்பது தெளிவு.

உத்தர மகதநாடு சாத்தனுரால் குறிக்கப் பெறுகின்றது. இம்மகத நாட்டிற்கும் அதன் தலேநகரமாகிய பாடலி புரத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் உள்ள தொடர்பு மாமூலர் பாடல்வழி கி.மு. மூன்ரும் நூற்ருண்டு முன்பே விளக்கப் பெறுகின்றது. எனினும் அவை அரசியல் சார்பு பற்றியவை. சாத்தனுர் அந்நாட்டை இந்நூலில் சமயச்சார்பு பற்றியே இணேக்க வைக்கிறுர். புத்தருடைய பரிநிருவாணம் பெற்ற பெருநாடாதலின் அதைப் பாராட்டுவதோடு, உயிர்கள் இறுதியாக இறைநிலேயுற வேண்டுமாயின் அந்த நாட்டிலே சென்று ஆண்பிறப்பினேப் பெறவேண்டும் எனக் குறிக்கின்ருர். கண்ணகி மறுபடி உலகில் பிறந்து, இறுதியாக இறைநிலே யுறும்போது,

''மறந்து மழையரு மகதநன் ஞட்டுக்
கொருபெருந் திலமென் றுரவோ ருரைக்கும்
கரவரும் பெருமைக் கபிலேயம் பதியில்
அளப்பரும் பாரமிதை அளவின்று நிரைத்துத்
... ... ... ... ...
பிறவி நீத்த பெற்றிய-மாகுவம்'' –26/42–50

---

1. மயிலே. சீனி. வேங்கடசாமி–பௌத்தமும் தமிழும் பக். 207.

என்று கூறித் தனக்கும் கோவலனுக்கும் இறுதிப் பிறவிகள் அங்கே நிகழும் என அத்தெய்வமே கூறியதாகக் குறிக் கின்றார்.

கலிங்க நாட்டையும் சாத்தனார் குறிக்கின்றார். இது, கோவலன் முந்தைப் பிறப்பை இளங்கோவடிகள் கூறி யாங்கு, கண்ணகி மணிமேகலைக்குக் கூறியவகையில் காட்டப் பெறுகின்றது. காந்தார மென்னும் பெருநாடும் அதன் ஒரு பகுதியாகிய பூர்வ நாடும் அதன் தலைநகராகிய இடவய நகரமும் மணிமேகலையின் முந்தைப் பிறப்பைக் காட்டும் வகையில் பீடிகை கண்டு பிறப்புணர்ந்தபோது விளக்கப் பெறுகின்றன. ஆயினும் அவை நில நடுக்கத் தால் அழிந்தன என்கின்றார். அந்நகரத்தரசன் அவந்தி நகரம் செல்லும்போது காயங்கரை என்ற ஆற்றின் கரையில் தங்கியதாகவும் குறிக்கின்றார். இவையெல்லாம் வட இந்திய எல்லையில் உள்ள பகுதிகளாகும்.

சாவக நாடு, நாக நாடு முதலியன தமிழ்நாட்டினை ஒட்டிய நாடுகளைக்கண்டோம். இந்நாடுகளை யன்றி துடித லோகம், வித்தியாதர உலகம் முதலிய வேற்று நாடு களையும் உலகம் என்ற பெயராலே குறிக்கின்றார். இந் நாடுகளைப் பற்றிக் கூறும் போதெல்லாம் அங்கங்கே உள்ள நகரங்கள், ஆறுகள், மலைகள், அவற்றுள் வாழும் முனிவர்களின் பெயர்கள் ஆகியவைபற்றிய குறிப்புகளும் கூறப்பெறுகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை நாம் கண்டோம். மலைகளில் முக்கியமானது சமந்தம் என்றும் கூறப்பெறுவது. இம்மலை மகத நாட்டுத் தலைநகரம் இருந்த இராசக்கிருக நகரத்தின் சமீபத்தில் உள்ளது என்றும் புத்த தேவன் எல்லா உயிர்களுக்கும் தரும சிந்தையை உண்டாக்க நினைத்து, அவைகளெல்லாம் கேட்கும்படி இதன்மேல் நின்று தருமோபதேசம் செய்தபொழுது அவன் பாதச்சுவடு தங்கப் பெற்றமையின் இது 'பாத பங்கயமலை' எனப் பெயர்பெற்றது என்றும் கூறுவர் ஐயர்

அவர்கள்.[1] இதே பெயரில் இலங்கைத் தீவின் மத்தியில் ஒரு மலை இருக்கிறது. இதிலும் புத்த தேவனின் அடிச்சுவடு பொருந்தியுள்ளதென்பர். எனினும் மகத நாட்டு மலைக்கே இவ்வரலாறு பொருந்தியாக வேண்டும். பின் அசோகர் காலத்தில் பௌத்தம் இலங்கையில் பரவிய காலத்து அந்நாட்டு மக்கள் தம்மொடு புத்தரைத் தொடர்பு படுத்திக்கொள்ள அவர் பல்லாகிய 'கண்டி' யைக் கொண்டுவந்து வைத்துக் 'கண்டி' என்றே பேரூரையே உண்டாக்கியமை போன்று, புத்த தேவனுடைய பாதங்களை இம்மலையில் பொறித்துப் 'பாதபங்கய மலை' என அமைத்துக் கொண்டார்கள் என்பது பொருந்தும். மேலும் இம்மலை புத்தர்களுக்கு மட்டுமின்றி ஆண்டுள்ள கிறித்தவர், சைவர் ஆகியோருக்கும் 'ஆதாம் உச்சி' 'சிவனொளி பாதமலை' என்ற வகையில் முக்கியமாகக் கொள்ளப் பெறுகின்றது.

இவ்வாறு சாத்தனார் தம் மணிமேகலைக் காப்பியத்தை இமயமலை தொட்டு அதனடியிலுள்ள உத்தர மகதம் தொடங்கி, தெற்கே தமிழ்நாட்டு எல்லைக்கு அப்பாலுள்ள இலங்கை, மணிபல்லவம், நாகநாடு, சாவகம் ஆகிய நாடுகள் வரையில் உள்ள எல்லா நாடுகளையும் உள்ளடக்கி, அவற்றுளெல்லாம் தம் சமயம் ஆதிக்கம் செலுத்தி ஓங்கி இருந்ததென்பதை நமக்கெல்லாம் தெளியவைக்கிறார்.

சில நாடுகளை இவர் 'தீவகம்' என்றே குறிப்பிடுகிறார். நம் பாரத நாட்டுக்கே 'சம்புத் தீவகம்' என்ற பெயர் உண்டல்லவா? ஒரு காலத்தில் இது தனித் தீவாக இருந்து, இமயம் கடலுள் ஆழ்ந்த காலத்தில் சிறந்து விளங்கி, பின் பிற நிலப்பகுதிகளோடு இணைந்தது என நில நூலாய்வாளர் கூற்றினை ஒத்து நோக்கின் இப்பெயர் பொருந்தும் எனக் கொள்ள வேண்டியுள்ளது. இச் சம்புத் தீவகம் நிற்க, இரத்தின தீவகம், இலங்கா தீவகம், சிறுதீவு இரண்டாயிரம், பெருந்தீவு நான்கு, மணிபல்லவத் தீவு முதலியவை

1. மணிமேகலை உ.வே.சா. பதிப்பு பக். 486

களையும் சாத்தனர் குறிக்கின்றர். இவற்றுள் இரத்தின தீவகமும் இலங்கா தீவகமும் ஒன்றேயாகும். மகா தீவு நான்கனுள் ஒன்று நம் சம்பூத் தீவகம் என அறிகிறேம். மற்றவை பற்றித் திட்டமான விளக்கம் இல்லை. எனினும் இக்காலத்திய கண்டங்களை ஒத்து அவை இருந்திருக்க லாம் எனக் கொள்ள இடமுண்டு. இப்பெருந் தீவுகளாகிய கண்டங்கள் நான்கினைச் சார்ந்து, ஒவ்வொன்றிற்கும் ஐந் நூறு வீதம் இரண்டாயிரம் சிறு தீவுகள் இருந்தன என ஐயர் அவர்கள் தம் குறிப்புரையில் காட்டுகிறர்.[1] இப் பெருந் தீவுகளும் சிறு தீவுகளும் ஆகிய அமைப்புக்களை யும் அவற்றுள் வாழ்வார் உருவங்களையும் தெய்வங்களை யும் அப்படியே காட்டுவது போல் மயமனல் செய்யப் பெற்ற ஒரு பெருங்கோட்டமே பூம்புகாரிலிருந்த சக்கர வாளக் கோட்டம் எனக் காட்டுகிறர் சாத்தனர். எனவே பூம்புகாரில் இந்தப் பரந்த உலகில் உள்ள அத்தனைச் சிறப்புக்களையும் அத்தனை நாடுகளில் உள்ள மக்கள் வாழ்க்கை முறையினையும் பிறவற்றையும் வைத்து, நிலை பெற்ற ஓர் உலகக் கண்காட்சிச் சந்தை எனவே அக் கோட்டத்தை உண்டாக்கிப் போற்றிக் காத்தனர் அக் காலத்திய தமிழ்மக்கள் என்ற பேருண்மையை இதன் வழியே உணர்த்திட வைக்கிறர்.

நான் முதலில் மேலே காட்டிய நல்ல புலவர்களுக்கு 'உலகமே' முன்னிற்கும் என்ற முறையில் 'உலகம்' என்ற தொடராலேயே தம் நூலைத் தொடங்கிய சாத்தனர், பூம் புகாரில் இவ்வுலகத்தை மாதிரிப் பொருளாக அமைத்துக் காட்டி, ஆண்டாண்டுள்ள மக்கள் வாழ்க்கை முறையைப் புலப்படுத்தி உலகம் ஒன்றிவாழ வேண்டும் என்ற உணர்வை உண்டாக்குகிறர். இவ்வுலக நாடுகளையும் அதில் வாழும் நம்மையும் மக்கட் சமுதாயத்தையும் பிணிக்கும் பெருநூலாகத் தம் மணிமேகலையை உரு வாக்குகிறர்.

---

1. ஐயர் பதிப்பு, பக். 83.

நாம் மேலே கண்டவையன்றி மக்கட் சமுதாயத்தில் இன்றியமையாத பல்வேறு தொழில்கள் வாணிப நெறி, பிற வாழ்க்கை நெறிகள் ஆகியவற்றையும் தேவையான இடங்களில் இவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அவற்றை யெல்லாம் விரிப்பிற் பெருகும் என்று இந்த அளவோடு நிற்கிறேன். நாளை அவர்தம் இலக்கிய மரபினையும் சமய உணர்வினையும் அவற்றோடு சார்ந்த பிறவற்றையும் எண்ணிப் பார்க்கலாம் எனக் கருதுகிறேன்.

வணக்கம்.

☆

## சொற்பொழிவு—௩— (31-1-1972)

# இலக்கிய மரபும்-சமய நெறியும்

### வாழும் இலக்கியம்

மக்களிடையே என்றும்வாழும் இலக்கியம் பாடும் புலவர்கள்தம்மை மறந்தவராவர்.'தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்'என்று சமய நெறிக்குக் காட்டிய அப்பர் அருள் வழி இலக்கிய வழிக்கும் பொருந்தும். அவ்வாறு தம்மை மறந்து தம் இயற்பெயர் கெட்டு நின்ற இலக்கியப் புலவர் தம் பெருநூல்களே இன்று நம்மிடை வாழ்கின்றன. தொல்காப்பியர்,நக்கீரர்,இளங்கோ, கம்பர், சேக்கிழார் புகழேந்தி பாரதியார் உள்ளிட்ட அனைவரும் தம் இயற் பெயரினுலன்றியே வாழ்ந்து, தம் இலக்கியத்தையும் காலங் கடந்து வாழ வைக்கின்றனர். சாத்தனாரும் அந்த வரிசையில் வைத்து எண்ணத்தக்கவரே. அவர் பெயர் சமயஞ் சார்ந்த சிறப்புப் பெயராக 'சாஸ்தா' என்றதன் சிதைவாக அமைந்த பெயராகச் சொல்வது பொருந்துவதாகும்.

இவ்வாறு தம்மை மறந்த புலவர்கள்முன் நிற்பது உலகே யாகும். உலக வாழ்வே தம் வாழ்வாகக் கொண்டனர் இப்புலவர். 'தாமின் புறுவது உல கின்புறக் காணும்' உத்தமர் வரிசையில் உள்ளவர்கள் இவர்கள். எனவேதாம் இவர்தம் இலக்கியத்துக்கு எடுப்பாக- முதலாவதாக உலகம் இடம்பெறுகின்றது. தொல்காப்பியர்தம் பாயிரத்தின் 'தமிழ் கூறு நல் உலகும்', குலப்பெயர் கொண்ட நக்கீரர்தம் 'உலகம் உவப்ப' என்பதும், சேக்கிழாரின்'உலகெலாம்' என்பதும், இளங்கோவடிகளின் உலகத்தின் முதலாகிய 'ஞாயிறு' 'திங்கள் 'மாமழை' ஆகியவையும்

இந்த அடிப்படையில் அமைந்தனவே. எனவேதான் அத் தகைய மாயா மரபில் வந்த சிறந்த இலக்கியப் புலவராகிய சாத்தனரும் ‘உலகம் திரியா ஓங்குயர் விழுச்சீர்’ என்று தம் நூலைத் தொடங்குகிருர். இந்த மரபில் பின்னரும் எத்தனை யோ வாழும் புலவர்கள் வந்துள்ளனர். இறைவனும் ‘உலகெலாம்’ என்றே அடி எடுத்துக் கொடுத்தான் என்பது வரலாறு.

## உலகம் வாழ

சாாத்தனுர் தம் ‘உலகு’ மற்றவை போன்று முதலடி யோடு முடியாது. முதற்காதையின் ஈற்றடிகளோடும் நூலின் ஈற்றடி களோடும், முடிந்துநின்று, நூல் எழுதற்கு அடிப்படைக் காரணமாகிய சமயச் சமுதாய உண்மை களை விளக்குகின்றது.

> “உலக … … … … …
> … … … … …
> பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
> அணிவிழா அறைந்தனன்”

என்று முதற்காதையோடும்,

> “உலகம் … … … … …
> … … … … …
> பவத்திற மறுகெனப் பாவை நோற்றனள்” –30/264

என்று நூலொடும் உலகம் இயைந்து, உலகில் பசி, பிணி பகையற்று வளமெலாம் பெறவும் அணிவிழா சிறக்கவும் அமைவதோடு, உலகம் பவத்திற மற்றுச் செம்மை நெறியிலும் திறக்க வேண்டும் என்ற உணர்வில் சாத்தனுர் தம் சாகாக் கவிதையை யாத்துள்ளார். இந்த இரு தொடர் களின் அடிப்படையிலேதான் அவர்தம் இலக்கிய மட்டு மன்றி, அவர்காட்டவந்த சமயநெறியும் அந்நெறிவாழ வழி

காட்டிய புத்தர்தம் துறவும் துணிவும் நூல் முழுதும் நன்கு போற்றப் பெறுகின்றன. பசி, பிணி, பகை என்ற மூன்றும் உலகினை நலிவு படுத்துவன. இவை நீங்கலன்றி உலகிற்கு உய்தி இல்லை என்பது உறுதி. இதை எண்ணியேதான் புத்தரும் தம் மனைவியையும் மகனையும் மன்னர் வாழ்க்கையும் விட்டுக் காடு நடந்தார். எனவே வாழ்வின் அடிப்படை நெறியான இந்த உண்மையை இணைத்து முதற் காதையை முடித்த சாத்தனர் இறுதியில், இதனினும் மேலாக, இவ்வுலக வாழ்விற்கெனத் தன்னையே ஒறுத்துத் தவநிலையில்-புத்தரைப் போன்றே நின்ற மணிமேகலையை நமக்குக் காட்டுகின்றார். மணிமேகலையின் கதை முழுதும் மக்கள் வாழவேண்டிய சமுதாய வாழ்வின் அடிப்படைகளைக் காட்டிய சாத்தனர், கடைசியில் உலகம் அந்நெறி பற்றாத காரணத்தால், மணிமேகலையினையே அந்நெறி வளர நோன்பினை மேற்கொள்ள வைக்கிறார். உலகில் தம் சொற்கேட்காத போதும் அறத்துக்கு மாறுபட்ட நிலையிலும், அண்ணல் காந்தி அடிகள் நோன்பினை மேற்கொண்ட வாழ்க்கை நெறியினைக் கண்ட நமக்கு, இந்நெறி சாத்தனர் தம் பொன்னெறியே எனப் புலப்படுகின்றதன்றோ!. உலகம் அடிப்படை இன்னல்களாகிய மூன்றும் நீங்கிச் சிறந்து வாழ, வாழவைக்க முயன்ற மணிமேகலை, கடைசியில் தானே தன்னை ஒறுத்து, 'உலகம் பவத்திறம் அறுக' என நோன்பு கொள்ள நேர்கின்றது. 'பவம்' என்ற சொல்லுக்குப் பிறப்பு, உலக வாழ்வு உலகம், பாவம் என்று பல பொருள்களும் 'திறம் என்ற சொல்லுக்குக் காரணம், கூறுபாடு, மிகுதி என்பன போன்ற பல பொருள்களும் உள்ளன. ஈண்டுள்ள சாத்தனர் கூற்று எல்லாப் பொருள்களையும் ஏற்கும் வகையில் அமைகின்றது. உலகம் இன்பில் திளைத்து வாழவே 'தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளராக' நின்ற மணிமேகலை 'உலகம் பவத்திறம் அறுக' என நோற்றாள் என்பர் சாத்தனர்.

## பாவை நோற்றமை

பின்னால் வந்த ஆண்டாள் தாம் நோற்ற பாவை நோன்பின் திறத்தினைப் பாடுங்கால் அப் பாவையால் பெறும் உலக இன்பினைச் சுட்டுகிறார்.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்குபெருஞ் செந்நெல் ஊடுகய லுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பப்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடநிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்''

என்று பாடி உலகம் பசி நீங்கப்பெற்றுச் சிறக்கவைக்கும் பாவைத் திறத்தைக் காட்டுகிறார். இது உலகியலை ஒட்டி மேற்கொண்ட பாவை நோன்பாகும். மணிமேகலை துறவியலை ஒட்டி நோன்பினை மேற்கொண்டாலும், அத் துறவும் உலகியல் வாழ்க்கையின் செம்மைக்கே பயன்படு கிறது எனக் காட்டும் வகையில் நோற்கின்றார். துறவற வாழ்வு சுயநலத்தால் அமைந்த ஒன்றன்று என்பதைச் சாத்தனார் மணிமேகலை வாழ்வால் சுட்டிக்காட்டித் துறவி உலக வாழ்விற்காக வாழக் கடமைப்பட்டவன் என்பதை வற்புறுத்துகிறார். அதனாலேயே உலகம் வாழ உணவளிக் கும் இல்லற நெறிச் செயலை மணிமேகலை மேலாக்கி அவளிடம் வற்றாத அமுதசுரபியைக் கொடுத்து வையத் தைப் பசி நீக்கம் செய்ததோடு, அவள் நோன்பினையும் உலகம் பவத்திறம் அறுவதற்கெனவே பயன்படுத்து கிறார். இத்தகைய பெருநெறியே சாத்தனாரையும் அவர் நூலையும் - மணிமேகலையாம் துறவுக் கன்னியையும் வைய முள்ளளவும் வாழ வைக்கின்றது.

## இயற்கை வளம்

சாத்தனார் இயற்கை வளத்தைப் பாடும் திறன் பெற்ற வர். துறவுநூல் ஒன்றனைச் சுவையுடன் கொண்டு செல்

வதானல், அதில் பயில்வோர் உள்ளத்தைத் தொடும் பல அமைப்புக்கள் இருக்க வேண்டுமன்றோ? சாத்தனார் இந்த உண்மையை உள்ளத்தில் வைத்தே காப்பியத்தைச் செய்கின்றார். இந்நூலில் காதல் வாழ்வு இன்றேனும் அக் காதலை விளைக்கும் மகளிர் நிலை காட்டப் பெறுகிறது. பெண்ணை வெறுக்கப் பெண்ணே அறம்கூறும் அளவில் இந்நூல் செல்லுகின்றது. எல்லா நலமும் பெற்ற எழில் நலம் வீணாகிக் கெடும் நிலையைச் சாத்தனார், சித்திராபதி வழி ஒரோவிடங்களில் உணர்த்துகின்றார் எனினும், மணி மேகலையின் உள்ளத் துறவையே நூல் முழுதும் காட்டு கிறார்; எனினும் மணிமேகலையின் அழகினைத் தேவை யான இடங்களில் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அதிலும் ஒரு பெண்ணைக்கொண்டே அவள் அழகை இயற்கை அழகோடு இணைத்துக் காட்டும் திறன் போற்றற்குரியது.

## சாத்தனாரும் இளங்கோவும்

சிலம்பினைப் பாடிய இளங்கோவடிகளுக்கு, கோவலன் கண்ணகியின் சில்லாண்டிலமைந்த காதல் வாழ்வினை விளக்க வாய்ப்பு வருகிறது. அதில் அவர் மயிலையும், அன்னத்தையும், கிளியையும் பிற இயற்கைப் பொருள் களையும் காட்டிக் காட்டிக் கண்ணகியின் நடை, சாயல். மொழி, பிற சிறப்பியல்புகளையெல்லாம் கோவலன் வழியே சுட்டுகிறார். ஆனல் சாத்தனார் சுதமதி என்ற பெண் வாயிலாகவே மணிமேகலையின் அழகினை இயற்கையொடு பொருந்தக் காட்டுகின்றார். ஆயினும் காண்பார் கூற்றாக அவர் தம்முள் பேசும் சொற்களும் மணிமேகலையின் அழகை இயற்கைப் பொருள்களுடன் பொருத்தும் தன்மையை விளக்குகின்றன. புகார் நகரின் தெரு வழியே மலர் கொய்யச் சென்ற மணிமேகலையைக் கண்ட அந் நகர மக்கள்,

> "அணியமை தோற்றத்து அருந்தவப் படுத்திய
> தாயோ கொடியள் தகவிலள் ஈங்கிவள்
> மாமலர் கொய்ய மலர்வனம் தான்புகின்

நல்லிள வன்னம் நாணு தாங்குள
வல்லுந கொல்லோ மடந்தை மென்னடை?
மாமயில் ஆங்குள வந்துமுன் நிற்பன
சாயல்கற் பனகொலோ தையல் தம்முடன்?
பைங்கிளி தாமுள பாவைதன் கிளவிக்கு
எஞ்சல கொல்லோ இசையுந வல்ல?" –3/149-157

எனப் போற்றப்பெறும் அடிகள்,

"மாயிரும் பீலி மணிநிற மஞ்சைநின்
சாயற் கிடந்து தன்கா னடையவும்
அள்னம் நன்னுதல் மென்னடைக் கழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவும்
அளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்
மடநடை மாதுநின் மலர்க் கையின்நீங்காது
உடனுறைவு மரீஇ ஒருவா வாயின"
–சிலம்பு. 2/58-61

என்று கோவலன் கண்ணகியைப் பாராட்டும் காதல் பொதிந்த சிலம்பின் அடிகளோடு உடன்வைத்து எண்ணும் தகையனவல்லவோ? சிலம்பின் முறை தனிமையில் உள்ள தலைவன் தலைவியைத் தழுவிப் பேசும் நிலையில் அமைய மேகலையின் முறை கண்டோர் கூற்றாக, மணிமேகலையின் காதில் விழாத வகையில் அமைகின்றது. எனவே, சொல்லும் முறையில் மாறுபாடு காண்கின்றோமே ஒழியப் பொருளமைதி ஒன்றுதானே!

## சாத்தனும் சம்பந்தரும்

மலர் கொய்யச் சோலையில் மணிமேகலையும் சுதமதியும் புகுகின்றனர். அங்குள்ள இயற்கைக் காட்சி சாத்தனர் உள்ளத்தைத் தொடுகின்றது. பொழிலையும் பொய்கையையும் சுதமதி மணிமேகலைக்குக் காட்டுகிறாள்.

அன்னமும் மயிலும் தாமரையும் பிறவும் மணிமேகலையின் எழிலுறுப்புக்களையும் பிறவற்றையும் சாத்தனாருக்கு நினைவை ஊட்டுகின்றன. எனினும் அவற்றைக் காதலுணர்வோடு காட்டுநிலையில் காவியப்போக்கு இல்லை. எனவே, சுதமதி வாயிலாக,

"பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்கு
இருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழில்
குழல்இசைத் தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயில்நுழைபு அறியாக் குயில்நுழைப் பொதும்பர்
மயிலாடு அரங்கின் மந்திகாண்பன காண்" -4/1-6

எனச் சாத்தனார் அச்சோலையின் வளத்தை முதலில் காட்டுகின்றார். இதில் இயற்கையின் நலம் நன்கு காட்டப் பெறுகின்றது. இவ்வடிகள்,

"வரைசேரு முகில்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட
விரைசேர் பொன்இதழிதர மென்காந்தள் கையேற்கு
மிழலை யாமே" -1/132-4

என்ற ஞானசம்பந்தர் தம் அடிகளோடு ஒத்து எண்ணத் தோன்றுகின்றதன்றோ? தெய்வ நெறியையும் சமய மரபையும் பாடவந்த இந்த இரு புலவர்களும் இவ்வாறு தம்மை மறந்து, இயற்கையில் ஒன்றும் காட்சி போற்றத்தக்கதன்றோ?

## சாத்தனாரும் கம்பரும்

சுதமதி மேலும் அவ்வுவவனச் சிறப்புக்களையெல்லாம் மணிமேகலைக்குக் காட்டுகிறார்.

"மாசறத் தெளித்த மணிநீ ரிலஞ்சி
பாசடைம் பரப்பில் பன்மல ரிடைநின்று
ஒருதனி ஓங்கிய விரைமலர்த் தாமரை

அரச அன்னம் ஆங்கினி திருப்ப
கரைநின் ருலும் ஒருமயில் தனக்கு
கம்புள் சேவல் கனைகுரல் முழவா
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணுய்!
இயங்குதேர் வீதி எழுதுகள் சேர்ந்து
வயங்கொளி மயங்கிய மாதர்நின் முகம்போல்
விரைமலர்த் தாமரை கரைநின் ருேங்கிய
கோடுடைத் தாழைக் கொழுமட லவிழ்ந்த
வால்வெண் சுண்ணம் ஆடியது இதுகாண்!
மாதர் நின்கண் போதெனச் சேர்ந்து
தாதுண் வண்டினம் மீதுகடி செங்கையின்
அம்சிறை விரிய அலர்ந்த தாமரைச்
செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங்கு
எறிந்தது பெருது இரைஇழந்து வருந்தி
மறிந்து நீங்கும் மணிச்சிரல் காண்'' –4/7-24

என்று மணிமேகலையின் செவ்விய அழகின் நலத்தையெல்லாம் இயற்கை நலத்தோடு சேர்த்துக் காட்டிச் சுதமதி வாயிலாகவே நமக்கு இயற்கை நலத்தையும் மணிமேகலையின் அழகையும் ஒருசேரக் கண்டு மகிழும் வகையில் வாரி வழங்குகிருர் சாத்தனுர்.

சாத்தனுருக்குப் பல நூற்ருண்டுகளுக்குப் பின்வந்த கம்பன் இக் காட்சியையெல்லாம் கண்டிருக்கிருன். இங்கே மணிமேகலே தன் இளநலமும் எழிலும் பொங்கச் சோலேயுள் புகும் நிலேயில் சாத்தனுர் அவளது அழகினே இயற்கையொடு ஒப்பிட்டுக் காட்டுகிருர். அவள் சோலேயில் புக்கபின் அதே நிலேயில் வெளிவரவில்லே. பின் மணிமேகலா தெய்வம் வான்வழியே மணிபல்லவம் கொண்டுசென்று, பழம் பிறப்புணர்த்த, திரும்பவும் புகாரில் வரும்போது முற்றும் துறந்த முனிவரர் நிலேயிலேயே வருகிருள். எனவே, இவ்விடம் அவள் செவ்வியைச் சாத்தனுர் காட்டுவது இயல்பு. இப்படியே கம்பரும் அடுத்து இராவணனுல் விண்வழி மணிபல்லவத்துக்கு

அடுத்த இலங்கைக்குச் சீதை எடுத்துச் செல்லப்படுவதை எண்ணுகிருர். இராமன் வாயால் அவளைப் புகழவைத்து, இயற்கை வளங்கள் அத்தனையையும் முப்பத்தாறு பாடல்களால் விளக்கிக் காட்டுகிருர். ஒருசில காண்போம். மேலே கண்ட சாத்தனர் தம் அடிகளுடன்,

"இழைந்த நூலிணை மணிக்குடம் சுமக்கின்ற தென்ன
குழைந்த நுண்ணிடைக் விவியிளவன முலைக்கொம்பே!
தழைந்த சந்தனச் சோலைதன் செலவினைத் தடுப்ப
நுழைந்து போகின்ற மதிஇருல் ஒப்பது நோக்காய்!"
–சித்திர. 9

"ஆடுகின்ற மாமயிலினும் அழகிய மயிலே!
கூடுகின்றிலர் கொடிச்சியர் தம்மனம் கொதிப்ப
ஊடுகின்றனர் கொழுநருக் குருகினர் உவக்கப்
பாடுகின்றன கின்னர மிதுனங்கள் பாராய்"
–சித்திர. 12

"நினைந்த போதிலும் அமிழ்தொக்கும் நேரிழை! நிறைதேன்
வனைந்த வேங்கையில் கோங்கினில் வயின்தொறும்
தொகுத்துக்
குனிந்த ஊசலில் கொடிச்சியர் எடுத்தஇன் குறிஞ்சி
கனிந்த பாடல்கேட் டசுணமா வளர்வன காணுய்!"
–சித்திர. 24

"ஐவனக்குரல் ஏனலின் கதிர்இறுங் கவரை
மெய்வணக்குறு வேயினம் ஈன்ற மெல்லரிசி
பொய்வணக்கிய மாதவர் புரைதொறும் புகுந்துன்
கைவணத்த வாய்க்கிள்ளை தந்தளிப்பன காணுய்"
–சித்திர. 34

என்ற கம்பனின் வண்ணப் பாடல்களை ஒத்துநோக்கின் உண்மை புலப்படுமன்ருே? இவ்வாறு சாத்தனருக்குப் பின்வந்த புலவர் பல்லோர் இவர்தம் புலமையால் பொலிவு பெற்றுத் தத்தம் இலக்கியங்களுக்கு எழிலூட்டுகின்றனர்.

## இயற்கையில் கற்பனை

சாத்தனர் புகார் நகரைக் காட்டும் நெறியில் இளங்கோவடிகளையும் விஞ்சுகிறர். புகாரினை ஒரு பெண்ணுகவே காட்டுகிறர், ஒரு பெண்ணுக்கு அமையவேண்டிய அணிகள் அனைத்தையும் இயற்கையோடு சார்த்திக் கூறிக் காட்டுவதோடு, அதன் உயர்ந்த மாளிகையோடு கூடிய சிறப்பினைச் சுட்ட, கிழக்கிலும் மேற்கிலும் தோன்றியும் மறைந்தும் நிற்கும் இருசுடர்களையும் அப் புகாரப் பூங்கொடியின் காதிலணியும் தோடுகளாகக் காட்டுகின்றர் இந்தநிலை போற்றகூடிய ஒன்றுகும். வெறும் உருவமாக மட்டும் அமைவதோடன்றி இவ்வடிகள் புகார் நகரின் எல்லா ஏற்றங்களையும் எடுத்துக் காட்டுகின்றன எனலாம். இந்த அடிகளின் சிறப்பை முன்னரே கண்டோம். ஈண்டும் காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

"புலவரை இறந்த புகாரெனும் பூங்கொடி
பன்மலர் சிறந்த நன்னீர் அகழி
புள்ளொலி சிறந்த தெள்ளரிச் சிலம்படி
ஞாயில் இஞ்சி நகைமணி மேகலை
வாயில் மருங்கியன்ற வான்பணைத் தோளி
தருநிலை வச்சிரம் எனஇரு கோட்டம்
எதிரெதி ரோங்கிய கதிரிள வனமுலை
ஆர்புனை வேந்தற்குப் பேரள வியற்றி
ஊழி எண்ணி நீடுநின் ரோங்கிய
ஒருபெருங் கோயில் திருமுக வாட்டி
குணதிசை மருங்கில் சென்று வீழ் கதிரும்
வெள்ளிவெண் தோட்டொடு பொன்தோ டாக
எள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலும்"

-5/109-122

என்று புகாரெனும் பூங்கொடியின் அழகிய பெண்தன்மையினையும் அவள் அணிகளையும் பிறவற்றையும் கூறுவதோடு, அவை நகரில் அமைந்துள்ள சிறப்பினையும், இக்

காலம் மாலைக்காலம் என்பதையும் நிறைமதி நாள் என்பதையும் கூட நன்கு விளக்குகிறுர் அன்றே!

இத்தகைய புகார் நகரத்தில் பல்வேறு பொழுதுகள் எவ்வெவ்வாறு கழிகின்றன என்பதைச் சாத்தனுர் காட்டும் திறன்கண்டு மகிழத்தக்கதாகும். அவற்றுள் ஒன்று காலைப் பொழுதைக் காட்டுவதாகும். தனிப்பட்ட சுதமதி காலையில் எழுந்து, மாதவியிடம் வந்து மணிமேகலையைப் பற்றிக் கூறுமுன் அக் காலையின் இயல்பினையும் அக்காலத்தே எழும் பல்வேறு ஒலிகளையும் பிறவற்றையும் சாத்தனுர் தொகுத்துக் காட்டும்போது (துயிலெழுப்பிய காதை வரிகள் 111/125) நாமும் எழுந்து நம் கடமை ஆற்றத் தொடங்குகின்றேம். இப்பகுதியில் சாத்தனுர் இரவெல்லாம் ஊர்க் காவல்துறை நின்ற அக்காவலர் உறங்கப்போகும் நிலையை முற்கூறி, இரவில் அப்பெருநகர் எவ்வாறு நற்காவலர் எல்லைக்குள் அவலமற்று இருந்ததெனச் சுட்டுகிறுர். பாட்டிசைத்துத் தோற்கருவியாளர் நல்லிசை முழக்குவதையும் கொடையாளர் காலை முரசியம்பக் கடைவாயில்தொறும் வாரி வழங்கும் சிறப்பையும் சிலேடை எனக் கொள்ளுமாறு இறுதியில்,

"குயிலுவர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ
கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ"
-7/123-4

என அழகுறக் காட்டுகிறுர்.

காஞ்சியின் சிறப்பைச் சாத்தனுர் பல இயற்கை வளம் பொதுள, இலக்கியச் சுவை பொருந்தக் காட்டும் திறன் எண்ணற்குரிய ஒன்றுகும், இயற்கையாக அமைந்த கவினும் மக்களின் செயற்கை நலத்தால் பெறும் செழிப்பும் ஆங்கே நன்கு திகழ்கின்றன. காஞ்சியின் அகழியை 'இந்திரதனு' எனக் குறிக்கின்ருர். வானவில்லில் எழுவகை நிறங்கள் சிறப்பன போன்று ஈண்டும் எழுவகை நிறங்கள்

உள்ளன என்று ஒவ்வொன்ருகக் காட்டுகின்ருர். மேலும் வானவில் வளைந்திருத்தல் போன்று அகழியும் வளைந்திருக்கிறது. நீர்சூல் கொண்ட மேகத்தின் காரணமாக அந்த வானவில்லின் தோற்றம் அமைவது போன்று இந்த அகழி நீரில் எழுவகை நிறமும் காட்சி தருகின்றன. அவற்றுள் புகும் பல்வேறு வகையான மணம்பரப்பும் நன்னீர் வகைகள் கலத்தலின் அந்நறுமணம் ஆண்டுள்ள கராம், இடங்கர், மீன்கள் ஆகியவற்றையும் மனம்பெறச் செய்கின்றன என்கிருர். எல்லாவற்றுக்கு மேலாக இந்திர வில்லே யாரும் பற்றவோ அன்றி அதில் படியவோ முடியா நிலையில் இந்த அகழியையும் யாரும் பற்றவோ அன்றிப் படியவோ முடியாத காப்பிலும் தன்மையிலும் அமைந்துள்ளது எனவும் காட்டுகின்ருர். இதைப் படித்துத்தானே கம்பர் 'யார்க்கும் படிவரும் காப்பினதாக' (நகரப். 13) அயோத்தி நகர அகழி இருந்ததெனக் கூறுகின்ருர் என எண்ண வேண்டியுள்ளது.

இதோ சாத்தனுர் வாக்கு:

"சுருங்கைத் தூம்பின் மனைவளர் தோகையர்
கருங்குழல் கழீஇய கலவை நீரும்
எந்திர வாவியில் இளைஞரும் மகளிரும்
தந்தமில் ஆடிய சாந்துகழி நீரும்
புவிகா வலன்தன் புண்ணிய நன்னாள்
சிவிறியும் கொம்பும் சிதறுவிரை நீரும்
மேலை மாதவர் பாதம் விளக்கும்
சீல உபாசகர் செங்கை நறுநீரும்
அறஞ்செய் மாக்கள் அகில்முதற் புகைத்து
நிறைந்த பந்தல் தசும்புவார் நீரும்
உறுப்புமுரண் உருமல் உகந்த உத்தியினல்
செறித்து அரைப்போர்தம் செழுமனை நீரும்
என்று இந்நீரே எங்கும் பாய்தலின்
கன்றிய கராமும் இடங்கரும் மீன்களும்

ஒன்றிய புலவொழி உடம்பின வாகி
தாமரை குவளை கழுநீர் ஆம்பல்
பூமிசைப் பரந்து பொறிவண் டார்ப்ப
இந்திர தனுவென இலங்கு அகழ்."

-28/5-22

இவ்வாறு அகழியைக் காட்டும் சாத்தனார், அதில் வந்து கலக்கும் பல்வேறு வகைப்பட்ட மணமிக்க - நிறங் கொண்ட நீர்களின் தன்மைகளைக் காட்டுவதோடு இந்நீர் வரக் காரணமாகிய மக்கள் செயலையும் காட்டுவதன் வழியே அவரவர் பண்பினையும் பிற நல்லியல்புகளையம் நமக்குக் காட்டுகின்றாரே! இவ்வாறு இயற்கை நலத்தை மக்கள் வாழ்க்கை நலத்தோடு பின்னக் கண்டு பிறருக்கும் காட்டும் கவிஞர் மிகமிகச் சிலரே அன்றோ!

## உவமை

நல்ல இலக்கியம் அதன் உவமைத் திறத்தாலேயே போற்றப் பெறுவது. பிற்காலத்தில் அணிகள் பல எனப் பெருகினும் அவை அனைத்தும் 'உவமத்' தில் சென்று முடியும் என்ற உண்மையை இலக்கண முணர்ந்தோர் நன்கு அறிவர். அதனாலேயே பாவின் அணிகாட்ட வந்த தொல்காப்பியர் 'உவம இயல்' ஒன்றையே அமைத்து அதன் சிறப்பை விளக்கிச் செல்கிறார். சங்க இலக்கியங் களிலும் இவ்வுவமமே சிறந்ததாகப் போற்றப் பெறுகின் றது. சாத்தனாரும் தம் துறவு நூலின் இடையிடையே எண் ணற்ற உவமங்களைப் புகுத்தி, அவற்றால் எத்தனையோ உண்மைகளை விளக்குவதோடு- அறியாதனவற்றை அறிய வைப்பதோடு - இலக்கியச் சுவையினையும் காட்டுகின் றார். சாத்தனாரின் உவமைகள் அனைத்தும் உயர்ந்த தன் மையானவாக- உள்ளத்தைத் தொடுவனவாக உள்ளன. அதற்றுள் ஒருசில காண்போம்.

இந்திர விழாவறிந்த சித்திராபதி வயந்தமாலை வழி மாதவி, மணிமேகலை இருவரையும் தம் குலத்தொழிலுக்கு

அழைக்க, மாதவி மறுத்துக் கூறவும் வயந்தமாலை வருத்தத்துடன் திரும்பியதை நல்ல உவமை முகத்தான் விளக்குகிறார். நல்ல மணியினைக் கடலிடைப் போட்டு வீழ்த்தினார் பெற்ற வருத்தம் உவமையாகக் காட்டப் பெறுகிறது. ஆம்! உலகில் உயர்ந்து நின்று பலரும் காணச் சிறக்கவேண்டிய பெறுதற்கரிய மணி, கடலுள் யாருக்கும் பயனற்றுத் தன் அழகிழந்து காணாது வீழ்ந்து மறைந்தமை போன்று, எளிமையில் பெறமுடியாத மாதவியும் மணிமேகலையும் நிலைகெடுவதை-தம் அழகழிய நிற்பதை எண்ணிய சாத்தனார் இரக்க முற்றோ அன்றி ஏனோ,

'அரும்பெறல் மாமணி
ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று'

2/72-73

எனக் காட்டுகின்றார்.

அடுத்து மற்றொரு உவமை நெஞ்சைத் தொடுகின்றது. மணிமேகலை மலர்தொடுத்துக் கொண்டிருக்கிறாள். அது போதுதான் மாதவி, கோவலனைப் பிரிந்து தான்பெற்ற துன்பத்தைக் கூறி வயந்தமாலையிடம் இந்திர விழாவுக்கு வர மறுக்கிறாள். அத்துன்பத்தை நினைத்த மணிமேகலைக்குக் கண்ணீர் மிகுகின்றது. அது எல்லைகடந்து மணிமேகலையே இறைவனுக்குக் கட்டிய மலர்மாலையில் பட்டு மாசுபடுத்துகின்றது. மணிமேகலையை முதல்முதல் நமக்கு இங்கேதான் சாத்தனார் அறிமுகப்படுத்துகிறார்; முதல் அறிமுகம் அழுகையோடே தொடங்குகின்றது. ஆம்! உலக மக்கள் துன்பம் துடைக்க, மற்றவர்களுக்காக அழும் அழுகையும் அதனால் பெருகும் கண்ணீருமே உலகத் துன்பத்தைத் துடைக்க உதவுவன. பின் உலகத்தின் அழுகையையே துடைக்க வருகின்றவளை அழுகையோடே முதன் முதல் அறிமுகப்படுத்துகிறார். அந்த அழுகையும் அவளைப் பற்றியதாக அமையாது, 'தந்தையும் தாயும்' தாம் நனி உழந்த வெந்துயர் வழியே அமைகின்றது.

இந்த அழுநிலையைக் கண்ட தாய் மாதவி பொருளாய் அவள் கண்ணில் வடிந்த நீரைத் தன் கையால் துடைக்கி ..றாள். இங்கே தான் சாத்தனார் அழகான நல்ல உவமையைக் கையாளுகின்றார். மணிமேகலையின் முகத்தைச் சாத்தனார் நமக்கு முதன்முதல் 'தண்மதி'யெனக் காட்டுகின்றார். ஆம்! அவள் அழும்போதும் அதன் தன்மையும் தண்மையும் மாறா நிலையையும் அவ் வுவமை வழியே அவர் உணர்த்தி விட்டார். மாதவியின் கை 'தாமரை'யாகப் பொலிகின்றது. தாமரை தண்மதியைச் சேர்ந்தது போன்று. மணிமேகலையின் முகத்தில் மாதவி காமர் செங்கை பொருந்தி அவள் கண்ணீரை மாற்றிற்று என்கின்றார்.

"மாதவி மணிமேகலை முகம் நோக்கி
தாமரை தண்மதி சேர்ந்தது போல
காமர் செங்கையின் கண்ணீர் மாற்றி" –3/11-13

என்பது சாத்தனார் வாக்கு. ஆம்! அவள் அழுகையை மாற்றி, உலகோர் அழுகையை மாற்ற வித்திட்டுவிட்டார் சாத்தனார்.

மணிமேகலை சோலைக்குச் சென்றுள்ளாள் என்பதைக் கேட்டறிந்த உதயகுமரன் விரைந்து தேர் ஏறி அச்சோலைக்குள் செல்கின்றான். அரசகுமரனாகிய அவன் தேர் பொன்னாலும், மணியாலும் அழகுபடுத்தப் பெற்றது போலும், எனவே அதற்குச் சந்திரனை உவமை காட்டுகிறார். அவன் புகும் சோலையோ வளர்ந்து கருமைநிறம் உற்றுச் செழித்துள்ளது. அதை மேகத்துக்கு உவமை சொல்லுகிறார். இவன் தேரில் விரைந்து செல்லுங்காலை இவன் விரைவுக்கிடையில் தன் வேகத்தை உணராது, சோலை விரைந்து தன்னிடம் வருவதாக நினைக்கின்றான் போலும். அல்லது காண்போர்க்கு அத்தகைய தோற்றம் அளித்திருக்கலாம். விரைந்து ஓடுகின்ற மேகத்திடை சந்திரன் புகுவதாயினும், காண்போர்க்குச் சந்திரனே விரைந்து மேகத்துள் புகுவதாகத் தான் காட்சி தருகின்றது. விரைந்தோடும் உலகத்துள்ளோர், தம் சுழற்சியை அறியாது ஞாயிறு சுழல்வது

போல எண்ணுகின்றார்களன்றே! மேலும் இங்கே தேரே விரைந்து போகிறது என்ற உண்மையும் பொதிந்துள்ளதே. இவற்றையெல்லாம் எண்ணிய சாத்தனார்,

"ஓடுமழை இழியும் மதியம் போல
மாட வீதியில் மணித்தேர் கடைஇ
காரணி பூம்பொழில் கடைமுகம் குறுக" -4/75-77

எனக் காட்டுகிறார்.

சந்திரனை இவ்வாறு மழையிடைக் காட்டிய சாத்தனார் மாலைக் காலத்தில் திங்களஞ் செல்வன் தோன்றும் நிலையினையும் அவன் பொழியும் நிலவினையும் இருவேறு வகைப்பட்ட நல்ல உவமைகளால் எடுத்துக் காட்டுகிறார்.

"அந்தி மாலை நீங்கிய பின்னர்
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம்
சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போல
மாசறு விசும்பின் மணிநிறங் கிளர
ஆசற விளங்கிய அந்தீந் தண்கதிர்
வெள்ளி வெண்குடத்துப் பால்சொரிவது போல்
கள்ளவிழ் பூம்பொழில் இடையிடைச் சொரிய" -6/1-8

என்று காட்டிய உவமைவழித் திங்கள் தோன்றியதை மட்டுமன்றிச் சான்றோர்கண் தோன்றிய குற்றம் உலகுக்கு எவ்வாறு புலப்படும் என்பதையும் சுட்டுகிறார்.

தாய், பெற்ற குழந்தைக்குப் பால்ஊட்ட நினைக்கிறாள். அக் குழந்தையைக் கண்டவுடன் அவளிடம் பால் சுரக்கின்றது. அதிலும் அக்குழந்தை பசியால் அழுமாயின் அவள்உள்ளத்தினும் மிக்கு விரைவாகப் பால் ஊற்றெழும். இந்த நிலையை எண்ணுகிறார் சாத்தனார். உலகமாகிய சேயினைத் தாயாக ஓம்ப நினைக்கும் மணிமேகலையையும் எண்ணுகிறார். மணிபல்லவத்தில் பெற்ற அந்த அமுத

சுரபியையும் காணுகிறார். தாயிடம் பால் இருக்குமிடம் தெரியவில்லை யாயினும் குழந்தையை நினைந்ததும்—கண்டதும் அப் பால் சுரப்பது போன்று, அமுதசுரபியிடத்தே உணவற்றும் அயர்வோரைக் கண்டதும் உணவு சுரக்கும் நிலையை எண்ணுகிறார். நாவலந் தீவாகிய நம் நாட்டில் பஞ்சம் உண்டானமையின், பலர் உணவின்றி வருந்துகின்றமையின் அமுதசுரபி வழி அவர்களுக்கு உணவளிக்கத் தாயுள்ளம் கொண்ட மணிமேகலை நினைக்கிறாள். அனைத்தையும் இணைத்துச் சாத்தனார் அழகாகப் பாடுகின்றார்.

> ''புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
> அறங்கடை நில்லா தயர்வோர் பலரால்
> ஈன்ற குழவி முகங்கண் டிரங்கி
> தீம்பால் சுரப்போள் தன்முலை போன்றே
> நெஞ்சுவழிப் படூஉம் விஞ்சைப் பாத்திரத்து
> அகன்சுரைப் பெய்த ஆருயிர் மருந்தவர்
> முகங்கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையேன்''
>
> -11/112-118

என மணிமேகலையின் தாயுள்ளத்தைப் பேச வைக்கிறார்.

மணிமேகலைக்கும் மேலாகச் சாத்தனார் தம் காவியத்தில் ஒரு பாத்திரத்தைப் படைத்துள்ளார். அவர்தாம் ஆதிரை நல்லாள் ஆவர். அம் மங்கை நல்லாள் சோறு இட்டால்தான் அமுதசுரபி எடுக்க எடுக்கக் குறையா வளம்பெறும் எனக் காட்டுகிறார் சாத்தனார். அவளை அறிமுகப்படுத்தும் போதே இலக்குமியையும் அவள் தங்கிய தாமரையினையும் நினைக்கிறார்.

> ''குளனணி தாமரைக் கொழுமலர் நாப்பண்
> ஒருதனி ஓங்கிய திருமலர் போன்று
> வான்தரு கற்பின் மனையுறை மகளிரின்
> தான்தனி ஓங்கிய தகைமைய ளன்றே
> ஆதிரை நல்லாள்'' -15/75-79

என உவமை காட்டி அவளை அறிமுகப் படுத்துகின்றார். பின்னும் அவள் தீயிடை நின்றும் அவளை அத் தீ ஒன்றும் செய்யா நிலையில் அதே திருமகள் போன்று அவளும், செந்தாமரை போன்று அத்தீயும் இருப்பதை,

"விரைமலர்த் தாமரை ஒரு தனி இருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருப்ப" -16/33-34

என உவமை காட்டி விளக்குகிறார். பின் தீயிடை இருந்து வெளிவந்த தன்மைக் காட்சியை,

"பொய்கை புக்காடிப் போதுவாள் போன்று
மனங்கவல் பின்றி மனையகம் புகுந்தாள்" 16/46-47

என்கின்றார். இவ்வாறு மூன்றுவகை உவமை வழியும் கற்பிற் சிறந்த காரிகையாம் ஆதிரை நல்லாளை நமக்கு அறிமுகப்படுத்துகிறார் சாத்தனார்.

அத்தகைய ஆதிரையின் கணவன் சாதுவன் கலம் உடைய நாகர் மலையைச் சார்கின்றான். ஆண்டுள்ள குருமகன் 'கள்ளடு குழிசியும் கடுமுடை நாற்றமும் வெள்ளென்பு உணங்கலும் விரவிய இருக்கையில்' பேருருவத்தோடு தன் பெண்டுடன் இருந்த காட்சியைக் காண்கின்றான், அந்தக் குருமகனை, உவமை முகத்தான், காட்டிடை வாழும் கரடியை நினைத்து,

"எண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுடன் இருந்த பெற்றி" -16/68-69

எனக் காட்டுகின்றார்.

சாத்தனாருக்கு இந்தச் சாதுவன், ஆதிரை இருவரை நினைக்கும்போது ஏனோ உவமைகள் ஒன்றன்பின் ஒன்றாக உருவெடுக்கின்றன. எண்ணிப் பார்ப்பின் இவை இருவர்

தம் பண்பையும் சிறப்பையும் உயர்த்துவனவாக அமைகின்றன. முன்னே கண்ட மூன்று உவமைகளும் ஆதிரை நல்லாளின் அழகையும் திருவையும் பிற நலன்களையும் நமக்கு விளக்குகின்றன. அவற்றுக்கு மேலாக அவளுடைய கற்பின் பொற்பினை நமக்குக் காட்ட அவை பயன்படுத்தப் பெறுகின்றன. அப்படியே குருமகனைக் காட்டும் உவமத்தான் அவன் இழிநிலையினையும் அதே வேளையில் அவனுக்கு அறம் உரைத்துத் திருத்திய சாதுவன் பெருநிலையையும் காட்டுகிறார். அடுத்துக் காட்டும் உவமத்தின் வழியே சாத்தனார் மனைத்தக்களாய் விருந்து புரந்தோம்பும் பண்பினளாய் வாழ்ந்த ஆதிரையின் அருஞ் செயலை உள்ளம் தொடும் வகையில் விளக்குகிறார்.

தன் அமுதசுரபியில் ஆதிரை நல்லாள் பிச்சை இட வேண்டுமென விரும்புகிறாள் மணிமேகலை. ஆயினும் தன் எண்ணத்தை ஆதிரையிடம் அவள் வாய் திறந்து கேட்க வில்லை. 'குறிப்பறிந்து ஈதலே கொடை' என்ற உயர்ந்த பண்பு சாத்தனார் உள்ளத்து உருவாகின்றது.

''இலனென்னும் எவ்வ முரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள''

என்ற குறள் வழியே சாதுவனுடைய குலப்பிறப்பாட்டியாம் ஆதிரை நல்லாள், மணிமேகலை பேசாதிருந்தும் – வேண்டுமெனக் கேட்காதிருந்தும் – அவளுடைய அமுத சுரபியில் ஆருயிர் மருந்தாகிய சோற்றினை இடுகிறாள். அங்கே மணிமேகலை நின்ற நிலையைத்தான் சாத்தனார்,

'புனையா ஓவியம் போல நிற்றலும்' –16/131

என்ற உவமை காட்டிப் பேசாதிருப்பது மட்டுமின்றித் தேவைக்குரிய ஒருவகைக் குறிப்பும் காட்டா ஓவிய நிலையில் ஆதிரை பிச்சையிட்ட சிறப்பை விளக்குகிறார். ஆம்! குறிப்பறிந்தோ, இல்லை என்று கேட்பதன் முன்போ

ஈதல் கொடை என்பதால், அவ்விரண்டினையும் - காட்ட வும் சொல்லவும் வல்லனவாம் இரண்டினையும் - காட்டாத ஓவியத்தை உவமை காட்டி. அந்த ஓவிய நிலையில் அருள் நலம் சான்ற ஆதிரை பிச்சையிட்டதை அழகுறக் காட்டி, அவள் வள்ளுவர் காட்டிய அறத்தினும் தெள்ளிய உள்ளத் தாள் என்பதை விளக்கிவிட்டார். மேலும் பேசாநின்ற மணிமேகலையின்முன் ஆதிரையைப் பேசவைத்துப் பிச்சை இடவைக்கின்றார். ஆம்! இந்தக் காதைக்கே 'ஆதிரை பிச்சையிட்ட காதை' என்றே பெயர் இருப்பதால், நானும் இதைப் பிச்சை என்றேன். அவ் ஆதிரையின் வாக்கிலே அவளுடைய தெளிந்த-பரந்த-சிறந்த இல்லற வாழ்வின் உச்சியில் அமைந்த பண்பு நலத்தைக் காட்டுகிறார். அவள் கிளவியே 'துயரறு' கிளவி என்கிறார். மணிமேகலை யைத் தொழுது வலங்கொள்வதன்வழி இல்லறத்தார் விருந்தினரை ஏற்கும் மரபினையும் காட்டுகின்றார்;

"தொழுதுவலங் கொண்டு துயரறு கிளவியொடு
அமுத சுரபியின் அகன்சுரை நிறைதர
பாரக மடங்கலும் பசிப்பிணி அறுகென
ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்தென்" -16/132-135

எனக்காட்டி, அவள் இட்ட அந்த உணவே உலகப்பசி முழுமையும் நீக்க மணிமேகலைக்கு உதவியாயிற்று எனச் சுட்டுகிறார். அதை உணவு என்றும் சோறு என்றும் கூறாது 'ஆருயிர் மருந்து' என்றே காட்டுகிறார்; ஆம்! உயிரை வாழவைக்கும் சாவா மருந்தன்றோ இது. பிறர் சாவா மருந்தெனப் பிறவற்றைக் கூறினும், இவர் அவர்களினும் ஒருபடி மேலே சென்று 'ஆருயிர் மருந்து' எனவே உணவினைக் கூறுகிறார். உவமை காண வந்த விடத்தில் நல்லாராகிய ஆதிரையை எண்ணி, அவர் பண்பு நலத்தால் பற்றப்பட்டு வேறு நெறிச் சென்றோமெனினும் இவை ஈண்டு எண்ணத் தக்கவையன்றோ!

சாத்தனுர் இந்த அளவோடு அள்றி மற்ருெரு உவமை முகத்தானும் அந்த அமுதசுரபியிலிருந்து உணவு-சோறு உலகை உண்பிக்கிறது என்பதையும் காட்டுகின்ருர். 'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே' எனகாட்டி, அவ்வுணவளித்தலாகிய அறமே சிறந்த ஒன்று என்பதை நூல் முழுதும் சுட்டும் ஆசிரியர், அப்பணி தொடங்கப் பெறும் இந்த நிலையிலே அந்த அறத்தை உவமை வாயிலாகவே விளக்கிக்காட்டுகின்ருர். ஆதிரை நல்லாளையும் நினைக்கிருர்; அவளிட்ட 'பாத்தூண்' தன்மையை-எண்ணுகிருர்; எழுதுகிருர்.

"பத்தினிப் பெண்டிர் பாத்தூண் ஏற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை
அறத்தின் ஈட்டிய நன்பொருள் அறவோன்
திறத்துவழிப் படூஉம் செயற்கை போல
வாங்குகை வருத்த மன்னுயிர்க் களித்துத்
தான் தொலை வில்லாத் தகைமை"உடைத்து -17/1-6

என்பன அவரடிகள்.

மேலும் உலக அறவியில் மணிமேகலை நின்று மக்களை உண்பித்த நிலையினை,

"வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்து
கருவி மாமழை தோன்றிய தென்ன
பசிதின வருந்திய பைதல் மாக்கட்கு
அமுத சுரபியொடு ஆயிழை தோன்றி" -17/91-94

உணவினை அளித்தாள் எனக் காட்டுகின்ருர். ஆம்! அவள் தோற்றம், வாடிய பயிருக்கு மழை என அமைந்தது.

இன்னும் ஒரே உவமைநலம் கண்டு இப்பகுதியை முடிக்கலாம் உன எண்ணுகிறேன். மணிமேகலை பிறந்த குலத்தைப் பற்றி எண்ணுகிருர் சாத்தனுர். சிறந்த குலப்

பிறப்பாட்டியை பல்வேறு உவமைகளில் காட்டிய சாத்தனுர், இக் கணிகையர் குலம் காட்டவும் சில உவமைகளைக் கையாளுகின்ருர்.

"காதலன் வீயக் கடுந்துய ரெய்தி
போதல் செய்யா உயிரொடும் புலந்து
நளியிரும் பொய்கை ஆடுநர் போல
முளிஎரிப் புகூஉம் முதுகுடிப் பிறந்த
பத்தினிப் பெண்டி ரல்லேம், பலர்தம்
கைத்தூண் வாழ்க்கைக் கடவிய மன்றே!
பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையில்
யாழினம் போலும் இயல்பினேம் அன்றியும்
நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்
வினைஒழி காலைத் திருவின் செல்வி
அனையேம் ஆகி ஆடவர்த் துறப்பேம்" –18/11-22

என்று நான்கு உவமைகளைக் காட்டுகின்ருர். இந்நான்கிலும் கணிகையர் இயல்பினை மட்டுமன்றி உலகுக்கு வேண்டும் பல்வேறு உண்மைகளையும் உணர்த்துகிருர். சற்று முன்னே ஆதிரை நல்லாளைக் காட்டிய ஆசிரியர் அவர் உயர்ந்த தன்மைக்கு நேர்மாருன இழிந்த தன்மை யுடைய இக்குடியைக் காட்ட நினைத்து, ஆதிரை பொய்கை புக்கு நீராடுவாள் போன்றிருந்த நிலையில் விளக்கிய அதே உவமைத் தொடரை இங்கும் காட்டி, அத்தகைய நல்லவர் மரபில் வந்தவர் அல்லர் கணிகையர் என்பதை முதல் உவமை வழி அக்கணிகை குலத்தளாம் சித்திராபதி வாக்காலேயே சொல்ல வைக்கிருர்.

அடுத்து வருகின்ற உவமைகள் அவர்தம் பண்பினை விளக்குவன. யாழ், வாங்குவார் கைப்பட்டு, அவரவருக்கு ஏற்ற இசையை வழங்குவது போன்று விலைமகளிர் பொருள் வாங்கி, அவ்வாறு தந்தார் கைப்பட்டு அவரவர் பான்மை

யில் இருந்து இன்பம் தரவேண்டியவர் என்ற உண்மையை அடுத்த உவமையில் காட்டுகிறார். அதனால் அக்குலத்தின் இழிதகைமை—பலரொடும் பொருள் கருதிச் சேரும் பொய்ம்மை முயக்க நிலை—புலப்படுகின்றதன்றோ!

அடுத்து வருகின்ற உவமை அக்குலத்தார் கொடுமையை விளக்குகின்றது. தேன் இருக்கும் மலரில் தங்கி அத்தேனை முற்றும் உண்டு, பின் அதைத் திரும்பியும் பார்க்காத வண்டுகளை உவமை ஆக்குகிறார். ஆம்! தம்மிடம் சிக்கிய ஆடவர் தம் பொருள் உள்ளவரையில் அவரொடு உடலால் கூடி இருந்தும் உளத்தால் வேறுபட்டும், பொருள் தீர்ந்தபின் அவர்களை வெறுத்தொதுக்கும் கொடுமையை விளக்குகிறார். ‘நயனில் காலை வறும்பூத் துறக்கும் வண்டு’ என்றே தம்மைச் சித்திராபதி கூறிகொள்வதாகக் காட்டுகிறார்.

கடைசியாகக் காட்டும் உவமை எண்ணத்தக்கது. மேலும் ஆதிரை நல்லாளைக் காட்டிய ஆசிரியர் ‘திருவின் செய்யோள் போன்று’ என்றும் ‘ஒருதனி ஓங்கிய திருமலர்’ என்றும் காட்டியவர், ஈண்டுக் கணிகையருக்கும் அதே திருமகள் செல்வியைக் காட்டுவது எண்ணத்தக்கது. ஆனால் இங்கே அவர் காட்டும் முறையும் விளக்கும் திறனும் எண்ணத்தக்கன. ‘செல்வம் சகடக்கால் போல வரும்’ ஒரு தன்மையினையே ஈண்டு அவர் குறிக்கின்றார். அச்செல்வமும் நல்வினை உடையார்க்கே கூடும் ஒன்றாகும். திருவின் தோற்றமோ தன்மையோ ஈண்டு உவமையாகக காட்டப் பெறவில்லை. ஆனால் அவள் ஓரிடத்து நில்லாது சுழலும் நிலையினையே உவமையாகக் காட்டுகின்றார். அவ்வாறு செல்லுவதற்கும் அச்செய்யோள்மேல் குற்றஞ் சுமத்தவில்லை. அவரவர் வினையே அவள் செயலுக்குத காரணமாகின்றது எனவும் குறிக்கின்றார். எனவே இரண்டிடத்தும் திருமகள் உவமையாகக் காட்டப் பெறினும் காட்டும் நிலையும் முறையும் வேறுபடுகின்ற

தோடு, அவ்வவ்விடத்துக்கு ஏற்ற வகையிலேயே உவமை அமைவதைக் காண்கின்றோம்.

இவ்வாறே வாழ்வில் கொள்ளவேண்டியவற்றையும் தள்ளவேண்டியவற்றையும் பல்வேறு உவமைகள் வழியே சாத்தனர் காட்டி நம்மை அல்லன நீக்கி நல்லன நோக்கும் நெறிக்கு ஈர்த்துச் செல்லுகிறார். சமயம் பற்றிய வகைகளில் சாத்தனர் காட்டும் உவமைகள் எண்ணில. அவற்றையெல்லாம் ஈண்டுத் தொகுத்துக் கூறப்புகின் காலமும் இடமும் பொருந்தா என்ற நிலையில் அமைகின்றேன். இலக்கியத்திற்குச் சிறப்பாதலேயன்றி மேலும் அதே நிலையில் அம்மக்கள் வாழ்விற்கமைந்த பல நல்லியல்புகளையும் விளக்கும் சாத்தனர்தம் உவமைகள் என்றென்றும் மக்களால் போற்றற்குரியன வன்றே! உவமை அணி மட்டுமன்றி உருவகம் தற்குறிப்பேற்றம் போன்ற பிற அணிகளும் சாத்தனரால் ஆங்காங்கே எடுத்தாளப் பெறுகின்றன. நான் காலம் கருதி அவற்றுள் புகாது இந்த அளவோடு அமைந்து வேறு வகையில் அவர்காட்டும் நலம் காணலாம் என எண்ணுகிறேன்.

## சாத்தனரும் வள்ளுவரும்

சாத்தனர் தம் நூலில் அவருக்கு முன்னே வாழ்ந்த பல புலவர்தம் வாய்மொழிகளைப் போற்றியுள்ளார். சிறப்பாக வள்ளுவர்தம் வாய்மொழியைப் போற்றுவதோடு, அவ் வள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' என்றும் குறளைப் 'பொருளுரை' என்றும் போற்றுகின்றார் இந்தக் குறளடிகளை முன் கற்பினைப் பற்றிக் கண்டபோதும் எண்ணினோம். சதுக்கப் பூதத்தின் வாயிலாக இக்குறளை எடுத்துக் காட்டுகின்றார் சாத்தனர்.

அவர் கூறிய அடிகள் இவை:

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பொய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேருய்" –23/56-16

இந்த ஒரு இடமட்டுமன்றி வள்ளுவர் குறளைப் பலவிடங்களில் சாத்தனுர் எடுத்தாளுகின்ருர்.

சான்ருேர் வழித் தோன்றும் குற்றம் உலகில் யாவருக்கும் நன்கு புலப்படும். வெள்ளைச் சுவர்மேல் சிறு கரும் புள்ளி படினும் அப்படியே காட்டும் நிலையில் இப்பெரியோர் தம் குற்றமும் உலகோர் கண்களுக்கு நன்கு புலப்படும். உயர்நிலையில் உள்ள மதியினிடத்துக் காணும் மறு உலகெங்கணும் நன்கு தெரிவது போல, உயர்நிலையிலுள்ள இச்சான்ருேர் குற்றமும் யாவருக்கும் தெரியும். எனவே நல்ல குடியில் பிறந்தவர் குற்றம் புரிய அஞ்சி ஒதுங்கி வாழ்வார் என்ற உண்மையை வள்ளுவர் தம் குடிமை என்னும் அதிகாரத்தில் எடுத்துக் காட்டுகின்ருர்.

"குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து" —குறள் 957

என்பது குறள். இக்குறளைச் சாத்தனுர் நாம் முன்னரே கண்ட வகையில் உவமை முகத்தான் அப்படியே எடுத்தாளுகின்ருர். சக்கரவாளக் கோட்டத்தில் நிலவொடு கூடிய இரவுப் பொழுது வந்துற்ற நிலையினை,

"அந்தி மாலை நீங்கிய பின்னர்
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம்
சான்ருேர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போல" –6/1–4

என்கின்ருர்.

வள்ளுவர் கூறிய உவமத்தையும் பொருளையும் ஈண்டுச் சாத்தனுர் மாற்றியமைத்துள்ளார். குடிமையை விளக்க வந்த காரணத்தால் ஆண்டு வள்ளுவர் மதிக்கண் மறுவினை உவமையாக எடுத்துக் காட்டுகிருர். ஆனல் இங்கே சாத்தனுர் சந்திரன் தோற்றத்தைக் காட்ட வந்தமையின் உவமை நிலையை மாற்றிவிடுகிருர். 'சான்ருேர் கண்ட

எய்திய குற்றம்' இங்கே உவமையாக, மற்றது பொருளா கின்றது. எனவே அப்படியே குறளை எடுத்தாளுவதிலும் இத்தகைய மாற்ற வகையில் குறட்கருத்தினைக் கொண்டு செல்வதிலும் வள்ளுவர் வாய்மொழியையும் பொருளையும் சாத்தனுர் பொன்னேபோல் போற்றுகிருர் என்பது தெளிவு.

சாதுவன் நாகநாட்டுக் குருமகனுக்கு அறம் உரைக் குங்கால் உலகில் தோன்றி மறையும் வாழ்வைச் சுட்டிக் காட்டுகின்ருன். உறங்கி விழிப்பது போன்றது இறப்பும் பிறப்பும் எனக் காட்டி நல்லறம் செய்யுமாறு தூண்டு கிருன் அவன். இங்கே வள்ளுவர் குறளின் கருத்தினைச் சாதுவன் வாயிலாக எடுத்துக் காட்டுகிருர் சாத்தனுர்.

> ''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு'' -குறள் 339

என்ற குறள் பாட்டினைச் சாதுவன் வாயிலாகப்,

> ''பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
> உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்''-16/86-87

என விளக்கிக் காட்டுகிருர்.

அறம் பலவாக உள்ள நிலையை அற நூற் புலவர் பல ரும் எடுத்துக் காட்டினும் திருவள்ளுவர் அவர்களுக் கெல்லா மேலாக அறங்களுள் சிறந்த ஒன்றனை எடுத்துக் காட்டி, அதுவே அறத்தின் எல்லை என வரையறுத்து மற் றவை அனைத்தும் ஆரவாரத் தன்மையன எனக் காட்டு கிருர். ஆம்! அறங்கள் அனைத்தும் உள்ளந் தூய்மையால் செய்தாலின்றிச் சிறக்காது— பயன் தராது. உள்ளத்தில் கரவடமும் உதட்டில் இன்சொல்லும் புறத்தே அறஞ்செய் தலும் என்றும் சிறவாதென இவற்றையெல்லாம் எண்ணித் தான் வள்ளுவர்,

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" -குறள் 34

எனக் காட்டுகிறார். இக் குறட்பா சாத்தனார் உள்ளத்தைத் தொடுகிறது, இவர் பல்வேறு அறங்களை வற்புறுத்துகின்றார். அவற்றுளெல்லாம் மேலாக 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று உணவிடும் அறமே அனைத்திலும் உயர்ந்தது எனவும் காட்டுகின்றார். ஆயினும் அவற்றினுக்கெல்லாம் மேலாக மணிமேகலை மனத்துக்கண் மாசற்று இருக்க வேண்டிய உண்மையை அறவணவடிகள் வழியே எடுத்துக்காட்டிவிடுகின்றார். மணிமேகலையின் எதிர்காலம் பற்றியெல்லாம் அறிவுறுத்தும் அடிகளார் பல வகையில் அறம் வளர் நிலைகாட்டி இறுதியாக,

"வாய்வதாக நின் மனப்பாட்டு அறம்" -21/171

எனச் சுட்டுகின்றார், ஆகவே அவள் ஆற்றும் செயல்கள் யாவும் மனத்துக்கண் மாசிலாத மனப்பாட்டு அறமாக இயங்க வேண்டும் எனச் சுட்டுகிறார். மேலும் அந்த மனப்பாட்டு அறமே மணிமேகலையை அந்தப் பிறவியில் மட்டுமன்றி அடுத்து வரும் பிறவிகளிலும் உயரச் செய்து, இறுதியில் 'பிறர்க்கறம் அருளும் பெரியோன் தனக்குத் தலைச் சாவகனாகும்' தகுதியைக் தரும் என விளக்குகிறார்.

துறவு நிலையை வற்புறுத்துகின்ற சாத்தனார் காதல் இன்பத்தின் சிறப்பையும் காட்டத் தவறவில்லை. அக்காதல் வாழ்வில் சிறக்கும் இல்லற வாழ்வின் ஏற்றத்தைக் காட்டவே ஆதிரையைப் பற்றிக் கூறி, சாத்தனார் துறவியாகிய மணிமேகலையால் செய்ய இயலாத பெருஞ்செயலை—பெருகப் பெருகச் சோறு வளர்க்கும் செயலை—அந்த ஆதிரை நல்லாள் கையால் சோறிட்டுச் செய்ய வைக்கின்றார். மேலும் பல பாத்திரங்களைச் சிறந்த இல்லறத்தாராகவே சாத்தனார் காட்டுகின்றார். துறவு நிலை கூறும் நூலாயினும், மணிமேகலையினை ஆழ்ந்து நோக்கின் நலம் சான்ற

வாழ்வாங்கு வாழும் இல்லற நெறியும் அந்நெறியில் அற்ருர்க்கும் அலந்தார்க்கும் துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் உணவளிக்கும் சிறப்பும் போற்றப் பெறுவதறிவோம். சாதுசக்கர முனிவனை உண்பித்த திறமே மணிமேகலைக்கு அமுதசுரபியைத் தந்தது என்கிருர், எனவே இல்லற வாழ்வினையும் அதில் பெறும் காதல் இன்பத்தையும் சாத்தனுர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

பத்தினியொடு இல்லற வாழ்வில் இருந்து அறமாற்றினலன்றி வேறு எத்துணை அறஞ் செய்யினும் புத்தேளுலகம் கிட்டாது என்ற உண்மையைச் சாத்தனுர்,

"பத்தினி இல்லோர் பல அறம் செய்யினும்
புத்தேள் உலகம் புகார்" -22/117-119

என்று விளக்குகின்ருர். எனவே சாத்தனுர் இல்லறத்துக்கு ஏற்றம் தரு நிலை நன்கு விளக்குவதாகும்.

வள்ளுவர் காமத்துப் பாலில் தலைவன் தலைவியிடம் பெறும் இன்பத்தினை எண்ணிப் பார்க்கிருர். அவன் ஐம் புலன்களும் அந்த இன்பநெறியில் திளைக்கும் தன்மையையும் தலைவியின் ஐம்புலன்களும் ஒன்றும் உணர்வையும் எண்ணி,

"கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

குறள் 1101

என்கின்ருர் வள்ளுவர்.

சாத்தனுர் இந்த அடிகளைத் தம் நூலில் விளக்குகிருர். நெடுமுடிக் கிள்ளி நாகநாட்டு மகளாகிய பீலிவளையுடன் வாழ்ந்த அந்த நாட்களில் பெற்ற இன்பத்தை விளக்கும் போது நன்கு காட்டுகிருர். இவர் ஐம்புல நுகர்ச்சிக்கு மற்ருெரு சிறப்பும் சூட்டுகிருர். ஆம்! மன்மதனுடைய மலரம்

புகள் ஐந்தாகுமன்றே! அந்த ஐந்தும் இவர்கள் மேல் சொரியப் பெறுகின்றன. அந்த ஐவகை மலர்களின் மணம் விரவி வீச, அவர்கள் ஐம்புலன் இன்பத்தைப் பெறுகின்றார் என்று காட்டுகிறார். ஐம்புலன்களையும் அவற்றின் செயல்களையும் விளக்கியும் செல்கிறார்.

"கண்ட கண்ணினும் கேட்ட செவியினும்
உண்ட வாயினும் உயிர்த்த மூக்கினும்
உற்றுணர் உடம்பினும் வெற்றிச் சிலைக்காமன்
மயிலையும் செவலையும் மாவும் குவளையும்
பயிரிதழ்க் கமலமும் பருவத் தலர்ந்த
மலர்வா யம்பின் வாசங் கமழ" -24/35-40

என்பன அவர் அடிகள். இவ்வாறு பலவிடங்களில் சாத்தனார் வள்ளுவர் குறட்பாக்களை அப்படியே எடுத்தாண்டும் தழுவியும் தம் நூலை நடத்திச் செல்கின்றார். கண்டன சில; காணாதவை பல!

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்" -குறள் 360

என்ற மெய்யுணர்வின் இறுதியாக வரும் குறளை, ஈண்டும் சாத்தனார் தம் நூலின் இறுதியில் மெய்யுணர்வு பெறும் மணிமேகலையை முன்னிறுத்தி உலகத்துக்கு மெய்யொளி காட்ட நினைத்தவர்,

"யாம்மேல் உரைத்த பொருள்கட் கெல்லாம்
காமம் வெகுளி மயக்கம் காரணம்" -30/253-254

எனக் காட்டுகிறார்.

குறட்பாக்களை மட்டுமின்றி அக்குறட் கருத்துக்களையும் பிற அதிகாரங்களையும் அப்படி அப்படியே எடுத்துக் குறளுக்கு விரிவாகச் சில இடங்களிலும் தொகையாகச் சில இடங்களிலும் சாத்தனார் தம் அடிகளை ஆக்கிச் செல்

9

லுகின்ருர். ஒன்றினை மட்டும் இங்கே சுட்டின் சாலும் என எண்ணுகிறேன்.

பத்து வகை குற்றங்கள்—மனம், மொழி, மெய்களால் வரும் குற்றங்கள்—இவை இவை எனக் காட்டும் வள்ளுவர் அவை அனைத்தையும் அப்படி அப்படியே குறள் அதிகாரங்களின் தலைப்பைக்கொண்டே காட்டுகின்ருர். தீவினை யாதென விளக்கிய விடத்துச் சாத்தனுர் பத்து வகையாக அவற்றைக் காட்டுகின்ருர். அவர் வாக்கினை அப்படியே மேலே கண்டோம். கொலை, களவு, காமம் என்ற உடலில் தோன்றும் மூன்றும், பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் எனச் சொல்லில் தோன்றும் நான்கும், வெஃகல், வெகுளல், பொல்லாக் காட்சி என்ற மனத்தில் தோன்றும் மூன்றும் சாத்தனுர் காட்டியவை. இந்தப் பத்துக் குற்றங்களையும் வள்ளுவர் எண்ணி எண்ணி அதிகாரங்களாகவும் குறட்பாக்களாகவும் வடித்துத் தந்துள்ளமை அறிவோம். எனவே சாத்தனுர் தம் நூலினை வள்ளுவர் ஒளியுடன் நடத்திச் செல்லுகிருர் என்பது தேற்றம்.

## சாத்தனுரும் பிறரும்

புறநானூற்று அடிகளிலும் சிலவற்றை சாத்தனுர் எடுத்துக் காட்டியுள்ளார்.

> ''தாயில் தூவாக் குழவி போல
> ஓவாது கூஉம்நின் உடற்றியோர் நாடே'' -புறம் 4

என்ற புறப்பாடல் அடிகளைச் சாத்தனுர், ஆபுத்திரனுகிய புண்ணியராசன் அந்நாட்டை ஆளாது துறவுநிலை மேற்கொள்ளின் அந்நாடு வாடும் என்ற உண்மையை விளக்கும் போது,

> ''நீஓழி காலை நின்னு டெல்லாம்
> தாயொழி குழவி போலக் கூஉம்'' –25/110-111

என்று அமைச்சன் வாயிலாகக் காட்டுகின்ருர்.

உலகில் ஆற்று மக்கட்கு அளிப்போரே உண்மையில் அறவோராவர். ஆற்றுநர்க்கும் உற்றவர்க்கும் உதவுவது பண்டமாற்ருகவோ பரிமாற்ருகவோ அமையுமே அல்லாது அறமாகாது. இந்த உண்மையைப் புறநானூறு 'ஆய்' என்னும் கொடை வள்ளலைக் கூறும் காலை,

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன்" புறம் 134

எனக் காட்டுகின்றது. சாத்தனுர் இந்த உண்மையினை,

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்ரு மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை" -11/92-94

என்று சுட்டிக் காட்டுகின்ருர். இவ்வாறே இவருக்கு முன் வாழ்ந்த புலவர்தம் வாய்மொழிகளைப் பொன்னேபோல் போற்றிய தன்மையே இவர் நூலுக்கு உயிரோட்டம் தருகின்றது. இந்த அளவில் இந்த விளக்கத்தை நிறுத்தி, இனிச் சாத்தனுர் மொழியைப் பொன்னேபோல் போற்றிய பிற்காலத்தவருள் ஒரு சிலரையும் காண்போம்.

## சாத்தனுர் எடுத்தாளப் பெறுகிருர்

சாத்தனுருக்குப் பின் எத்தனையோ காப்பியங்கள் எழுந்தன; எத்தனையோ சமய நூல்கள் எழுந்தன. அவற்றுக்கெல்லாம் சாத்தனுர் வழிகாட்டி என்னுமாறு அமையப் பலப்பல கருத்துக்களையும் சொற்ருெடர்களையும் பின் வந்தவரெல்லாம் எடுத்தாண்டுள்ளனர். அனைத்தையும் காணல் இயலாது. எனவே ஒரு சில கண்டமையலாம்.

நாம் மேலே உவமைபற்றிக் கண்ட ஒரு தொடரினைக் கொங்குவேளிர் தம் பெருங்கதையில் அப்படியே எடுத்தாண்டு உள்ளமை எண்ணத்தக்கது.

"நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்" -18/19-20

என்ற சாத்தனார் அடிகளைப் பெருங்கதை ஆசிரியர்,

"இளம்பல செல்வர் வளந்தப வாங்கி
நுண்தா துண்டு வறும்பூத் துறக்கும்
மென்சிறை வண்டின மான" -பெருங்கதை 1.35/137-8

எனக் காட்டுவர். கலிங்கத்துப்பரணியின் ஆசிரியர், சாத்தனாரின்

"ஊண்தலை துற்றிய ஆண்டலைக் குரலும்" -6/77

என்ற ஒரே அடிக்கு விளக்கமாக,

"நீண்ட பலி பீடத்தில் அரிந்துவைத்த
நெடுங்குஞ்சி சிரத்தைத் தன்பிண மென்றெண்ணி
ஆண்டலைப்புள் அருகணைந்து பார்க்குமாலோ"
-கோயில் 16

என்று அழகுபட எழுதுகின்றார். இவ்வாறே பல பிற்கால நூலாசிரியர்களும் எண்ணற்ற உரையாசிரியர்களும் சாத்தனாரின் அடிகளைப் பொன்னேபோல் போற்றி எடுத்தாண்ட சிறப்பே இதன் இலக்கியச் சிறப்பினை நன்கு விளக்கும். மணிமேகலையினை அச்சிட்ட ஐயர் அவர்கள் தம் நூலின் இறுதியில், இந்நூலின் அடிகளை எடுத்தாண்ட அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், பேராசிரியர், இளம்பூரணர் போன்ற உரையாசிரியர்களையும் பிறரையும் குறித்து அவர்கள் எடுத்தாண்ட பகுதிகளையெல்லாம் தொகுத்துத் தந்துள்ளனர். அப்படியே நூலாசிரியர்களின் மேற்கோள்களைத் தொகுப்பின் அது ஒரு பெருநூலாகவே விரியும். இவ்வாறு பின்வந்த பெரும் நூலாசிரியர்களுக்கும் உரையாசிரியர்களுக்கும் மணிமேகலை ஒளிவிளக்காக அமைந்து உயர விளங்குகின்றதென்பது தேற்றம்!

## நகையும் அவலமும்

சாத்தனுர் சிலவிடங்களில் வேடிக்கையாகவும் சில விடங்களில் கழிவிரக்கப்பட்டும் பல உண்மைகளை விளக்குகின்றுர். சாத்தனுர் சமணசமய நெறிகளுள் சில வற்றைக் கண்டிக்க நினைக்கிருர். அவர்தம் உடையற்ற தன்மை, காணு உயிர்க்கெனக்கொள்ளும் சில விரதங்கள், கழுவா உடம்பு இவைபற்றி எண்ணும்போது அவருக்கு வெறுப்பு ஏற்படுகிறது. சைனத் துறவிகளோ, அவைதாம் தம்மை உயர்த்துவன என எண்ணுகின்றனர். உண்மை யில் கண்ணிற் காணும் எண்ணற்ற உயிர்களின் துன்ப நீக்கத்துக்குப் பாடுபடாத அவர்களைப் பழிக்க நினைக் கிருர் சாத்தனுர். அதற்கெனவே ஒரு களிமகனுகிய பாத்தி ரத்தை உண்டாக்குகிருர். தெருவழியே செல்லும் அம் முனிவனை அக் களிமகன் அழைத்துப் பேசுமாறு அமைக் கின்ருர். உண்மையில் இப்பகுதி மணிமேகலையின் கதைக்குத் தேவை இன்றேனும் நகைச்சுவை விளைவிக்க வும் அதே வேளையில் சைனத் துறவிகளைத் தாக்கவும் இந்தத் தெருக்காட்சியைக் கற்பித்துக் கொள்ளுகிருர். அதில் கள் குடிப்பதால் வரும் இன்பத்தையும் அது குடிப்ப தால் கொடுமை ஒன்றுமில்லை என்றும் களிமகன் வாயிலா கவே வேடிக்கையாகச் சொல்லச்செய்து, அச்சைனர்தம் தேவையற்ற, காணு உயிர்களைக் கொல்லா விரத நோன் பினையும் 'மண்ணு மேனி' முதலியவற்றையும் எள்ளி நகையாடுகின்ருர். இதோ அவர் வாக்கு :

"சிமிலிக் கரண்டையன் நுழைகோற் பிரம்பினன்
தவலருஞ் சிறப்பின் அராந்தாணத் துளோன்
நாணமும் உடையும் நன்கனம் நீத்து
காணு உயிர்க்கும் கையற் றேங்கி
உண்ணு நோன்போடு உயவல் யானையின்
மண்ணு மேனியன் வருவோன் தன்னை
'வந்தீர் அடிகள் நும்மடி தொழுதேன்
எந்தம் அடிகள் எம்உரை கேண்மோ?

அழுக்குடை யாக்கையில் புகுந்த நும்உயிர்
புழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தாது
இம்மையும் மறுமையும் இறுதியில் இன்பமும்
தம்வயின் தருஉம் என்தலைமகன் உரைத்தது
கொலையும் உண்டோ கொழுமடற் றெங்கின்
விளைபூந் தேறலின் மெய்த்தவத் தீரே
உண்டு தெளிந்து இவ்யோகத் துறுபயன்
கண்டால் எம்மையும் கையுதிர் கொணம்'' -3/86-101

என்று கூறி அத்துறவிக் கோலத்தையும் விரதத்தையும் தூய்மையற்ற உடலையும் பிறவற்றையும் களிமகன் வழியே விளக்கித் தனக்குச் சமண சமயத்தின் மேலிருந்த வெறுப்பினைக் காட்டிக் கொள்ளுகின்றார். இத்தகைய வெறுப்புணர்ச்சியே பிற்காலத்தில் பல்கிப் பெருகிப் பல சமயப் போராட்டங்களுக்கு இடந்தந்தது. பெருமன்னனாகிய மகேந்திரனுடைய, ஏழாம் நூற்றாண்டில் சைன சமய ஏற்றத்தைப் போற்ற நினைத்து, காஞ்சித் தெருவில் பிற சமய வாதிகளை இழிவுபடுத்தும் 'மத்த விலாசப் பிரகசனம்' என்னும் நாடகம், இச் சாத்தனார் கூற்றின் அடிப்படையில் அமைந்திருப்பதை ஒருவாறு உணர முடிகின்றதன்றோ!

இத்தகைய நகைச் சுவை பொருந்திய காட்சியைக் காட்டிய சாத்தனார் அடுத்து ஓர் அவலக் காட்சியையும் நமக்குக் காட்டுகிறார். அக் காட்சியைக் காண்போர் வருந்துகிறார்கள் என்றும் கூறுகிறார். பாவம் – பித்துப் பிடித்துவன் செயல் கண்டு வருந்தாதென் செய்ய இயலும்? அப் பயித்தியம் வெள்ளலரி மாலையும் எருக்கம் பூ மாலையும் எலும்பு போன்ற குச்சிகளாகிய மாலையும் பூண்டு, சாம்பல் பூசி, சிதர் உடுத்து, கண்டதைப் பேசி வருகின்றதெனக் காட்டுவதோடு, பயித்தியச் செயல்களைச் செய்வதையும் குறிக்கின்றார்.

''கணவிர மாலையின் கட்டிய திரள்புயன்
குவிமுகி ழெருக்கின் கோத்த மாலையன்
சிதவல் துணியொடு சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்வீழ்வு ஓடித்துக் கட்டிய உடையினன்

வெண்பலி சாந்தம் மெய்ம்முழு தூஇ
பண்பில் கிளவி பலரொடும் உரைத்தாங்கு
அழுஉம் விழுஉம் அரற்றும் கூஉம்
தொழுஉம் உழுவும் சுழலலும் சுழலும்
ஓடலும் ஒடும் ஒருசிறை ஒதுங்கி
நீடலும் நீடும் நிழலொடு மறலும்
மையல் உற்ற மகன்பின் வருந்தி
கையறு துன்பம் கண்டு நிற்குநரும்" -3/104-115

என்று பித்தனின் தன்மைகளையெல்லாம் கூறி, அவனைக் கண்டு அவன்பின் வருந்தும் மக்களின் அவல நிலையையும் சுட்டுகிறார் சாத்தனார். இதில் இன்னொரு கொடு விதையையும் சாத்தனார் தூவுகிறார். மேலே தமிழ்நாட்டுக்குப் புதிதாக வந்த சைனசமயத்தையும் அதன் துறவிகளையும் வெளிப்படையாகவே கண்டித்த சாத்தனார், தமிழ் நாட்டுக்கே உரிய பழஞ்சமயமாகிய சைவத்தை அத்துணை வெளிப்படையாகக் கண்டிக்க முடியாத நிலையில் தட்டுத் தடுமாறி சிலேடை வகையில் இவ்வாறு சைவர்களைக் கண்டிக்கிறார் எனக்கொள்ளலாம். வெள்ளெருக்கும் அலரியும் சாம்பலும் எலும்பும் (குச்சிகள்) சூடிய சிவபெருமான், பித்தனாகவும் அடியார்களால் அக்காலத்திலேயே போற்றப்பெற்றான் போலும். அச்சமயத்தை நேர்முகமாகக் கண்டிக்க இயலாத சாத்தனார், எலும்புக்குப் பதில் குச்சிகளைக் கூறி, வெள்ளெருக்கும் சாம்பலும் கூறி, சிலேடை வகையால் காட்டுகிறார். அச் சமயத்தைப் பின்பற்றுவோரும் இருக்கின்ற நிலையை ஈற்றடியால் சுட்டி, பித்தனின் அவல நிலையைக் காட்டுவது போன்று, வழிவழியாக வந்த தமிழர் தம் மெய்ச் சமயத்தின் நிலையைக் காட்டி விடுகிறார் சாத்தனார். இவ்வாறு மாறுபட்டு நின்ற தன்மையின் நிலையே, அடுத்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் சமயவாழ்வும் சமுதாயவாழ்வும் சீர்கெட, வரலாறே அறியா வகையில் மங்க, ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவமும் வைணவமும் வைதிகமும் கலந்த

ஒரு கூட்டுச் சமயம் எழக் காரணமானதோடு, அதன் எழுச்சியே தமிழகம் வந்த பௌத்த, சைன மதங்களின் வீழ்ச்சிக்கும் அடிப்படையாக அமைகின்றது. இரு சமயங் களின் இயைபைக் கண்டு தானே அன்றி ஏனே பின் சமயக் கணக்கரை வரிசைப் படுத்திய சாத்தனுர் சைவனுக்குப்பின் வைதிக வாதியை வைத்துப் பேசுகிருர். மேலும் தன் உள்ளம் பிறருக்குப் புரியாதிருக்கும் வகையில் பூம்புகாரில் முருகன் விழா நடைபெறும் சிறப்பினைச் சில அடிகளுக்குப் பின் இவரே,

"ஆலமலர் செல்வன் மகன்விழாக் கால்கோள்
காண்மினே' எனக் கண்டு நிற்குனரைக்" –3/144-145

காட்டுகிருர்.

இவர் நகைச்சுவையைக் காட்ட நூலில் பல இடங்கள் உள்ளன. அந் நகைச் சுவைகளும் வெறும் நகைச் சுவை களாக மட்டும் அமையாது உயர்ந்த கருத்துக்களை உட் பொதிந்தனவாக– அவர் கொள்கைகளை விளக்குவனவாக இருக்கும். மேலே நகையும் அவலமும் நமக்குக் காட்டிய பொருள்களை உணர்ந்தோமன்றே!

மணிமேகலையைத் தனியாக அனுப்ப வேண்டாமென் பதற்குச் சுதமதி அவள் அழகே காரணம் எனக் காட்டு கின்ருர். அதைக் கூறும் சாத்தனுர், ஆடவர் இயல்பு அழகிய மங்கையர் தோள் சேரலே எனவும் இன்றேல் அவர்கள் பேடியரே எனவும் கூறுகின்ருர். எனவே அவ் வடிகள் வெறும் வேடிக்கையாக மட்டுமன்றி ஆடவர் இயல்பையும் சுட்டுவனவாக உள்ளன.

"பாவையை
ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
பேடிய ரன்றே பெற்றியின் நீங்கிடின்" –3/23-25

என்பன அவரது அடிகள். இவற்ருல் ஆடவர் இயற்கைத் தன்மை அழகினைத் துய்ப்பதென்பதும் அவ் வியற்கைக்கு

மாறுபடுவார் பேடியர் என்றும் கூறி மக்கள் இல்லற வாழ்வில் இயைந்து நிற்க வேண்டிய உண்மையையும் விளக்குகிறார்.

சாத்தனார் மற்றொரு காட்சியையும் நமக்குக் காட்டுகிறார். பாரதக் கதை அவர் உள்ளத்தில் படுகின்றது. மணிமேகலையைத் தெருவழியே செல்வதைக் காணும் மக்களை விராட நகர மக்களோடு ஒன்றுபடுத்துகிறார். அர்ச்சுனனும் பேடியை விராட நகர மக்கள் வேடிக்கைக் காண்பதை ஈண்டு நகையாகக் காட்டி, அப்படியே பூம்புகார் நகர மக்கள் மணிமேகலையைக் கண்டு பேசுகிறார்கள் எனக் குறிக்கின்றார். இதில் உள்ள உவமையில் மற்றொரு பேருண்மையையும் புதைத்து வைக்கிறார் சாத்தனார். ஆம்! பேடி உருவத்தோடு செல்லுகின்ற விசயன் செல்லும் இடத்தில் மாற்றாரைப் புறங்கண்டு திரும்பும்போது தன் பண்டைய உருவத்தோடு திரும்புகிறான். இதேநிலையில்தான் அன்று புகார்த் தெருவோடு செல்லும் மணிமேகலை அடுத்து அத்தெருவழியே திரும்பும் போது (ஏழுநாள் கழித்து-மணிபல்லவத்திலிருந்து) தன் அகப்பகை புறப்பகை அனைத்தையும் வென்று அலையா உள்ளத்தோடு தன் பண்டைப் பிறவியின் உணர்ச்சியொடு திரும்புவாள் என்ற உண்மையையும் குறித்துள்ளார். இவ்வாறே பலவிடங்களில் வரும் நகையும் அவலமும் மேலுக்கு வேடிக்கை வாய்ந்தனவாகத் தெரியினும் உயர்ந்த பொருள்கள் அவற்றின் உள்ளே பொதிந்திருப்பதைக் காணலாம்.

சாதுவன், குருமகனைக் காணும்போது நடைபெறும் உரையாடல்களும் மணிமேகலை மணிபல்லவத்தில் பெறும் அனுபவங்களும், அவள் அத்தீவில் புண்ணியராசனுக்கு உணர்த்தும் அறவுரைகளும்-அவற்றுள் ஒரு சில வேடிக்கையாகவும் நகைச்சுவை பொருத்தியனவாகவும் அமையினும்-உயர்ந்த பொருள்களையும் வாழ்க்கை நெறிக்கு வேண்டிய மெய்ப்பொருள் விளக்கங்களையும்

கொண்டனவாக உள்ளன. இவ்வாறே மன்னனிடம் முனிவர்கள் அவன் மகன் கொலையுண்டமையைக் கூறும் போதும், கந்திற்பாவையும் பிறவும் பேசும்போதும் பற்பல உயர்ந்த கருத்துக்களை அமைக்கின்ருர் சாத்தனுர். இக் கதையில் பலதிருப்பங்கள் கந்திற்பாவைகள் பேச்சுக்களா லேயே உண்டாகின்றன. உதாரணமாக, வெட்டுண்ட உதயகுமரனிடம் சென்ற மணிமேகலையைக் கந்திற்பாவை காரணங்காட்டித் தடுத்திராவிட்டால் கதை எவ்வாறு சென்றிருக்குமென்று யாரால் கூறமுடியும்?

## பாவையும் பேசும்

மனிதர் தம் பேச்சைக் கேட்காவிட்டால், பெரியோர் மரத்தையும் பிறவற்றையும் விளித்து அறங்காட்டும் மரபு தமிழ் நாட்டிற்குப் பழமையானது. அப்படியே மனிதர் வாயால் சொல்லும் அறத்தை ஏற்காவிட்டால் மரமும் விலங்கும் பிறவும் சொல்லுவனபோன்று அறத்தை அமைப்பதும் உண்டு; அவற்றைக்காட்டி அறமுரைப்பது முண்டு. 'சொல்லரும் சூற்பசும் பாம்பின்' என்ற தேவர் பாடலும்

> ''தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
> தலையாலே தான்தருத லால்''
>
> ''குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
> மறைக்குமாம் கண்டீர் மரம்''

என்பனபோன்ற பிற்கால ஔவையார் அடிகளும் இந்த உண்மையை வலியுறுத்துவன. சாத்தனுர் இந்த அடிப் படையிலேயோ அன்றித் தெய்வநெறி அடிப்படை யிலேயோ அன்றி இவ்வாறு தூணிற் செதுக்கிய பாவை யினைப்பேசவைத்தால் தம் சமயம் மதிக்கப்படும் என்ற உணர்விலேயோ பலவிடங்களில் பேசவைக்கின்ருர். அப்பாவையுள் ஒன்றுதான் குறட்பாவினை விளக்கிற்று என்று மேலே கண்டோம். மற்ருென்று நாம் சற்றுமுன்

கண்டபடி வெட்டுண்ட உதயகுமரன் அருகில் சென்று மணிமேகலையைக் கூவி நல்லாற்றுப் படுத்துகிறது.

காஞ்சனனுல் வெட்டி வீழ்த்தப்பட்ட உதயகுமரன் உடலைக் கண்ட மணிமேகலை புலம்புகிருள். சென்ற பிறவியின் கணவன் என்ற கருத்து அவளை வாட்டுகிறது. தன் உள்ளம் உவவனத்தில் ஈடுபட்டதை உணர்கிருள். அங்கேயும் மணிமேகலா தெய்வம் அவள் உள்ளத்தைத் தகைந்தமையை எண்ணுகிருள். தான் காயசண்டிகை வடிவான காரணத்தைப் பேசுகிருள், பின் 'காதல' எனவே விளிக்கின்ருள். ஆம்! துறவியாகிய மணிமேகலை உள்ளத்தும் தடுமாற்றம் பிறக்கிறது. முன்னும் உவவனத்தில் பிறந்தது. இவற்ருல் சாத்தனுர் வினைவலிமையை வற்புறுத்தி, அத்தகைய வினைகளும் தெய்வங்களால் நீக்கப் பெறும் உண்மையினை ஆண்டு மணிமேகலா தெய்வத்தை முன் நிறுத்தியும் ஈண்டுக் கந்திற் பாவையை முன்னிறுத்தியும் காட்டுகிருர். தன்காதலன் உடலிடம் செல்ல நினைத்த மணிமேகலையைக் கந்திற்பாவை,

''செல்லல் செல்லல் சேயரி நெடுங்கண்
அல்லியந் தாரோன் தன்பால் செல்லல்
நினக்கிவன் மகனுய்த் தோன்றிய தூஉம்
மனக்கினி யாற்குநீ மகளா யதூஉம்
பண்டும் பண்டும் பல்பிறப்பு உளவால்
கண்ட பிறவியே அல்ல காரிகை
தடுமாறு பிறவித் தாழ்தரு தோற்றம்
விடுமாறு முயல்வோய்! விழுமம் கொள்ளேல்'' -21/27-35

என்று கூறி அவளைத் தடுத்ததோடு அவள் செயல் அவளுடைய தூய செம்மைப் பணிக்கும் எதிர்கால ஒளி வாழ்விற்கும் இடையூறுகும் என்பதையும் வற்புறுத்துகின்றது.

மணிமேகலா தெய்வம் தோன்றிப் பேசுவதும் மணி பல்லவத்தில் தீவதிலகை பேசுவதும் சம்பாபதி சார்ங்கலன் தாயொடு பேசுவதும் சிந்தாதேவி ஆபுத்திரனுடன் பேசிப் பாத்திரம் அளிப்பதும் காஞ்சனனைக் கந்திற்பாவை தடுப்பதும், துவதிகன் என்னும் கந்திற்பாவை வருவது உரைப்பதும் பின் கண்ணகித் தெய்வம் பேசுவதும் இவை போன்ற பிறவும் மணிமேகலைக் காப்பியம் மனிதநிலைக்கு மேம் பட்ட ஒரு தெய்வநிலையை வற்புறுத்துவதோ என்ற உணர்வை உண்டாக்குகிறது. பிற்காலத்தில் உண்டான சமய இலக்கியங்களுக்கும் சமயச் சார்புடைய புராணங் களுக்கும் தல புராணம் போன்றவற்றிற்கும் இந்நூல் வழி காட்டியாக அமைகிறது. இத்தகைய பேசாத தெய்வங்களை யும் சிலைகளையும் பேசவைக்கும் முயற்சி இளங்கோ அடி களால் ஒருசில இடங்களிலும் காட்டப்பெறினும் சாத்த னார் அப்பேச்சுக்களையும் செயல்களையும் காப்பியத் திருப்பங்களாகவே அமைத்து உள்ளனர். இம்மரபு புதிய தாயினும் இதில் சாத்தனார் வெற்றி பெற்றுள்ளார் என்றே கொள்ளல் வேண்டும். தன் வெற்றிக்கு அவ்வாறு பேசிய வருள்·ஒரு தூணில் நின்ற துவதிகள் வாயிலாகவே சான்றும் காட்டுகின்றார். இதோ அவர் வாக்கு:

"வழுஅறு மரனும் மண்ணும் கல்லும்
எழுதிய பாவையும் பேசா என்பது
அறிதலும் அறிதியோ அறியாய் கொல்லோ
அறியா யாயின் ஆங்கது கேளாய்!
முடித்துவரு சிறப்பின் மூதூர் யாங்கணும்
கொடித்தேர் வீதியும் தேவர் கோட்டமும்
முதுமா இடங்களும் முதுநீர்த் துறைகளும்
பொதியினும் மன்றமும் பொருந்துபு நாடி
காப்புடை மாநகர்க் காவலும் கண்ணி
யாப்புடைத் தாக அறிந்தோர் வலித்து

மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க
ஆங்கத் தெய்வதம் அவ்விடம் நீங்கா
ஊன்கண்ணி னூர்கட் குற்றதை உரைக்கும் -21/115-128

இவ்வாறு தன் செயலுக்குச் சாத்தனூர் துணைகொள்ளுகிறுர். எனினும் பிற்காலத்து வந்தோர் இந்த மரபினையே பெரிதாக்கி மூல மரபினை மூடிய காரணத்தாலேயே தத்தம் காப்பிய விளக்கங்களால் தாம் சிறக்கவில்லை என்பது தெளிவு.

## விளக்கும் ஆற்றல்

சாத்தனூர் தாம் கொண்ட கருத்தினைக் கொள்வோர் உளங்கொள விளக்கும் திறம்பெற்றவர் என்பதும் ஈண்டு எண்ணற்பாலதாகும். இவர் ஒவ்வொருவரும் தத்தம் கொள்கையை எவ்வாறு விளக்கவேண்டும் என்ற அடிப்படைக் கருத்தினைச் சமயக் கணக்கர் மேலேற்றி,

"மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
இத்திறம் தத்தம் இயல்பினில் காட்டும்
சமயக் கணக்கர்" -1/10-12

எனக் கூறுகின்றுர். இவரே தம் கருத்தினையும் சமய உண்மைகளையும் திறம்பட விளக்கியுள்ளார். ஒருசில வற்றை முன்னரே கண்டோம். ஈண்டும் சில கண்டு அமையலாம்.

திருவள்ளுவர் 'அழுக்காறு என ஒரு பாவி' என்று கொடுமையினும் கொடுமை வாய்ந்த அழுக்காற்றினைச் சபிப்பது போலப் 'பாவி' எனவே பழித்துரைப்பர். இவ்வளவு நல்லற முரைக்கும் வள்ளுவர் வாயில் இத்தகைய சொல் வரலாமா என்ற எண்ணம் தோற்றினும், அழுக்காற்றின் கொடுமை நிலையினை அவர் எண்ணிக் கூறிய காரணத்தால் அக்கூற்று முற்றும் சரியே எனக் கொள்ளத்

தோன்றுகின்றது. அப்படியே சாத்தனாரும் ஒரு 'பாவி'யை நம்முன் நிறுத்துகின்றார். மணிமேகலை என்ற இந்நூலே உயிர் வாழ்விற்கு இன்றியமையா உணவளிக்கும் அடிப்படையில் அமைந்த காரணத்தால், அவ்வுணவின்றி உருக்கும் பசியினை அவர்,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி" -1/76-80

என்று அதன் கொடுமையை அதுவரையில் யாரும் எடுத்துக்காட்டா வகையில் விளக்கிக் காட்டியிருக்கின்றார். இவர் அடிகளை ஒற்றிப் பின்வந்த ஔவையார் போன்றார் பல பாடல்களைப் பாடியுள்ளனர்.

அடுத்து ஆபுத்திரன் அந்தணர்களின் வேள்வியைக் கடிந்து காட்டும் இடமும் அவன் இந்திரனிடமே தேவ உலக வாழ்வைச் சித்தரிக்கும் இடமும் சாதுவன் நாக நாட்டுக் குருமகனிடம் காமம், கள் முதலியவை கடிய வேண்டும் என்பதை விளக்கும் இடமும் உயிர் மறுபிறப் பெய்துவதைக் காட்டும் இடமும் சிறந்த விளக்கங்களாக —வாதத்தில் வெல்லும் திறத்தனவாக அமைவதைக் காண்கின்றோம். அவை பற்றியெல்லாம் முன்னரே கண்டுள்ளமையின் தொட்டுச் செல்கின்றேன்.

மணிமேகலை தன் முந்தைப் பிறப்பின் காதலனாகிய உதயகுமரன் முன்னின்று அறம் உரைத்து அவனைத் திருத்த முயலும்போது கூறிய அடிகள் சாத்தனாரின் விளக்குந் திறத்தைக் காட்டுவன. "நல்லாய் என் கொல் நற்றவம் புரிந்தது?" என்று கேட்ட அவனுக்கு, மணிமேகலை இடும்பைக் கொள்கலமாகிய இவ்வுடம்பின் இழி

நிலையினை நன்கு விளக்கித் தான் மிக்க நல்லறம் விரும்பிய வகையினைக் காட்ட இறுதியில்,

"மண்டமர் முருகின் களிறனை யார்க்கும்
பெண்டிர் கூறும் பேரறி வுண்டோ
கேட்டனை யாயின் வேட்டது செய்க" -18/140-142

என்று கூறி முடிப்பது எத்துணைப் பொருத்தமாக அமைகின்றது. அரசகுமரனுக்கு வேறு எப்படி அறிவுறுத்த முடியும்? சொல்லவேண்டிய அனைத்தையும் சொல்லி விட்டு, பிறகு 'ஆடவருக்குப் பெண்கள் கூற என்ன இருக்கிறது?' என்ற வினவையும் எழுப்பி, முடிவில் செயலாற்ற வேண்டிய அச் செயல்முறையை அவனுக்கே உரிமையாக்கிய திறன் சிறந்த ஒன்றன்றோ? ஒருவேளை வேறு வகையாகக் கூறியிருப்பின் அவன் அங்கேயே கொடுமை இழைத்திருக்கவும் கூடுமன்றோ! மேலும் 'வேட்டது செய்க' என்று கூறியதால் அவன் தன் சொற் கேளான் என்ற கருத்தும் பொதிந்து கிடக்கிறது. அதனாலேயே அவள் காயசண்டிகை வடிவினைப் பெற்றாள். அவனும் கேளாது காஞ்சனனால் வெட்டுண்டிறந்தான்.

உதயகுமரன் இறந்ததை முனிவர்கள் சோழ மன்னனுக்கு எடுத்துரைக்கச் செல்லுகிறார்கள். சென்றதும் நேரே உதயகுமரன் இறந்தான் என்றோ, அதற்குக் காரணம் இவைஇவை என்றோ எடுத்துக்காட்டாது, வேறு வேறு பேசுகின்றனர். முதலாவதாக அவன் 'வேலும் கோலும் அருட்கண் விழிக்க' என வாழ்த்துகின்றனர். மேலும் அன்று நடந்த நிகழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக, முன் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளை—அவையும் அரசகுமரரைச் சார்ந்த நிகழ்ச்சிகளாக எடுத்துக்காட்டுகின்றனர்.

"இன்றே அல்ல இப்பதி மருங்கில்
கன்றிய காமக் கள்ளாட் டயர்ந்து
பத்தினிப் பெண்டிர் பால்சென் றணுகியும்

நற்றவப் பெண்டிர் பின்னுளம் போக்கியும்
தீவினை உருப்ப உயிரீறு செய்தோர்
பாராள் வேந்தே! பண்டும் பலரால்'' –22/19–24

என்று முன்னாட்களில் நிகழ்ந்த மருதியின் வரலாறு, விசாகையின் வரலாறு இவைகளைக் காட்டி அக் கற்புடைப் பெண்டிரிடம் கருத்திருத்திய மன்னவர் மக்கள் உற்ற நிலையைக் காட்டுகின்றனர். இவைகளைக் கேட்ட அரசன்,

''இன்றே அல்ல என்றெடுத் துரைத்து
நன்றறி மாதவிர்! நலம்பல காட்டினிர்
இன்றும் உளதோ இவ்வினை உரையும்'' 22/163-165

எனக் கேட்கின்றான். அப்போதும் அனைவரும் நேரிடையாக முதலில் எடுத்துக் கூறாது, அவருள் சிறந்த ஒருவரைப் பேச வைக்கின்றனர். அவரும் 'வேலும் கோலும் அருட்கண் விழிக்க' என வாழ்த்தியும் ஐம்பெரும் பாதகச் செயல்களின் கொடுமைகளை விளக்கியும், பிறகே நடந்ததைச் சொல்லுகிறார். அனைத்தையும் கேட்ட மன்னன் தன் மகன் இறந்ததற்கு வருந்தாது, தான் தரவேண்டிய தண்டனையை விஞ்சையன் தந்தானே என்பதற்காகவே வருந்துகிறான் என்பதை மேலே கண்டோம்.

இவ்வாறே சமயங்களை விளக்கும் இடங்களிலும் அறமுரைக்கும் இடங்களிலும் சாத்தனார் கொள்வோர் கொள்வகை அறிந்து உளங்கொளச் சொல்லுகின்றார். அந்தந்த இடங்களுக்கு ஏற்றாற்போன்று கதைகளையும் அமைக்கும் திறன் அவரிடம் உண்டு. இந்த நாளில் 'இராசாசி' அவர்கள் சிறுகதைகள் மூலம் பல உண்மைகளை விளக்குவர் என்பர். அப்படியே இடைக்காலத்திலும் பல உள்ளமையைப் பேரிலக்கியங்களிலும் பிறவற்றிலும் காண்கின்றோம். இவற்றிற்கெல்லாம் பிறப்பிடமாகச் சாத்தனார் தம் பெருங்கதைக்கு இடையே சிறு சிறு கதைகளைப் பாத்திரங்கள் வாயிலாகவே சொல்லவைத்துத் தம் கருத்

தினையும் வாழ்க்கை நெறியினையும் விளக்குகிறார். அரசனுக்கு அறிவோர் உணர்த்திய இரு கதைகளைக் கண்டோம்; இன்னும் சில காண்போம்.

## சிறு கதைகள்

சிலப்பதிகாரத்தைப் படிக்கும்போது, மாடலன் வாயிலாகவும் மதுராபுரித் தெய்வம் வாயிலாகவும் பிறவகையிலும் சில கதைகளைத் தெரிந்து கொள்ளுகிறோம். அவை பெரும்பாலும் அந்நூலுள் வரும் பாத்திரங்களின் சிறப்பை உணர்த்துவனவாகவும் அமைகின்றன. சாத்தனாரும் அந்த வகையில் பல கதைகளைத் தம் நூலில் புகுத்துகின்றார் இடங்களுக்குப் பெயர் வந்த வரலாறு முதலியனவும் பல்வேறு முனிவர்தம் கதைகளும் சாத்தனார் வழியில் புதிதாக நாம் கேட்கின்றோம். பல வடநாட்டுக் கதைகளும் பிறவும் இக் காப்பியத்தில் இடம்பெறக் காண்கின்றோம். தமிழ் நாட்டிற்கே சிறப்பான கொள்கைகளையுடைய சில கதைகளையும் காண முடிகின்றது. இந் நூலில் வரும் பாத்திரங்களாகிய ஆபுத்திரன், ஆதிரை, சுமதி, துவதிகன் போன்றார்தம் வரலாறுகளும்கூடக் கதை போன்றே கூறப்பெறுகின்றன. எனவே, சாத்தனார், துறவுக் காப்பியத்தைச் சுவை கெடாது—இலக்கியம் நலம் சிதையாது கொண்டு செல்ல இவ் உத்தியைக் கையாண்டாரோ என எண்ண வேண்டியுள்ளது. இவற்றுள் சில கதைகளை நாம் கடந்த நாள்களிலும் இன்றும் கண்டோம். எல்லாக் கதைகளையும் எடுத்தியம்புதலும் எளிதன்று; தேவையற்றதும் கூட. சில முக்கியமான கதைகளையும் கதைப் போக்குகளையும் முன்னரே கண்டுள்ளமையின் ஈண்டு ஒரு சிலவற்றைத் தொட்டுக்காட்டி மேலே செல்லலாம் என எண்ணுகிறேன்.

ஆசிரியர் சுட்டப் பெறாத இந்நூலின் பதிகத்திலேயே நம் நாட்டுக்குச் சம்புத் தீவம் என்ற பெயருக்கு ஒரு கதையும் காவிரியின் உற்பத்திக்கு ஒரு கதையும் காட்டப்பெறுகின்றன. இத்தகைய கதைகள் பின்னால் தோன்றிய சமய

இலக்கியங்களுக்கும் தல புராணங்களுக்கும் ஊற்ருய் அமைந்தனவாகத் தோன்றுகின்றன.

பூம்புகாரின் ஒரு பகுதி சம்பாதிவன மெனவும் மற்ருெரு பகுதி கவேர வனம் எனவும் பெயர் பெற்றமைக்கும் (காதை 3) கதைகள் உள்ளன. பிரத்தியுமனன் வாணசுரனுடைய நகர் முன் ஆடிய பேடிக் கோலமும், அர்ச்சுனன் விராட நகரத்துப் பேடிக்கோலமும் குறிக்கப்பெறுகின்றன. கௌசிக முனிவன் நாயூனினைத் தின்ருன் என்ற கதையும் காட்டப் பெறுகின்றது. (காதை 11) பதின்மூன்ருவது காதையிலேதான் நாம் முன்னே கண்டபடி ஆபுத்திரன் வாயிலாகப் பல ஆரிய முனிவர்தம் பிறப்பினை விளக்கும் வேடிக்கையான கதைகள் காட்டப்பெறுகின்றன. இவை வடநாட்டார் சமயம் மட்டுமின்றி அவர்தம் கதைகளும் தமிழ்நாட்டில் பெருகிவிட்டன என்பதற்குச் சான்றுகளாகும்.

உதயணன் கதையும் (காதை 15), அகலிகைக் கதையும் (காதை 18), வாமனவதாரக் கதையும் (காதை 19), பரசுராமன் கதையும் (காதை 22) மனுச் சோழன் கதையும் (காதை 22) பிற கதைகளும் பேசப்பெறுகின்றன. இவையன்றி இன்னும் எத்தனையோ கதைகள் அவ்வப்போது உவமை வகைகளாலும் பிறவகைகளாலும் எடுத்துக்காட்டப்பெறுகின்றன. வெற்றுக் கதைகள் எதுவும் விரவாது, வாழ்வையே படம்பிடித்துக் காட்டும் சங்க இலக்கியங்களைப் பயிலும் நிலையில் உள்ளவர்களுக்கு, இக்கதைகள் அச்சங்க காலத்தை அடுத்தே தமிழ்நாட்டில் பேரிலக்கியங்களிலும் மக்கள் வாழ்விடங்களிலும் இடம் பெற்றன என்பதைக் காணும்போது, வேற்று நாட்டிலேயிருந்து வந்த வேற்றுச் சமயத்தவராகிய வைதிகர், சைனர், பௌத்தர் ஆகியோர் தத்தம் கொள்கைகளைப் போட்டிகளுக்கிடையில் எத்தனை வேகமாகப் பரப்பியுள்ளனர்–அல்லது பரப்ப முயன்றனர் என்று எண்ணத் தோன்றும். அவற்றுள்–அவ்வாறு வந்த சமயங்களுள் வைதிக சமயம், தான்

செல்லும் இடத்துக்கும் மக்கள் வாழ்வுக்கும் ஏற்ற வகையில் தன்னைச் சரிசெய்து கொண்டு வாழும் திறம் பெற்றமையின்-அவ்வழியில் அச்சமயத்தோர் சென்றமையின்-தமிழ்நாட்டுப் பழஞ் சமயங்களாகிய சைவ, வைணவத்தோடு இணைந்து, அவர்தம் தெய்வங்களையும் சிற்சில மாற்றங்களோடு ஏற்றுக்கொண்டு, தன்னையும் நாட்டுச் சமயமாகச் செய்து கொள்ளும் வகையில் முயன்றமையின், பிற இரண்டு சமயங்களையும் வீழ்த்தி வெற்றி பெற்றதோடு இன்றளவும் தமிழ் நாட்டில் தன் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டு வாழவும் செய்கின்றது.

தெளிந்த சங்க காலத்துக்குப் பின் வேற்று இனமும் சமுதாய நெறியும் கடவுள் நெறியும் பிறவும் தமிழ்நாட்டில் புகுந்தன என்பது வரலாறு கண்ட உண்மை. அவ்வாறு வந்தவரும் வந்தவையும் தமிழ்நாட்டைத் தத்தம் ஆதிக்கத்தில் கொண்டுவர முயன்ற போராட்டமே தமிழ்நாட்டு வரலாற்றின் இருண்ட காலத்துக்குக் காரணமாயிற்று. நாம் மேலே கண்ட சமயங்கள் மாத்திரமின்றி, அச் சமயங்களை வளர்ப்போர் மாத்திரமின்றி வேறு பல சமயங்களும் அவற்றின் உட்பிரிவுகளும் தமிழ்நாட்டில் கால்கொள்ளத் தொடங்கிய காலமே அந்த இருண்டகாலம். தமக்கு உரிமை இல்லாத தமிழ்நாட்டில், உரிமை கொண்டாடப் போரிட்ட வரலாறு எத்தகையது என்பதைத் திட்டமாக நம்மால் அறிந்துகொள்ள முடியாவிட்டாலும், அதனால் உண்டான பெரும் மாற்றத்தை — வேறுபாட்டினைத் திரும்பவும் ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தெளிவாகக் காணும் தமிழ்நாட்டுச் சமயநெறி, வாழ்வியல் முதலினவற்றை அறிவதன் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. இம் மாறுபாடுகளுள் பெரும்பாலன சமய அடிப்படையிலேயே நிகழ்ந்துள்ளன. அரசியல் பற்றிய தெளிவு காணக் கிடைக்கவில்லை. எனவே, இத்தகைய மாறுபாட்டுக்கு நிலைக்களனான அந்தச் சாத்தனுர் காலத்திய சமய நெறிகளைப் பற்றி அவர் நூல் வழியே ஒருவாறு கண்டு நம் பணியை முடித்துக் கொள்ளலாம் என எண்ணுகிறேன்.

## சமயநெறி

தமிழர்கள் அதுவரையில் வாழ்க்கையின் அறநெறியாகக் கொண்டவற்றைச் சாத்தனார் தம் சமயத்துள் ஏற்றிக் கூறுகின்றார். வள்ளுவரை ஒப்பிட்டுக் காட்டிய போது அந்த உண்மையை ஓரளவு உணர்ந்து கொண்டோம். மேலும் நூல் முழுவதும் சமய அடிப்படையில் அமைந்த காரணத்தாலே, பல்வேறு வகையில் ஆராய்ந்த போதும், அங்காங்கே அறத்தொடு கலந்த சமயநெறியும் ஒன்றியிருக்கக் கண்டோம், எனவே, ஈண்டுத் தனியாக அத்துறையில் ஆராயத் தேவையில்லை யாயினும் சாத்தனார் பிறசமயவாதிகளையும் மணிமேகலையையும் முன்னிறுத்திப் பேசும் நிலையிலும் பிற வகையிலும் காட்டியுள்ள ஒரு சில கருத்துக்களை மட்டும் காணல் நலம்.

தொடக்கத்திலும் இன்றும் மணிமேகலை காலத்திய நாட்டுச் சமய நிலையை ஒருவாறு முன்னரே ஆராய்ந்தோம். அக் காலத்தில் சற்றே வளர்ச்சி அடைய, பிறவற்றைத் பின் தள்ளியதோ என நினைக்கும் வகையில் தம் சமய உயர்வைச் சாத்தனார் கூறினாலும் அக்காலத்தில் தமிழ்நாட்டில் எல்லாச் சமயங்களும் இருந்தன எனக் காண்கின்றோம். சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை இறுதியில் 'ஐவகைச் சமயம் அறிந்தனள்' எனச் சாத்தனார் கூறுகின்றனர். ஆயினும் பத்துச் சமயங்களைப் பற்றிக் கூறியுள்ளமையை நாம் நூல்வழியே அறிகின்றோம். எனினும் இதற்குத் தக்க விளக்கத்தை ஐயர் அவர்கள் காட்டுவது கொண்டு அறியின் ஐயம் நீங்கும்.

> ''இக்காதையிற் கூறியவை பத்து மதங்களாயிருப்ப இங்கே 'ஐவகைச் சமயம்' என்றது இழுக்கன்றோ வெனின்:—
> அளவை வாதம் முதலிய ஐந்தும் ஒருவகையினும் ஆசீவக வாதம் நிகண்ட வாதம் இரண்டும் ஒருவகையினும் அடங்கு மென்ப வாகலின் அன்றென்க''

என்பர் ஐயரவர்கள். அளவை, சைவம், பிரமம், வைணவம் வேதம் என்ற அடிப்படையில் கூறிய ஐந்தையும் ஒன்ருக்கி ஆசீவகம் நிகண்டம் இரண்டையும் ஒன்ருக்கிப் பின் சாங்கியம் வைசேடிகம், பூதவாதம் என்ற மூன்றையும் சேர்த்து ஐந்து எனக் கூறுகின்ருர் சாத்தனுர். இவற்ருேடு பௌத்த சமயத்தையும் சேர்த்துப் பெருங்கதை ஆசிரியர் 'ஆற்றுளிக் கிடந்தஅறுவகைச் சமயமும்' (1/36/242) எனக் காட்டுவார். தமிழ்நாட்டில் பலவகையில் இவ்வறுவகைச் சமயங்கள் பகுக்கப்படுகின்றன. இன்றும் தமிழகத்தில் மூன்று நிலையில் அறுவகைப் பெருஞ் சமயங்கள் வாழ்கின்றன. சைவ சமயத்தவர் 'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்' இறைவன் நீக்கமற நிறைந்திருப்பதை வேறு வகையில் விளக்கிக் காட்டுவர். எனவே தமிழ்நாட்டுத் தனிக்கடவுளாம் முருகனுக்கு அறுமுகங்கள் உள்ளமை போன்று, தமிழ்நாட்டுச் சமயநிலை என்றும் ஆறு வகையில் அமைந்திருந்த நிலையை உணர்கின்ருேம். இந்நிலையில் மணிமேகலை காட்டிய அந்த அறுவகைச் சமயங்கள் தற்போது நாட்டில் உள்ளனவா என்பதை ஓரளவு அறிந்து மேலே செல்வோம்.

## அறுவகைச் சமயங்கள்

நாம் மேலே கண்டபடி சைவம், வைணவம், வேதாந்தம் (பிரமம்), வைதீகம் என்பவற்ருேடு அளவையையும் ஒன்ருக்கி, ஒரு சமய நெறியாகக் காட்டுகிருர் சாத்தனுர் என்ருலும் அவ்வவற்றின் வேறுபாடு கருதி, ஒவ்வொருவரையும் தனித் தனியாகவே நிறுத்தி அவரவர் சமயத்தைப் பற்றிப் பேச வைக்கின்ருர். எனினும் காலப் போக்கில் இந் நிலைகளெல்லாம் மாறி ஒன்ருக அவர் எண்ணியபடியே ஆயின என்பதைக் காண்கின்ருேம். ஆயினும், உண்மை வகையிலும் சாத்தனுர் காட்டிய வழியினும் உற்று நோக்கின் அவற்றுள் பொதிந்த வேறுபாடுகள் புலப்படாமற் போகா. இந்நூல் வழியும் பிற சமய நூல்கள் வழியும் இவற்றை நன்கு தெளிந்து கொள்ளலாம். மேலும் இச்

சமயங்களே தம்முள் மாறுபட்டு நன்று வழக்காடுவதை யும் பிற்காலத்தமைந்த பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டும் நன்கு உணரலாம். எனினும் பிற்காலத்தில் இவையனைத்தும் ஒன்ருக இணைந்து 'இந்துமதம்' என்ற பெயராலே அழைக்கப்பெற்று வாழ்கின்றமையும் கண் கூடு. இச்சமயங்களுள் பிற்காலத்தில் அவ்வப்போது தோன்றி வாழ்ந்த பாசுபதம், கபாலம் போன்ற சிறு சிறு சமயக் கொள்கைகள் சாத்தனுர் காலத்தே இல்லை எனக் காண்கின்ருேம். சைவம், வைணவம், வேதாந்தம் (பிரமம்), வைதிகம் என்ற நான்கும், தனித்தனிக் கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் கொண்டு இன்றும் வாழ்ந்து வருவதை அறிகிருேம். அளவை வாதம் நாட்டில் வழக் கொழிந்ததென எண்ண வேண்டியுள்ளது. நிகண்ட வாதம் 'சைனம்' என்னும் பெயரால் தமிழ்நாட்டில் ஓரள விலும், வடநாட்டில் பல பகுதிகளிலும் வாழ்வதறிவோம். பௌத்தம் தமிழ் நாட்டிலும் பிறந்த வட நாட்டிலும் அதிகமாகப் பரவாவிடினும் பிற நாடுகளில் சிறக்க வாழ் கின்றமை அறிவோம். பிரம வாதமும் வேத வாதமும் ஒன்ருே என்ற வகையில் உள்ளன. ஆசிவகம் நிகண் டத்துள் அடங்கிவிட்டது. மற்ருென்ருகிய பூத வாதமே உலகாயதமாக ஓரளவு இன்றும் வாழ்கின்றது. நாத்திகம் என்னும் மாற்றுப் பெயரால் அது வாழ்கின்றதெனினும் அதுவும் ஒரு பொருளை – உலகினை – சார்ந்து வாழ்கின் றமையின் அதையும் சமயமெனவே கொள்ளுகின்றனர். இச்சமயத்தினைச் சமயமெனச் சாத்தனுர் கூறினர் ஆயினும் இதை மணிமேகலை ஏற்றுக் கொள்ளாது மறுத்ததாகவே காட்டுகின்றனர். பிற சமயத்தவர் கொள்கைகளையெல் லாம் கேட்டு ஒன்றும் கூருது வாளா இருந்த மணிமேகலை இக் கொள்கையினை மட்டும் எதிர்த்துத் தன் வாழ்வையே சான்ருகக் காட்டி மறுத்து ஒதுக்குவதைக் காண்கிருேம். பிற சமயங்களையெல்லாம் மறுத்துக் கூருத மணிமேகலை பூதவாதியை மறுக்கும் திறனைச் சாத்தனுர்,

"எல்லா மார்க்கமும் கேட்டு
நன்றல வாயினும் நான்மாறு உரைக்கிலேன்
பிறந்தமுற் பிறப்பை எய்தப் பெறுதலின்
அறிந்தோ ருண்டோ எனநக் கிருத்தலும்" -27/77-80

என்று கூறுவதால் காட்டுவர். அதையும் மறுத்த பூத வாதிக்கு மறுபடியும் மணிமேகலை,

"நின்
தந்தை தாயரை அனுமானத் தாலலது
இந்த ஞாலத்து எவ்வகை யறிவாய்?
மெய்யுணர் வின்றி மெய்ப்பொருள் உணர்வரிய
ஐயம் அலது இது சொலப் பெறாய்" -27/283-287

என வாயடக்கி, அவன் கொள்கையை வீழ்த்துவ தறிகிறோம். இக் கருத்தினை இதே நூலில் மற்றோரிடத்தில் துவதிகன் வாயிலாக அறிகிறோம். துவதிகன் மணிமேகலை யின் எதிர்கால வாழ்வை உணர்த்துகையில், அவள் வஞ்சி மாநகர் சென்று சமயக் கணக்கர் தம் திறம் கேட்பதைக் கூறும்போது (21 / 88 - 113) நன்கு விளக்குகிறார்.

"இறைவனும் இல்லை இறந்தோர் பிறவார்
அறனோ டென்னை" என்றறைந்தோன் தன்னை
பிறவியும் அறவியும் பெற்றியின் உணர்ந்த
நறுமலர்க் கோதை எள்ளினை நகுதி
எள்ளினை போலும் இவ்வுரை கேட்டிங்கு
ஒள்ளிய துரையென உன்பிறப்பு உணர்த்துவை
"ஆங்குநிற் கொணர்ந்த அருந்தெய்வ மயக்க,
காம்பன தோளி கனமயக் குற்றனை"
என்றவ னுரைக்கும் இளங்கொடி நல்லாய்
'அன்று' என்று அவன்முன் அயர்ந்தொழி வாயலை
'தீவினை உறுதலும் செத்தோர் பிறத்தலும்
வாயே' என்று மயக்கொழி மடவாய்" -21/108-118

என்று துவதிகன் கூற்ருல் பூதவாதியோடு மணிமேகலை வாதிட்டு வெற்றி பெறுவதை முன்னரே நன்கு விளக்கிக் கூறியுமையின் பின் அவ்வளவு விளக்கமாக அதைக் கூற வில்லை. மேலும் பூதவாதியின் கொள்கையை வெட்டி வீழ்த்திஞலும் வேறு சமயங்கள் பற்றி ஒன்றும் மறுத்துப் பேசவில்லையாயினும் சாத்தனுர் ஒரே தொடரில் 'நன்றல வாயினும்' என்று காட்டிப் பிற சமயங்கள் நல்லன அல்ல என்றும் தன் பௌத்தமே மேலானது என்றும் சுட்டித் தன் கொள்கையை நிலைநாட்ட நினைக்கிருர். ஆயினும் மற்றவற்றில் மாறுகொள்ளவில்லை என்பதையும் சுட்டிக் காட்டு கிருர்.

இனி, சாத்தனுர் காட்டும் புத்த சமயக் கருத்தினைக் காண்போம். மணிமேகலை காலத்தில் தமிழ் நாட்டில் உலவிய பௌத்தம் ஹீனயானமே எனவும் மகாயானம் அன்று எனவும் பல அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், மயிலை சீனி. வேங்கடசாமி). இந்தச் சமய நெறிக்கு மூல நூல் செவி வழியாகவே நெடுங்காலம் பரவி வந்த பாலி மொழித் திரிபிடக நூலே என்பர். பௌத்த சமயத்துள் பல புத்தர்கள் உள்ளமையைச் சாத்தனுர்,

"இறந்த காலத்து எண்ணில்புத் தர்களும்
சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது" -30/14-15

என்று கூறியுள்ளனர். எனவே அச்சமத்துள் பல புத்தர்கள் வந்து தோன்றினுர்கள் என்ற கருத்தும் கிடைக்கின்றது. ஆயினும் யார் யார் எங்கெங்கே தோன்றினுர்கள் என்ற விளக்கம் யாண்டும் கிடைக்கவில்லை. கடைசியாக நாம் காணும் கௌதம புத்தரே புத்த சமயத்தின் மூலவவராகக் காணக் கிடைக்கின்ருர். எனவேதான் சாத்தனுர் உயிர்கள் பேரொளி பெற்று 'நிருவாணம்' உறுங்காலத்து, அக் கௌதமர் பிறந்த உத்தர மகதத்து ஆண் பிறப்புற்று நிற்கும் எனக் குறிப்பிடுகின்ருர்.

புத்த சமயத்து அடிப்படைக் கொள்கை அறமே. எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாப் பெருநிலையே யாண்டும் பேசப் பெறுகின்றது. சாத்தனுர் தம் நூல் முழுவதிலும் மன மொழி மெய்களால் வரும் குற்றங்களையெல்லாம் விளக்கி, அவற்றை நீக்கி உயிர் நலம் பேணும் உண்டி கொடுத்தல் முதலிய அறங்களை ஆற்ற வேண்டுமெனவே வற்புறுத்துவ தறிகிரேம். பேதைமை முதலாக வினையின் பயன் ஈருகப் பலப்பல வகையாகச் சொல்லப் படுகின்ற பன்னிரெண்டு தத்துவங்களையும் மணிமேகலையின் இறுதிக் காதையில் சாத்தனுர் விளக்கி (30/104-133) அவற்றினின்றும் விடுதலை பெறுநிலையினைக் காட்டித் தம் சமய உண்மையை நிறுவுகிருர். முன்பும்,

"பேதைமை செய்கை உணர்வே அருவுரு
வாயி லூறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பீ ராறும்
பிறந்தோ ரறியிற் பெரும்பே றறிகுவர்
அறியா ராயின் ஆழ்நர கறிகுவர்" -24/105-110

என்று அறவண அடிகள் அரசிக்குக் கூறுமுகத்தான் சாத்தனுர் காட்டுவர். எனவே தன் சமயநெறியை இந்த அடிப்படையில் விளக்கி இறுதியில் உலக துன்பங்கள் அனைத்துக்கும்,

"யாம்மேல் உரைத்த பொருள்கட் கெல்லாம்
காமம் வெகுளி மயக்கம் காரணம்" –30/252-253

என்று காட்டி, அவற்றின் நீங்கி ஞான ஒளி பெற்று வாழ்தலே சமயத்தின் முடிந்த முடிவு எனத்திட்டமாகக் காட்டி, 'பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற' வரலாற்றை முடிக்கின்ருர் சாத்தனுர்.

திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்தம் நூலின் முன்னுரையில் காட்டியவாறு[1] பிற்காலத்தில் நாகார்ச்சுன

1.Manimekalai in its historical settings.

ரால் போற்றப்பெற்ற பௌத்த சமயச் சூனியவாதம் சாத்தனூர் காலத்தில் தமிழ்நாட்டில் கால்கொள்ளவில்லை என்பது தேற்றம். இவ்வாதம் மகாயான மரபைச் சார்ந்து பின் வளர்ந்த ஒன்று எனக் கொள்ளவேண்டும். இந்த மரபும் தமிழர் நெறிக்கு மாறுபட்டதாகும். புத்தர் தம் பிடக நெறியிலும் (காதை 30) இத்தகைய நெறி பேசப்பெறவில்லை என்பதும் அறியக் கிடக்கின்றது. ஒருவேளை பின் அக் கொள்கையோடு பௌத்தம் தமிழ்நாட்டில் வளர நினைத்தமைதான் அதன் வீழ்ச்சிக்குக் காரணமோ என நினைக்க வேண்டியுள்ளது,

இனி. புத்த சமயத்து அடிப்படைகளாகிய மூன்று உண்மைகளையும் (புத்தம், தர்மம், சங்கம்) சாத்தனூர் தம்முடைய இறுதிக் காதைகளில் விளக்கிச் செல்லுகின்றூர். மேலும் உயிர்கள் மக்கள் கதி, தேவ கதி, பிரம கதி என்ற மூவகைப்பட்ட வேறு வேறு பிறவி நிலைகளில் அதனதன் வினைவழியே பிறக்கும் என்பதையும் வற்புறுத்துகின்றூர். அவ்வவ்விடத்தும் அவரவர் முன்னைப் பிறவியில் ஈட்டிய வினையின் பயன்களையே துய்ப்பர் எனக் காட்டுவர் சாத்தனூர். மாறுக விலங்கும் பேயுமாகித் தீவினையின் வலத்தால் அந்தப் பிறவிகளில் துன்பத்தை உயிர்கள் அடையும் நிலையையும் காட்டுகின்றூர்.

''மக்களுந் தேவரும் பிரமரும் நரகரும்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை என்றிரு வகையால்
சொல்லப்பட்ட கருவிற் சார்தலும்'' —30/57-60

என்றும்,

''சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கிச்
சீலம் தாங்கித் தானந் தலைநின்று
மேலென வகுத்த ஒருமூன்று திறத்துத்
தேவரும் மக்களும் பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பயின் உண்குவர்'' —30/77-81

என்றும் காட்டி, இருவேறு வகைப்பட்ட—புண்ணிய பாவங்களின் இடைப்பட்ட பிறவிகளைச் சுட்டுவர் சாத்தனார், இவை யாவும் பத்துவகைக் குற்றத்தினாலும், ஐவகைச் சீலத்தினாலும் அமைந்து பாவபுண்ணிய நெறிகளின் நின்று, உயிர்களைச் செலுத்தும் எனக் காட்டுவர். இவை அனைத்துமே மேன்மேலும் பிறத்தற்கு ஏதுகள் எனவே காட்டிப் பிறவாப் பெருநெறி பெற்று இறைநிலையுறுதற்கு அடிப்படை இவை அனைத்தையும் துறத்தலே என்றும், அனைத்துக்கும் காரணமாகிய காமம் வெகுளி மயக்கம் இம்மூன்றையும் கட்டறுத்துப் பற்றும் செற்றமும் முற்றும் நீங்கப் பெற்று, மயக்கம் கடிந்து மனத்திருள் நீங்கப் பெறுதலே என்றும் பிறவாப் பெருநெறியில்—ஞான ஒளியிற் றிகழும் வழியென்றும் காட்டிச் சாத்தனார் தம் நூலை முடிக்கிறார். நாமும் இந்த அளவில் அவர் காட்டிய சமய நெறி பற்றி நிறுத்தி,இட்டபணியினையும் முடிக்க முயல்வோமாக!

இவ்வாறாகச் சாத்தனார் அக்காலத்திய தமிழ்நாட்டு நிலையறிந்து பல்வேறு மாறுபட்ட கொள்கைகள் புகத் தொடங்கிய காலத்தில்,தன்சமயக் கொள்கையைப் பரப்ப வேண்டுமென்ற முயற்சியில் மணிமேகலையைநமக்குத் தந்துள்ளார். எனினும் வெறும் சமய உண்மையை மட்டும் கூறாது தமிழ்நாட்டிலே பிறந்த ஒரு பெருஞ் செல்வியைத் தலைவியாகக் கொண்டே,மக்கள் வாழ்வின் அறங்களையே தம் சமய நெறிகளாக மாற்றி அவற்றினைப் போற்றிய காரணத்தாலும், இலக்கிய வளம் செறியப் பாடினமையாலும் மணிமேகலை இன்றளவும் நம்மிடை வாழ்கின்றது. தமிழ்நாட்டுப் பெண்மைக்கே ஓர் ஒளிவிளக்காகவன்றோ மணிமேகலை விளங்குகிறாள்! 'மணிமேகலை, காப்பியத்தின் தலைவியாக மட்டும் அல்லாமல் நாட்டு வரலாற்றின் பெருமைக்குரிய ஒரு பெண் பிறவியாகவும் பலருடைய உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டாள்'' என்று டாக்டர் மு. வ. அவர்கள் தம் தமிழ் இலக்கிய வர

லாற்றில்[1] கூறியபடி மணிமேகலை என்னும் தமிழ்ச் செல்வியை வாழவைக்கச் சாத்தனார் உதவியதோடு, அதே பாத்திரத்தின் பெருமையால் தன் காப்பியமும் என்றும் வாழ வழி செய்து கொண்டார். புத்த சமயம் பற்றியே, பாலி மொழியன்றிப் பிற எந்த மொழியிலும் அச்சமய நெறி எழுதப்படாததற்கு முன்பு, முதல் முதல் தமிழ்மொழியிலேயே சாத்தனார் தம் காவியத்தை எழுதினார் என்று திரு. கனகசபைப் பிள்ளை அவர்கள் எழுதியாங்கு,[2] அந்த அடிப்படையிலும் சாத்தனாரும் மணிமேகலையும் என்றும் வாழ்வதறிகிறோம். எவ்வாறாயினும் இலக்கியத்திலும் சமயத்திலும் அந்த இரண்டாம் நூற்றாண்டுக்கு இடையில் பெரும் புரட்சி செய்து இரண்டையும் வாழவைக்க நினைந்த சாத்தனார் தம் காப்பியத்தை இலக்கியமாகஎழுதினார் எனக் கொள்வதுடன், அதில் முழு வெற்றிபெற்றவர், சமய நெறியில் வெற்றி பெற்றாரா என்பதில் ஐயமுடையதெனவும் கொள்ளவேண்டியுள்ளது. நாம் இவற்றின் எல்லையெல்லாம் கடந்து, அன்னைத் தமிழுக்கு அழகிய அணியாகத் தம் காப்பியத்தைச் செய்து, அதன் வழி அக்காலத்துத் தமிழகத்தை உலகுக்கு உணர்த்தித் தமிழையும் தமிழ்நாட்டையும் போற்றி, வளர்த்து, வாழவைத்த சாத்தனாரின் தொண்டினை என்றென்றும் போற்றக் கடமைபட்டிருக்கிறோம். என்றும் நிலைத்து வாழும் பெரும் காப்பியம் செய்த இப்புலவர் பெருமானாகிய கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்றென்றும் வாழ்வாரெனவும் அவர் இலக்கியம் மக்கள் வாழ்வுக்கு ஒளி விளக்காக விளங்கி வழிகாட்டுமெனவும் நம்பி என் பணியை முடிக்கின்றேன். வாழ்க சாத்தனாரின் பெருந்தொண்டு! வளர்க மணிமேகலையின் அறமும் நலமும்!

---

1. சாகித்திய அகாடமி பதிப்பு, பக். 91

2. The Great Twin Epics ... 39.